

**04** ஜனாதிபதியின் நல்லிணக்க யோசனை சாத்தியமாகுமா?



நேர்காணல்: சட்டத்தரணி லால் விஜேநாயக்க **07**

தற்போதைய அரசியலமைப்பு மக்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்கவில்லை

இன்ஷா அல்லாஹ்
அடுத்த மீள்பார்வை இதழ்
22 ஏப்ரல் 2016 இல்
வெளிவரும்




மீள்பார்வை
මීල්පාර්වෙ
Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
www.meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 340 • 01 ஏப்ரல் 2016 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் ஆகிர் 1437 • விலை 40.00




# முஸ்லிம் கட்சிகளில் இருந்து மக்கள் வெளியேற்றம்



சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை மாநாட்டை அடுத்து முஸ்லிம் காங்கிரஸின் போராளிகளுக்கு மத்தியில் அதிருப்தி வலுத்து வருகின்றது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் அதனுடைய செயலாளர் ஹசன் அலிக்கும் இடையிலான முறுகலைத் தீர்ப்பதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து இரு தரப்பினரையும் சமாதானப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஏற்கனவே பலரும் அதிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சிகளை ஆரம்பித்துச் செயற்பட்டு வருகின்றனர். பேரியல் அஸ்ரப், ஹிஸ்புல்லாஹ், அதாவுல்லா, ரிஷாத் பதியுதீன் என நீளும் பட்டியலில் ஹஸன் அலியும் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்கான போராட்டத்துக்காக உருவாக்கப்பட்ட மு.கா. தற்போது பதவிப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையிட்டு (பக்.14)



## புதிய யாப்பு தொடர்பான கருத்துக் கணிப்பு முடிந்தது 2017 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்



நாடு முழுவதும் சென்று மக்களின் கருத்துக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஏற்கனவே முடிவடைந்த நிலையில் அரசியல் தலைவர்கள், மத குருமார்கள் உட்பட சிவில் அமைப்புகளின் கருத்துக்களை பெறுவதும் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இதன்படி புதிய அரசியல் யாப்பு சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமர், எதிர் கட்சித் தலைவர் ஆகியோரின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் இரண்டு மாகாண முதலமைச்சர்களின் கருத்துக்கள் (பக்.14)

## இரண்டு மாதத்துக்குள் புதிய கல்வித் திட்டம்



மே மாதத்துக்கு முன்னர் இலங்கையில் புதிய கல்வித் திட்டம் தயாரிக்கப்பட்டுவிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 21 ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான 50 நாடுகளுள் ஒன்றாக மாறுகின்ற இலக்குடன் நாங்கள் பயணிக்க வேண்டும். அடுத்த பத்து வருடத்துக்குள் படிப்படியாக அனைத்துப் பாடசாலைகளிலும் ஆங்கில மொழி கிடைக்க வேண்டும். (பக்.14)

## சகல மாவட்டங்களிலும் மீண்டும் எல்லை மீள்நிர்ணயம்



எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக மக்களது முறைப்பாடுகள் கோரப்பட்டிருந்த நிலையில், உத்தேச வரைபிலுள்ள 4833 வட்டாரங்களில் 1885 வட்டாரங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள தாகவும் இதனால் மீள்நிர்ணயம் செய்யப்பட்ட அனைத்து மாவட்டங்களதும் எல்லைகள் மீளவும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

வட்டாரங்களின் எல்லையும் இணைப்பும், வட்டாரங்களின் பெயர், இலக்கங்களின் மாற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இனங்களின், குறிப்பாக தமிழ் முஸ்லிம் (பக்.14)

## சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் ஸ்ரீ.சு.க.விலிருந்து விலகத் தீர்மானம்

பண்டாரநாயக்க அணிக்கும் மஹிந்த அணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பலப் பரீட்சையினால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு தோன்றியுள்ளமையை அடுத்து சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சியில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் என்பதற்காக குற்றவாளிகள், கள்வர்கள், கொலையாளிகள், மோசடிக்காரர்கள், கசிப்பு வியாபாரிகள் போன்றவர்களையெல்லாம் நாங்கள் பாதுகாக்க வேண்டுமா? அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும். எந்தக் கட்சியை வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளட்டும். கடந்த 09 வருடங்களாக ஆட்சி செய்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சி அல்ல. (பக்.14)

## அரசியலமைப்பு திருத்த யோசனைகளில் முஸ்லிம் தரப்பும் ஆர்வத்துடன் பங்கேற்பு

புதிய அரசியல் யாப்பு எவ்வாறு அமைய வேண்டுமென்பது குறித்து மக்கள் கருத்துகளை திரட்டும் குழுவினர் தமது பணியை நேற்றுடன் முடித்துக் கொண்டுள்ள நிலையில் முஸ்லிம் சிவில் நிறுவனங்களும் ஜமாஅத்துக்களும் புதிய அரசியல் யாப்பு தொடர்பான தமது யோசனைகளை முன் வைத்திருந்தன. கல்குடா மஜ்லிஸ் அஷ்ஷூறா, கிண்ணியா மஜ்லிஸுஷ் ஷூரா, சம்மாந்துறை அரசியல் சமூக ஆய்வு மையம், மாத்தளை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், கண்டி ஃபோரம் (பக்.14)



அரசியலமைப்பு மாற்றம் குறித்து ஜமாஅதுஸ் ஸலாமாவின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு செயலகத்தில் வைத்து அதன் தலைவர் லால் விஜயநாயக்கவிடம் ஜமாஅதுஸ் ஸலாமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் ரயீஸுல் இஸ்லாம் அவர்களினால் கையளிக்கப்பட்டது. ஸலாமாவின் உறுப்பினர்களான பொறியியலாளர் நியாஸ் மொஹிதீன், ஆசிரியர் நிஹாஸ், சகோதரர் பாஹிம் பைரூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவக்குல் கர்மான் : சமாதானத்தின் குத்துவிளக்கு

சமூக வலைதளங்களில் இவ்வாரம் 'தவக்குல் கர்மான்' வாரமாகவே அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. இலங்கை வருகை தந்திருந்த நோபல் பரிசுபெற்ற முதல் இளம் அராபிய பெண்மணி இவர். கர்மான் பங்குபற்றிய நிகழ்வுகளில் குறிப்பாக, களனி பல்கலைக்கழகத்தில் இவர் ஏற்றிய குத்து விளக்கு சமாச்சாரம் பேசுபொருளாக்கப்பட்டிருந்தது.

தவக்குல் கர்மான் என்பது இன்னும் நிறைவுறாத பல பாகங்களைக் கொண்ட பெரும் ஒரு பாடப் புத்தகம். புத்தகத்தில் உள்ள காட்சிகள் தான் மங்கள விளக்கு மற்றும் அது போன்றவை. அதில் நிறைய பாடங்கள் இருக்கின்றன. ( சிறு பிள்ளைகள் காட்சிகளைப் பார்த்து சண்டை போட்டுக் கொள்கிறார்கள்)

அடக்கம் என்பது பெண்ணிடம் இருக்கவேண்டிய குணவியல்புகளின் ஒரு பகுதியே! வீரமும் போராட்ட குணமும் அவளிடம் இருக்க வேண்டிய மற்றைய முக்கியமான பகுதிகளாகும்.

அடக்கம் என்ற அரைவாசியுடன் ஒரு பெண் வீட்டில் முடக்கப்பட வேண்டியவளெனில் உம்மு அம்மார் (ரழி) போன்ற வீரத் தியாகிகள் உஹதுக் களம் கண்டிருக்க மாட்டார்கள்

# வாழ்க தவக்குல் கர்மான்

- பாத்திமா அம்றா

தமது அறிவின் அளவிற்கேற்ப, மொழிப் புலமைக்கேற்ப, சிந்தனை வரட்சிக்கேற்ப சிலர் பதிவுகளை பதிவதற்கு முகநூல் இடம்கொடுப்பதில் தவறில்லை. சிலரை கொதித்தெழவும், இன்னும் சிலரின் அடிப்படைவாத எண்ணங்களின் வெற்றியைக் கொண்டாடவும் இது களம் அமைத்துக் கொடுத்திருந்தது.

- அனஸ் அப்பாஸ்

## தவக்குல் கர்மான் எப்படி போர்க்கள நாயகி ஆனார்?

இவர் பற்றிய சுவாரஸ்யங்கள் ஏராளம் உண்டு. தவக்குல் கர்மான் Tawakul Karman, ஓர் யெமன் பெண் அரசியல் போராளி ஆவார். கர்மான் யெனின் முதன்மை எதிர்கட்சியான அல்-இசுலாவின் மூத்த அங்கத்தினராவார். இவர் 2005ஆம் ஆண்டு ''சங்கிலிகள் இல்லாத பெண் இதழியலாளர்கள்'' என்ற அமைப்பை நிறுவி அதன் தலைவராக மனித உரிமை மீறல்களை கண்டித்து வருகிறார். கர்மான் பிறந்தது யெமன் நாட்டில். 2011 இல் 'அலி அப்துல்லா சாலிஹ்' அரசுக்கு எதிரான பேரணிக்கு மாணவர்களை ஒருங்கிணைத்து எதிர்த்ததும் அதனைத் தொடர்ந்து அவர் சிறைசென்றும் கூட, விடுதலையான அடுத்த நாளே மீண்டும் பெரும் போராட்டத்தை நிகழ்த்தியதும் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. இன்று இருக்கும் இந்த இடத்திற்கு அவர் அத்தனை எளிதில் வந்துவிடவில்லை என்பதைக் காணும்போது நம் ஒவ்வொருவருக்கும் பிரமிப்பு ஏற்படுவது உறுதி.

இஸ்லாமிய நாட்டில் பெண்கள் வீதிக்கு வந்து போராடியது ஏன்? இதற்கான விடை தெரிய வேண்டுமானால் யெமனின் அரசியல் வரலாற்றை கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். இவர் செய்வது சரியா பிழையா ? இவர் சுவர்க் கவாதியா நரகவாதியா? இதனை இறைவ தீர்மானிக்கட்டும்.

- ஹைதர் அலி

அப்பாடா , ஒரு மாதிரி தவக்குல் கர்மானை வழிகேடராக்கி, யூதனாக்கி கடைசியாக நரகவாதியாக்கி ஜஹன்னத்தில் அவருக்கு இடமொதுக்கி எமது மேதாவித்தனத்தைக் காட்டியாச்சி. பின்னே என்ன? நாம எப்படி பேமஸா குவது? படித்து, பட்டம் பெற்று, பெரும்களச் செயற்பாட்டாளராகி, சமூகப் பணி செய்து எம்மால் பேம ஸாக முடியுமா? அதுக்கு லாயக்கான கூட்டமா நாம்? எமக்கு குறுக்கு வழியில் பேமஸாக உள்ள ஒரே வழி சாதனை படைத்தவர்களை விமர்சித்து கொஞ்சம் அல்லக்கைகளின் லைக்கு களைப் பெறுவது தான். - ரஸ்மி,காலி

தங்களது பாவங்களை மரணத்துக்கு முன்னர் போக்கிக் கொள்ள விரும்புகின்றவர்கள் இலங்கைக்கு ஒரு தடவை விஸிட் பண்ணுமாறு சர்வதேச முஸ்லிம் சமூகத்திடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கிறேன்.

நீங்கள் இங்கு வந்து இறங்கி திரும்பி விமானமேறி உங்களிடம் சென்று சேர்வதற்கு முன்னர் உங்களை முழுமையாக கழுவி சுத்தப் படுத்தி விடும் தரம் வாய்ந்த மனிதர்கள் இங்கு தாராளமாகவே இருக்கின்றார்கள்.

வாருங்கள் பயனடையுங்கள்.

- அபான் ஹலீம்

தவக்குல் கர்மான் ஜனநாயக தர்க்கபுலத்தில் தயார் செய்யப்பட்டு நிரல் படுத்தப்பட்ட ஒரு வெறும் அரசியல் வாதி. ரஊப் ஹகீம் முதல் ஏனைய பல அரசியல் வாதிகளை எவ்வாறு இஸ்லாமிய வட்டத்தில் நின்று நோக்க முடியாதோ அதே போலதான் இந்த தவக்குல் கர்மானும் இஸ்லாமிய வட்டத்தில் நின்று நோக்க தகுதி யற்றவர்.

பெனாஸிர் பூட்டோ முதல் பேரியல் அஷ்ரப் வரை எல்லோரும் கிட்டத் தட்ட இதே ரகம்தான்.

-முஹம்மத் , வெலிகம.




## குத்து விளக்கால் குத்திக் கொல்லப்பார்க்கிறது மறுகூட்டம்

கர்மானை ' பெண்களும் சுத்தமும்' / 'நபி வழியில் ஒரு பெண் தொழுவது எப்படி' இப்படி ஏதாவது ஒரு தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்தால் கர்மான் உன் போஸ்டரை அவர்கள் ஊரெல்லாம் ஒட்டிவைத்து கொண்டாடியிருப்பர்.

- இஸ்மத் அலி

தவக்குல் கர்மான் வந்த விமானம் சென்றுவிட்டது ஆனால் நமது பேஸ்புக் விமானிகள் அவரை வைத்து இன்னும் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆயிஷா சித்திகாவின் பட்டமளிப்பு விழாவில் குத்துவிளக்கோ, கண்டிய நடனமோ இருக்கவில்லை. ஒருநாள் கழித்து களனி பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு நிகழ்வில் அதிதியாக தவக்குல் கர்மான் அழைக்கப்படுகின்றார்.

களனி பல்கலைக்கழகம் முழுக்க முழுக்க பெரும்பான்மையினர் கையில் இருக்கும் ஒரு பல்கலைக்கழகம், அங்கே நடக்கும். ஒரு நிகழ்வு கிராஅத் ஓதி ஆரம்பிக் கப்படவேண்டும் என்று எம்மால் எதிர் பார்க்க முடியாது. அவர்களது கலாச்சார முறைப்படிதான் அவர்களது அனைத்து நிகழ்வுகளும் இருக்கும்.

இந்த பதிவுகளையும், பத்வாக்களையும் கர்மானுக்கு வாசிக்கக் கிடைத்தால் நோபல் பரிசை இலங்கையில் வைத்துவிட்டு குத்துவிளக்கை துருக்கிக்கு கொண்டு போயிருப்பார்.

- இன்ஸாப்

கனவுலையும் கர்மான் வருமோன்னு பயமா இருக்கு..... விடியரதுக்குள்ள காபிராக்கிருவாங்களே.

- பஸீல் பரீட்

# கௌரவிப்பு









OMSED அமைப்பு நடாத்தி வருகின்ற Scholarship Project இன் கௌரவிப்பு நிகழ்வொன்று கடந்த 22 மார்ச் மாதம் கொழும்பு ஸலாமா தலைமையகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கடந்த இரண்டு தசாப்தங்களாக OMSED Scholarship நிகழ்ச்சிக்கு உதவி வருகின்ற அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக Mercy Lanka நிறுவனத்தின் பணிப்பாளர் உஸ்தாத் ஹஸன் நஸ்ர் அவர்களும் கௌரவ அதிதிகளாக கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஜமாஅதுஸ் ஸலாமாவின் பொதுச் செயலாளர் அஷ். ரயீசுல் இஸ்லாம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் விசேடசொற்பொழிவை ஜாமிஆ நளீமிய்யா கலா பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் மற்றும் தேசிய ஷூறா சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினருமான அஷ். எஸ். எச். எம் பளீல் அவர்கள் நிகழ்த்தினார்.


## கணித வகுப்புக்கள்

க.பொ.த சாதாரண தரப்பரீட்சை (2016)

* மாதிரி வினாத்தாள் வகுப்புக்கள்
* கடந்த கால வினாத்தாள் வகுப்புக்கள்
* பிரத்தியேக வகுப்புக்கள்
* குழு வகுப்புக்கள்
* மீட்டல் வகுப்புக்கள்

தொடர்புகளுக்கு: S. ரினா 0776545336
(18 வருட அனுபவம் பெற்றவர்) 0757405866

## கண்டி மடவளையில் பெண்களுக்கான

O/L பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடைய தவறிய மாணவிகளுக்கு

A/L 2018 PROJECT தமிழ் மொழி மூலம்

வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகள்




பாதுகாப்பான வதிவிட வசதி

- G.C.E O/L சித்திபெற தவறிய மாணவிகளையும் தகைமைக்கு உட்படுத்தி A/L பரீட்சைக்கு தோற்ற வசதி செய்யப்படும்.
- O/L இல் Commerce (வர்த்தகம்) பாடத்தை தெரிவு செய்யாதவர்களும் A/L வர்த்தக பிரிவை தொடர விரும்பின் விஷேட பயிற்சி
- ஒவ்வொரு பாடத்திற்கும் கண்டி,கொழும்பு,கல்முனை,யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்
- நியாயமான கட்டணம்

இம் மாணவிகளுக்கு 2 வருடத்திற்குள் மேலதிகமாக (வாழ்வுத் தகைமை மற்றும் தொழில் தகைமை) பயிற்சிநெறிகள் இலவசமாக வழங்கப்படும்

★ தஜ்வீத் - குர்ஆனை ஆரம்பத்தில் இருந்து தஜ்வீத் முறைப்படி ஓத பயிற்சி
★ Dress Making (NVQ level) ★ Cookery (NVQ level) ★ Sinhala ★ English
★ Life Skill , Councelling ★ Self Employment Courses இவற்றுடன் மேலும் சில...

2015 இல் O/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் அதற்கு முன்னர் (2014) தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Hotline: 0777 78 52 40

50 DAYS Full Time

Specially Designed

Residential SPOKEN ENGLISH CAMP

2 Diploma Certificates with ISO

No Writing ! Only Spoken with OUT DOOR ACTIVITIES

Commencing Date 5th MAY

Hotline : 0777 877 966

EMERRAD Ladies Academy

36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY

M: 0777 71 71 29 T: 081 20 50 600


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெல்லத் துளிர்க்கும் மனிதப் பயங்கரவாதம்?

**பீ.எம். முஜீபுர் ரஹ்மான்**

இன்று உலகையே உலுக்கிக் கொண்டிருப்பது பயங்கரவாதமாகும். ஒரு தேசத்தின் தலைவரிலிருந்து அந்தத் தேசத்தின் அடிமட்டத்துக் குடிமகன் வரை இன்று உலகளாவிய வகையில் 'பயங்கரவாதம்' என்ற சொல் உச்சரிக்கப்பட்டு வருகின்றது. இதன் தாக்கம் உலகக் குடிமக்கள் ஒவ்வொருவரின் நாளாந்த வாழ்விலும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் வியாபித்து நிற்கின்றது.

இவற்றை இரண்டு விதமாக நோக்கலாம். முதலாவது, செப்டம்பர் 11 தாக்குதல் அச்சமூட்டுகிற கொடுஞ் செயல் மட்டுமல்லாமல், வரலாற்றில் பேரழிவை ஏற்படுத்திய நிகழ்வு அது. மனித உயிர்களை உடனடியாகப் பலிகொண்ட குற்றம். இரண்டாவது, நமக்கெதிரானதாகவோ அல்லது பிறருக்கெதிரானதாகவோ இருக்கும் குற்றங்கள்.

இந்நிலையில், இலங்கையில் இப்போது என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றது? இந்நிகழ்வுகள் நமக்கு எவற்றை உணர்த்துகின்றன? அவை குறித்து நாம் என்ன செய்ய முடியும்?

### என்ன நடந்து கொண்டிருக்கிறது?

உலகில், 'முப்பது முதல் நாற்பது லட்சம் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்' இப்படி லட்சக்கணக்கான மக்கள் மீது பட்டினியைத் திணிக்கிற போக்கை எதிர்த்து எவ்விதமான எதிர்வினையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இவற்றின் பின்னணியில் இலங்கையில் நடப்பவற்றை கவனித்துப் பார்த்தால் ஒருவிதமான, மௌனப் படுகொலை நடப்பது போல் தோன்றுகிறது. அதாவது, மின்சாரத் துண்டிப்பின் மூலம், மக்களின் நாளாந்த செயற்பாடுகளும், அரச, நிருவாக செயற்பாடுகளும் சீரழிக்கப்படுகிறது. இவ்வாறு நாட்டையும் மக்களையும் சீரழிக்கும் அனைத்து செயற்பாடுகளும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

இச்செயற்பாடுகள் ஆயுதப் பயங்கரவாத, மாபியா கும்பலின் செயலை விட மிகக் கொடுமையானது. எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தண்டிப்பது அரசினது கடமையாகும்.

### மனிதப் பயங்கரவாதம்

இயற்கையின் சீற்றத்தால், காலநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம், கடுமையான வெயில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு, பாரிய தண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களில் பெரும்பாலானோர் பல நோய்களுக்கு உள்ளாகிறார்கள். இவ்வியற்கைத் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, மக்கள் குளிர்ந்த நீர் மற்றும் மின்சாரக் காற்றாடிகள் மூலம் காற்றைப் பெற்று ஆறுதல் அடைகிறார்கள். ஆனால், அவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாமல் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. எனவே தான், இச்செயலை மனிதாபிமானத்திற்கு எதிரான மிகப் பெரிய மனிதப் பயங்கரவாதமாக, துரோகமாகப் பார்க்க வேண்டியுள்ளது.

வருடம் தோறும் மார்ச் மாத நடுப்பகுதி நெருங்கியதும் உஷ்ணம் ஆரம்பமாகிவிடும். இந்த் வெப்பநிலை படிப்படியாக உயர்ந்து சென்று ஏப்ரல் மாதத்தில் உச்சத்தைத் தொட்டுவிடும். மே மாதம் தொடங்கும் வரை அதிகரித்த உஷ்ணத்தையும், அதன் விளைவினால் ஏற்படுகின்ற உபாதைகளையும் மக்கள் எவ்வாறேனும் தாங்கித்தான் ஆக வேண்டும்.

இந்நிலையில், அண்மையில் இந்நாடு தொடர்ச்சியாக இருளில் மூழ்கியது. இம்மின் துண்டிப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக அரசாங்கத்தின் கடும் பணிப்புரையின் பேரில் தீவிரமான விசாரணைகள் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், தற்போதுள்ள உஷ்ண காலப் பகுதியில் மின் துண்டிப்பை ஏற்படுத்தி, மக்களை அவஸ்தைக்கு உள்ளாக்குவதன் மூலம் அரசாங்கத்தின் மீது வெறுப்பை உண்டாக்குவதற்கு விஷம சக்திகள் முற்பட்டிருக்கலாமெனச் சந்தேகிப்பதற்கு இடமிருக்கிறது.

இல்லையேல் நாட்டில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைப்பதன் மூலம் கொந்தளிப்பான சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கு அரசுக்கு விரோதமான சக்திகள் முற்படுவதாகவும் சந்தேகம் நிலவுகிறது.



எவ்வாறாயினும் இதுபோன்ற நாசகார செயல்களுக்கு, அரசியல் காரணங்களைத் தவிர வேறெந்த நோக்கமும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதென்பது நாட்டின் சிவில் நிர்வாகத்தை முற்றாகவே முடக்கி விடுமென்பது தெரியாததொன்றல்ல.

ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயத்தில் தீவிர கவனமெடுத்திருப்பதைக் காண முடிகிறது. காரணத்தைக் கண்டறிவதில் வெளிநாட்டு உதவியை நாடுவதற்கும் அரசாங்கம் தயாராகவுள்ளது.

அரசாங்கத்தின் மீது மக்களை வெறுப்புக் கொள்ளச் செய்வதே அரச விரோத சக்திகளின் இப்போதைய குறிக்கோளாக இருப்பதைக் காண முடிகிறது.

இந்நிலையில் தற்போது உருவாகியுள்ள மின் துண்டிப்புப் பிரச்சினையிலும் அரச விரோத சக்திகளின் பின்புலம் உள்ளதற்கு இடமுண்டு.

உண்மையில் நாசகார வேலைதான் எனக் கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

இன்றைய ஜனாதிபதி முழு நாட்டினதும் அதிகப் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கமும் கூடுதல் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சித் தலைமையை நெருக்கடிக்குள்ளாக்கவோ, மக்களை 'அவஸ்தைக்குள்ளாக்கவோ எவரும் முற்படுவதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாதென்பதை அரசுக்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

### இயற்கையின் சீற்றமும் மக்கள் பாதுகாப்பும்

கடந்த சுமார் கால் நூற்றாண்டு காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் உஷ்ணமான காலநிலை இப்போது கூடுதலாக அதிகரித்திருக்கிறது. வெப்பத்தைச் சகிக்க முடியாமல் அல்லலுறுவது ஒருபுறமிருக்க, உஷ்ணத்துக்குரிய வியாதிகளும் மக்களைச்சங்கடப்படுத்துகின்றன.

இவ்வியாதிகளுக்குச் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியர்கள் கூறுகின்றனர். அத்துடன் வரட்சியையும் வெப்பத்தையும் சமாளிப்பதற்கு ஏதுவாக வைத்தியர்கள் அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர்.

கூடுதல் நீர் அருந்துவது. பழங்கள். கீரை வகைகளை அதிகம் உண்பது. இயற்கையான பழங்களை அருந்துவது. கடும் வெயிலில் செல்வதைத் தவிர்த்தல் போன்ற அறிவுரைகளையெல்லாம் வைத்தியர்கள் கூறுகின்றனர். உஷ்ண காலத்துக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடந்து கொள்வது அவசியம்.

இல்லையேல் கூடுதல் உஷ்ணத்தின் பக்கவிளைவுகளால் நாம் உடல் பாதிப்புக்கு ஆளாக வேண்டிய ஆபத்து ஏற்படலாம்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு மக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம். சிறுவர்கள் விபரம் அறியாதவர்களென்பதால் அவர்கள் விடயத்தில் பெற்றோர் அவதானமாக இருப்பது அவசியம்.

அதேவேளை நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. நாட்டில் வரட்சி தொடருமானால் நீர் விநியோகத்திலும் துண்டிப்பு ஏற்படக் கூடிய அபாயம் எதிர்நோக்கப்படுகிறது.

மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றின் பாவனையில் மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். இல்லையேல் இவ்விரண்டிலும் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாமல் போய் விடலாம்.

நாட்டில் வரட்சி ஏற்பட்டதற்கும் இன்றைய அரசாங்கமே காரணமென எதிரணியினர் மக்களுக்குக் கூறாமல் விடப் போவதில்லை. நீர் விநியோகத் துண்டிப்புக்கும் அவர்கள் அரசு மீதுதான் பழி போடுவார்கள். நாட்டில் குழப்பமான நிலைமையொன்று உருவாக வேண்டுமென்பதே எதிரணியினரின் இன்றைய எதிர்பார்ப்பாக உள்ளது.

எனவே மின்துண்டிப்பு. நீர் விநியோகத் துண்டிப்பு என்பதெல்லாம் அரசாங்கத்தின் கைகளில் இல்லை. அவையெல்லாம் இயற்கை அளிக்கின்ற துன்பங்கள். இவற்றை அரசியலாக்குவதற்கு எதிரணியினர் முற்படுவதை மக்கள் புரிந்து கொள்வது அவசியம்.

இன்றைய இச்சூழ்நிலையின் உண்மை நிலைமையை அறிந்து கொள்ள முடியாத குழப்பகரமான நிலைமையொன்று மக்கள் மத்தியில் நிலவுகிறது.

எனவே விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு அரசாங்கம் உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவது அவசியம்.


**Mercy Vocational Training Centre - Madurankuliya**

**தொழிற் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்தல் - 2016/2017**

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக் கல்விஆணைக்குழுவில் ( **Tertiary and Vocational Education Commission , TVEC P13 / 0039** ) பதிவுசெய்யப்பட்ட( **NVQ Level 3,4** ) அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும்.

**G.C.E. O/L , A/L பரீட்சைகுத் தோற்றிய மாணவர்களே!**

ஒரு வருட காலத்துக்குள் தொழிற் தகைமை தரம்- 04 (NVQ level -04) பெற்று போட்டி மிக்க சர்வதேச தொழிற் சந்தையில் உங்களையும் தகுதியுள்ளவராக மாற்றிக் கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு...

எமது பாடநெறிகளாவன :

**CERTIFICATE COURSES**

- **Electrical (Power) House, Industrial, 3 phases – wiring. (Level – 04)**
- **Welding –(Arc, Gas, Spot welding and fabricating) (Level – 03)**
- **Plumbing – Domestic &Industrial, Water Pump Repairing (Level – 04)**
- **Refrigeration & Air Conditioning**

**(Refrigerator, Window A/C, split A/C) (Level – 03)**

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் யாவும்
**ஒரு வருடகால பயிற்சி நெறிகளாகும்.**

**வயதெல்லை:**
**20.03.2016 அன்று 17 வயதிற்கும் 20 வயதிற்கும் உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்ப முடிவு திகதி : 20 ஏப்ரல் 2016.**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :**
**சுயவிலாசமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட காகித உறையுடன் சேர்த்து.**
**"Director, P.O Box 1, Madurankuliya "**என்ற விலாசத்துக்கு
**பதிவுத் தபால் மூலம்** அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
Tel: 032-2268401 / 2, Mob : 0777640680 , 0775716717



**MINDRICH**
Enrichment of Excellence

**COLLEGE OF MANAGEMENT STUDIES**
**كلية الدراسات الإدارية**
**முகாமைத்துவக் கற்கைகளுக்கான கல்லூரி**




குர்ஆனிய கற்கையுடன் A/L மற்றும் aat பரீட்சைகளை ஆங்கில மொழி மூலம் (By the age of 19) உயர்தரச்சித்திகளுடன் பூர்த்தி செய்வதற்கு தமிழ் மொழி மூலம் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் வெற்றிகண்ட ஒரு முன்னோடி நிறுவனம்.

**கற்கைநெறியின் உள்ளடக்கம் - English Medium**

- Tharbiyya
- Diploma in Thafseer
- Islamic Finance Qualification
- A/L Commerce - 2018
- AAT (Level 1,2 and 3)
- Information Management
- Games & Physical Fitness

**வதிவிட வசதியுடன் கூடிய கற்கைநெறி - 33 மாதங்கள்**

TOWARDS TEENAGE ACHIEVERS

**தகைமைகள் :**
- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி மூலம் சித்தியடைந்திருத்தல்.
- க.பொ.த உயர் தர பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையை பெற்றிருத்தல் (திறமைச் சித்தி அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்).
- 31.01.2016 இல் 17 வயதிற்கு உட்பட்ட ஆண் மாணவராக இருத்தல்.

**கல்விக்கான கட்டணம் இலவசம்**
உணவு, தங்குமிட வசதிக்கான கட்டணம் மாதம் ரூபா 10,000 மட்டுமே

விண்ணப்ப முடிவுத் திகதி - 22.04.2016
பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள
TEXT YOUR NAME, ADDRESS AND CONTACT NUMBER TO 0777 23 1234

**No. 49, Second Lane, Dehiwala. |T: 0115 23 1234 / 0777 23 1234**
**infomindrich@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, 8A Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# மக்களின் ஆணை சக்தி வாய்ந்தது

நாட்டு மக்களே தலைவர்களை உருவாக்குகிறார்கள். தங்களது அபிலாஷைகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக அவர்களே தமது தலைவர்களை தெரிவு செய்கிறார்கள். தலைமைக்கான தெரிவு மக்களின் முன்னால் பரந்திருக்கிறது. இந்த நிலையில் தமது தேவைகளை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதி அளிப்பவர்களில், மக்கள் நம்பி ஏற்றுக் கொண்டவர்களை அவர்கள் தமது தலைவராக தேர்ந்தெடுக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை தாம் தேர்ந்தெடுத்த தலைவர், தமது தேவைகளை நிறைவேற்றாதபோது, தமது ஆணைக்கு செவி சாய்க்காமல் வழிமாறிச் செல்லும்போது அவர்களைத் தட்டிக் கேட்பதற்கான ஒழுங்குகள், அதற்கு மாற்றீடுகளைத் தேடும் வழிமுறைகள் அரிதாகவே காணப்படுகின்றன. அடுத்த ஐந்தாறு வருடங்களுக்கு தம்மை அசைக்கவும் முடியாது, அசைக்கவும் மாட்டார்கள் இந்த மக்கள் என்ற தெம்பில் ஆட்சியில் அமர்த்தப்பட்டவர்களும் மக்களது ஆணையை வசதியாக மறந்து செயற்படுகிறார்கள்.

நீண்ட காலமாக அடக்குமுறைக்கும் அநியாயத்துக்கும் உட்பட்டிருந்த இலங்கை மக்கள், ஊழல் வீண்விரயத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான தமது வேணவாவை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே புதிய தலைவரை தேர்ந்தெடுத்தார்கள். ஆட்சியாளர்களின் ஊழலும் வீண்விரயமும் தவிர்க்கப்பட்டால் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்க முடியும் என்றும், அச்சமின்றி நிம்மதியாக வாழக் கூடிய சூழல் பெற்றுத் தரப்படும் என்றும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை மக்கள் நம்பினார்கள்.

இன்று தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோமோ என்று நினைக்குமளவுக்கு மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர். சாதாரண பயணியாக விமானத்தில் பயணித்தும், ஆடம்பரம் இல்லாத வீட்டில் வாழ்ந்து காட்டியும் வீண்விரயம் தற்போது இல்லை என்று ஜனாதிபதி விளம்பரப்படுத்தினாலும், மக்களது வாழ்க்கைச் சுமை குறைந்தபாடில்லை. கோடிக்கணக்கில் காட்டப்பட்ட கடந்த ஆட்சியின் ஊழல்கள் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு மொத்தப் பணமும் பொதுநிதியில் சேர்க்கப்பட்டு, தங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட மக்களுக்கு மீண்டும் தமது இடுப்புப் பட்டியை இறுகக் கட்டிக் கொள்ளுமாறு உத்தரவு வருகிறது. நூறு நாள் அரசாங்கத்தில் ஹொரா என்று அழைக்கப்பட்டவர்களெல்லாம் இன்று பாராளுமன்றத்திலே கூடிக் குலவுகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் கள்வர்கள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களை காப்பாற்றுவதற்கே நாட்டின் தலைவர் முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது. பாராளுமன்றத் தேர்தலின் போது மக்கள் எவ்வளவுதான் மறுதலித்த போதும் கட்சியை உடைவிலிருந்து பாதுகாப்பதற்காக வேண்டி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் நிறுத்தப்பட்டார். நுகேகொட மாநாட்டில் நாட்டுத் தலைவரின் எதிர் நடவடிக்கைகளை நாடி பிடித்து அறிந்து, பேசுகிற மட்டில் இவர் பெரிதாக எதுவும் நடவடிக்கைகளை எடுக்கப் போவதில்லை என்பதை படிப்படியாக உணர்ந்து, தன்னை மீள உயிர்ப்பிக்கும் பணியில் முன்னாள் ஜனாதிபதி ஈடுபட்டு வருகிறார்.

கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அராஜகம் மீண்டும் தளைத்தோங்க விட முடியாது. மஹிந்தவின் சுதந்திரக் கட்சியிலிருந்து பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியை மீட்டெடுப்பதற்காக எடுக்கப்படும் பிரயத்தனங்களில் நாட்டு மக்கள் பலிக்கடாக்கள் ஆகிவிடக் கூடாது. நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு ஆணை வழங்கியது நாட்டைக் கட்டியெழுப்பவே அன்றி கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு அல்ல. ஜனாதிபதி அவர்கள் கட்சியின் தலைவர் என்பதை விட முழு நாட்டு மக்களினதும் தலைவர் என்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

மாற்றங்கள் நடப்பது இருக்கின்ற நிலையில் இருந்து நல்லதொரு நிலைக்கு மாறுவதற்காகத்தான். மீண்டும் அதே இடத்தில் சுழல்வதென்றால் அந்த மாற்றம் ஏமாற்றமாகத் தான் முடியுமேயன்றி விடிவைத் தரப் போவதில்லை. ஆகவே எந்த மாற்றத்தை நோக்கி மக்கள் அணி திரண்டார்களோ அந்த மாற்றம் களத்திலே நடக்கிறது என்பதை மக்கள் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

தமக்கு மக்கள் வழங்கிய ஆணையை பதவிக்கு வந்த பின்னர் யார் மறந்து விட்டாலும் தாம் வழங்கிய ஆணையை மக்கள் மறக்கப் போவதில்லை.

# ஜனாதிபதியின் நல்லிணக்க யோசனை சாத்தியமாகுமா?

**ஜயதிலக கம்மெல்லவீர**

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக வேண்டி பணியாற்றி வரும் பெரும்பாலானோர் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு வடபகுதிக்குச் செல்கிறார்கள். ஆனாலும், விழிப்புணர்வூட்ட வேண்டியது தென்பகுதி மக்களையே என ஜனாதிபதி கடந்த வாரம் ஊடகங்களில் தெரிவித்திருந்தார். இக்கருத்தை அவர் வடக்கு மக்கள் மத்தியில் கூறியிருந்தாலும் அதனை நாம் உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; பாராட்ட வேண்டும்.



பெரும்பான்மையினருக்குரிய சகல உரிமைகளும் சிறுபான்மையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதனை பெரும்பான்மையினத்துக்குச் சொந்தமான மக்கள் ஏற்றுக் கொள்ளும் வரையில் தேசிய நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்த முடியாது. அதை இன்னுமொரு முறையில் சொல்வதென்றால், தேசிய நல்லிணக்கம் குறித்த பொறுப்பை பிரதானமாக பெரும்பான்மையினரே ஏற்க வேண்டும். அதனால் பெரும்பான்மை இன மக்களை விழிப்புணர்வூட்டுவது அத்தியவசியமாகிறது.

நாட்டின் முதற் பிரஜை இது தொடர்பில் புரிந்துணர்வுடன் இருப்பது மாத்திரமல்ல, தான் அவ்வாறு இருப்பதை பகிரங்கமாக முன் வந்து அறிவித்தமையானது இந்நாடு ஜனநாயகபூர்வ ஐக்கிய நாடொன்றாக வேண்டுமென்பதை காண்பதற்கு ஆசைப்படுகின்ற பிரஜைகளது புளகாங்கிதத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்காக வேண்டி தெற்கிலுள்ள மக்களை எவ்வாறு விழிப்புணர்வூட்டுவது என்பது இதனோடு இணைந்ததான பிரச்சினையாக மேலெழுகிறது. எமது நாட்டின் சமூதாய கட்டமைப்பிற்குள் பிரதானமாக இவ்விடயத்தை அரசியல் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இரண்டாவது, மத நிறுவனங்களிடம் இவ்விடயம் பொறுப்பாகிறது. மூன்றாவது, புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களிடம் பொறுப்பாகிறது. ஊடகங்களுக்குரிய பொறுப்பும் அலாதியானது.

தற்போதைய ஜனாதிபதி அவர்களை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதில் தலையிட்ட மேற்கூறிய மூன்றாம் தரப்பினர், அதாவது புத்திஜீவிகள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகள் மேற்கூறிய விடயம் தொடர்பில் தமது பொறுப்பை செய்வதற்கு தயாராக உள்ளமை தெளிவாகிறது. மேற்படி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தற்பொழுதும் தங்களுடைய சக்திக்குட்பட்ட வகையில் பொறுப்புக்களை செய்துகொண்டுள்ளனர்.

ஆனால், முதல் இரு சமூக அமைப்புக்களும் அதாவது, அரசியல் கட்சிகளும் மத நிறுவனங்களும் நல்லிணக்கத்திற்காக வேண்டி தலையிடுவதில் எவ்வளவு தயார் நிலையை [illegible] என்று கூறும்போது, தெற்கில் அது விகாரைகளாகும்.)

புத்தபெருமானின் போதனைகளின்படி, இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் முன்நின்று செயற்பட வேண்டியவர்கள் பௌத்த துறவிகளாவர். புத்த பெருமான் குல, இன, சமூக ஏற்றத் தாழ்வுகளை கணக்கில் எடுக்கவில்லை. யுத்தத்தையும் அநீதிகளையும் ஒழித்தார்கள். அவருடைய போதனைகளின் பிரகாரம் உண்மையான பௌத்த துறவியொருவருக்கு இனமொன்றும் குலமொன்றும் இருக்க முடியாது. அதன்படி, விகாரை சமாதானத்தின் மத்திய நிலையமாக காணப்பட வேண்டும்.

ஆனாலும் எமது நாட்டில் காணப்படுகின்ற விகாரைகள் குல அடிப்படையில் பிரிந்து பல நிகாயாக்களாக பிளவுபட்டுள்ளன. ஹெல உறுமய, பொதுபல சேனா, ராவண பலய, சிஹல ராவய போன்ற இன, மதவாத விஷமச் சிந்தனைகளை பரப்புகின்ற அமைப்புகள் விகாரைகளில் இருந்தே தோற்றம் பெற்றுள்ளன. இந்நாட்டில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுகள் முன் மொழியப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கெதிராக கிளந்தெழுந்து அவற்றைச் சீர்குலைப்பதில் முன்னணி வகித்தவர்கள் தேரர்களாவர்.

இன்றும் அரசியல் அதிகாரத்திற்காக வேண்டி இனவாத்தை தூண்டும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு உந்து சக்தியை வழங்கிவருவது விகாரைகளாகும். தற்போதைய ஜனாதிபதி, தனது பௌத்த தன்மையை அநேகமான பொழுதுகளில் காட்சிப்படுத்தி வந்தாலும் அவருடன் குறிப்பிடத்தக்க அளவு இனவாதச் சிந்தனை படைத்த பிக்குமார்கள் இன்னும் இல்லை என்பது நிராகரிக்க முடியாத உண்மையொன்றாகும்.

எமது நாட்டின் அரசியல் வாதிக்கும் விகாரைக்குமிடையில் சந்தர்ப்பவாத உறவொன்றுள்ளது. அப்பாவி பௌத்த மக்களை ஏமாற்றும் உபாயமொன்றுக்காகவே அரசியல்வாதி பன்சலைக்குச் செல்கிறானே ஒழிய, மதம் தொடர்பிலுள்ள பக்தியினால் அல்ல என்பது தெளிவான விடயமாகும். அவ்வாறே பிக்குமார்கள் ஆட்சியாளர்களுக்கு புத்த மத போதனைகளாலும் கருத்துக்களாலும் நல்லறிவு புகட்டி வருவதாக கூறுவதும் உண்மையொன்றல்ல. அது உண்மையொன்றென்றால் தேர்தலொன்றில் தோல்வியுற்ற பின் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி பெற்றவர்களுக்கு ஆட்சி செய்ய இடமளித்து விட்டு ஒதுங்கிச் செல்லுமாறு உபதேசிக்கின்ற பிக்குமார்களை எமக்கு கண்டுகொள்ள முடியுமானதாக இருந்திருக்க வேண்டும்.

கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களுக்காக வேண்டி சட்டம் அமுல்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நீதிமன்றத்தில் நுழைந்து குழப்பம் விளைவித்த காவியுடை தரித்தவர்கள் நாட்டுப்பற்றுள்ள பிக்குமார்கள் என்பதாக குறிப்பிடுகின்ற மகாநாயக்க தேரர்களையே எமக்கு காணமுடிந்தது.

எவ்வாறிருப்பினும் பல மதங்களைக் கொண்ட பல்லின மக்கள் கலாச்சாரத்தை உடைய எமது நாட்டில் உண்மையான ஜனநாயகமொன்றை கட்டியெழுப்ப வேண்டுமென்றால் அரசியலும் மதமும் தனியாக பிரிந்திருக்க வேண்டியது முக்கியமானதாகும். அவ்வேளையிலேயே எமக்கு தேசிய நல்லிணக்கத்தை நிஜமான முறையில் கட்டியெழுப்ப முடிகின்றது. அப்போதுதான் மதத்திற்கு வழங்கப்பட வேண்டிய உரிய [illegible] கிடைக்கும்.

'இந்நாட்டில் வாழும் பெரும்பான்மையினர் சிங்களவர்கள். அவர்களுள் பெரும்பான்மையினர் பௌத்தர்கள். ஆதலால் இந்நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரித்தாகும். அதன்படி சிங்கள பௌத்தர்களுக்காக வேண்டி முன்நின்று செயற்படுவது பௌத்த பிக்குமார்களின் பொறுப்பாகிறது.'

எமது நாட்டிலுள்ள பௌத்த பிக்குமார்களுள் பெரும்பான்மையினர் பின்பற்றுகின்ற பௌத்த மதமே இது. 'பௌத்த பிக்குமார்களுக்கு இனமொன்றில்லை; குலமொன்றில்லை; தேசமொன்றில்லை; உலக வாழ் அனைத்து உயிரினங்களினதும் நலன்களுக்காக வேண்டி பிக்குமார்கள் பணியாற்ற முன்வர வேண்டும்' என்பதே எமக்குத் தெரிந்த புத்த மதப் போதனையாகும்.

புத்தரின் இப்போதனையை அடியொற்றிய பிக்குகள் பரம்பரையொன்று எமக்கிருந்திருந்தால் நாடு முகம் கொடுத்த பல இன்னல்களை தடுத்துக்கொள்ள முடிந்திருக்கும்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது தொடர்பில், தெற்கு மக்களை விழிப்புணர்வூட்டும் விடயத்தில் பிரதான அரசியல் கட்சிகளினுடைய செயற்பாடுகளை சற்று அலசுவது பொருத்தமென நினைக்கிறோம்.

ஐக்கிய தேசிய கட்சி ஒரு கட்சி என்ற வகையில் அரசியல் அதிகாரத்திற்காக வேண்டி இனவாதத்தையோ அல்லது மதவாதத்தையோ வெளிப்படையாக பயன்படுத்துவதில்லை. குறிப்பாக அக்கட்சியின் தலைமைத்துவம் நாடு முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மிக முக்கியம் என்பதை அடிக்கடி தெளிவுபடுத்தி வருவதை காண முடிகிறது.

கட்சி பின்பற்றும் பொருளாதார கொள்கைக்கும் அது அவசியம். ஆனாலும், அதற்காக வேண்டி முக்கியமான வேலைத்திட்டங்களை ஒரு கட்சி என்ற வகையில் செயல்படுத்த முன்வருவதில்லை. அரசியல் அதிகாரத்திற்கு சவாலொன்று விடுக்கப்படலாம் என்பதால் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும் யோசனையை இழுத்தடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதனைக் காண முடிகிறது. அது மேற்கொள்ளப்படாதவரையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உண்மையான முறையில் கட்டியெழுப்ப முடியாமல் போகும்.

இவ்விடயத்தில் இலங்கை சுதந்திரக் கட்சி எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது மிக முக்கியமானது. ஆனால், தேசிய நல்லிணக்கமாக இருக்கட்டும் பொருளாதார கொள்கைத் திட்டமாக இருக்கட்டும் அல்லது பிறிதொரு அரசியல் வேலைத்திட்டமொன்றாக இருக்கட்டும் அத்தகைய விடயங்கள் தொடர்பில் எவ்வித நிலையான கருத்துக்களும் இல்லாத நிலையில் சுதந்திரக்கட்சி இருந்து வருகிறது.


கட்சியின் அதிகாரம் தொடர்பிலான பிரச்சினையை இதுவரை காலமும் தீர்த்துக்கொள்ளாத அக்கட்சியிலுள்ள இரு தரப்பினரும் அப்பிரச்சினைகளுக்கு மத்தியில் ரணிலின் அரசாங்கத்தை மாற்றி சுதந்திரக் கட்சி அல்லது சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கமொன்றை உருவாக்குவது தொடர்பில் குரலெழுப்பி வருகின்றனர். அக்கட்சியில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளாத அமைச்சர்கள் அரசாங்கத்தின் சகல விடயங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து வருவதோடு அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றவர்களுள் கூடுதலானோர் ஐ.தே.க.வை வெளிப்படையாக எதிர்ப்பதையும் காண முடிகின்றது.

மைத்ரிபாலவுக்கு விசுவாசமான ஒரு சிலரும் கூட தேசிய நல்லிணக்கம் போன்ற விவகாரங்களில் மௌன நிலைப்பாட்டை கடைப்பிடிக்கின்றனர். இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு ஓரிரு வாரங்கள் போதாது என்பது உண்மை. ஆனாலும், கட்சியை இத்தகைய சவால்களுக்கு மத்தியில் வழிநடாத்தி வருவதற்கு ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் எடுத்துள்ளது.

இத்தகைய நிலமைகளுக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கம் குறித்து தெற்கு மக்களை விழிப்புணர்வூட்டும் செயல்பாட்டை எவ்வாறு செய்வதென்பது தொடர்பில் ஜனாதிபதி அவர்களுக்கு பாரிய சவால் ஒன்று உருவாகியுள்ளது. இலங்கை சுதந்திரக்கட்சியின் கிராமிய மட்ட ஆதரவாளர்கள் என்று சொல்லப்படும் அக்கட்சிக்கு வாக்களிக்கின்ற பெரும்பான்மையான மக்கள் சிங்கள பௌத்தர்களாவர்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரேக்கமாக மாறிவரும் இலங்கை

இலங்கையில் ''நல்லாட்சி'' பிறந்து ஒரு வருட நிறைவில் வரலாற்றில் ஒரு போதுமில்லாத பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. நிதியமைச்சர் அதிரடியாக மேற்கொண்டு வரும் ஒவ்வொரு நகர்வும் அதனைத் தெளிவாகக் காட்டுகின்றது.

முன்னாள் ஆட்சியாளர் மஹிந்தவின் கடைசிக் காலத்தில் அத்தகைய பாரிய நெருக்கடி ஒன்றிற்குள் நாடு தள்ளப்பட்டிருந்தது. அதனை மூடி மறைப்பதற்கு மேற்குலகிற்கு எதிரான போர்க் குற்றக் கோஷங்களை அவர் எழுப்பிய வண்ணமிருந்தார். மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதே அவரது ஒரே நோக்காக இருந்தது.

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் வரிச் சலுகை இப்போது நீக்கப்பட்டுள்ளதோடு, மாவின் விலை அதிகரித்து, பாணின் விலை உயர்ந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை ஒவ்வொன்றாக அதிகரிக்கப்படவுள்ளது. டொலரின் பெறுமதி 100 ரூபாவிலிருந்து 140 ரூபா வரை அதிகரித்துள்ளது. நாட்டில் பாரிய நிதி நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளதை பொருளியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நெருக்கடியின் மூல வேர் இலங்கை பெற்ற வெளிநாட்டுக் கடன் சுமையிலிருந்து தொடர்கின்றது. மஹிந்த 2005 இல் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது இலங்கை பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன் தொகை இரண்டரை இலட்சம் கோடியாக இருந்தது. மஹிந்த யுகத்தின் பத்தாண்டு கால முடிவில் வெளிநாட்டுக் கடன் தொகை 10 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. நல்லாட்சி அதிகாரத்தைக் கையேற்றபோது இத்தகைய கடன் சுமையோடுதான் அது நிதி நிர்வாகத்தைக் கையாள வேண்டியிருந்தது.

இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் நான்கரை இலட்சம் ரூபாய் கடனாளியாக மாற்றப்பட்டுள்ளமையே மஹிந்தவின் மாபெரும் சாதனையாகும். இலங்கை



அரசு எதிர்கொண்டுள்ள இக்கடன் நெருக்கடி அரசாங்கத்திற்கும் கடன் வழங்கிய வெளிநாடுகளுக்கும் இடைப்பட்ட விவகாரம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. நகரம் முதல் கிராமம் வரை இலங்கையின் இரண்டு கோடிப் பிரஜைகளில் ஒவ்வொருவரையும் இந்தக் கடன் தாக்கும் திறன் கொண்டது. வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவாறு வெளிநாட்டுக் கடன் பொறியில் சிக்கியுள்ள இலங்கை சுமாராக இன்னொரு கிரேக்கம் போன்று மாறி வருகின்றது என்பதே உண்மை.

வெளிநாட்டுக் கடன் தொகையில் இலங்கை சிவப்புக் கோட்டை தாண்டும் நிலைக்கு வந்துள்ளது. இலங்கையிலுள்ள மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நீர்வளம், பெருந்தோட்டக் கம்பனிகள் போன்றவற்றை கடன் வழங்கிய நாடுகளிடம் ஒப்படைக்கும் நிலைக்கு இலங்கை வந்துவிடுமா என்ற அச்சம் கூட எழுந்துள்ளது.

ஒரு நாடு வெளிநாட்டுக் கடன் பெறுவது உள்நாட்டில் கீழ்க்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதற்கும், எதிர்கால முதலீட்டுத் திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்குமே. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்று அமுல்படுத்திய பொருளாதாரத் திட்டத்தில் வெற்றியளித்த ஒரேயொரு திட்டம் மகாவலித் திட்டம் மாத்திரமே.

சிறந்த பொருளாதார கொள்கையொன்று இல்லாது, இலாப-நஷ்ட கணிப்பீடு (Cost-Benifit Analysis) இல்லாமல், நாட்டு மக்களை ஏமாற்றும் வெளிப்பகட்டான பாரிய திட்டங்களுக்கு அதிகூடிய வட்டி வீதத்தோடு கடன்பட்டால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கைதான் இன்று சிறந்த உதாரணம்.

2500 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட மத்தள விமான நிலையத்திலிருந்து மாதாந்தம் இப்போது 15,000 ரூபாய் வருமானம் ஈட்டப்படுகின்றது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கப்பல்கள் இன்னும் வரவேண்டியுள்ளது. கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் கூட முறையான நிதிப் பகுப்பாய்வின் அடிப்படையில் முன்னெடுக்கப்படவில்லை. கரவலபிடிய அனல் மின்நிலையத் திட்டத்திலும் பாரியளவு நிதி முதலீடு செய்யப்பட்டது.

இத்திட்டங்களில் பலாபலன்களும் விளைவுகளும் பூச்சியமாக உள்ள நிலையில், மஹிந்த வீடு திரும்பினார். மைத்திரி அதிகாரத்தைக் கையேற்றார். இப்போதைய நிதியமைச்சர் ரவி கடன் சுமையை எதிர்கொள்ள முடியாமல் திணறுகின்றார். மஹிந்தவே இதற்கெல்லாம் காரணம் என்று அங்கலாய்க்கிறார். ஆனால், அரசியல்வாதிகளின் வாய்ச் சவாடல்களை விட நிலமை மிகவும் பயங்கரமானது.

2010 இலிருந்து இலங்கை வெளிநாட்டுக் கடன் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. தற்போதைய அரசாங்கம் இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு குறுங்கால ஆனால் அதி உயர் வட்டி வீத கடன்களைப் பெற்று சமாளிப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. ஆனால் அது இலங்கைக்குரிய தீர்வல்ல. புள்ளிவிபரங்களின் படி இலங்கை ஆபத்தான சிவப்புக் கோட்டிற்கு வந்துவிட்டது.

நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம், இந்நெருக்கடியை எதிர்கொள்ள போதுமானதல்ல எனக் கருதிய பிரதமர், திடீரென்று பாராளுமன்றத்தில் புதிய வரித் திட்டங்கள் சிலதை முன்மொழிந்துள்ளார். இதற்கிடையில் ஒரு இடைக்கால சிறு வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் தெரிவிக்கின்றார்.

அரசாங்கத்தின் இத்தடுமாற்றம் நாட்டில் தெளிவான ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதை கோடி காட்டுகின்றது.

ஒரு சக்கர சுழற்சி போன்று வெளிநாட்டுக் கடன் பல்வேறு நிதி நெருக்கடிகளைத் தொடராக உற்பத்தி செய்கின்றது. கடன் நெருக்கடி, நாணயப் பெறுமதி இறக்கம், பணவீக்கம், ஏற்றுமதியில் வீழ்ச்சி, இறக்குமதி அதிகரிப்பு, பொருட்களின் விலை உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்று சங்கிலித் தொடர் போல் மாறி வருகின்றது.

அரசியல்வாதிகளிடம் தெளிவான பொருளாதாரக் கொள்கை இல்லாமையும், வெளிநாட்டுக் கடன் தொகையை சரியான முதலீட்டுத் திட்டங்களில் பயன்படுத்தாமையும், எல்லையற்ற ஊழல் மோசடிகளும் நாட்டை அதள பாதாளத்தில் தள்ளியுள்ளது. இத்தனைக்கும் மத்தியில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடிய குழு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுத் தொகையை அதிகரித்து, பல மில்லியன் ரூபாய் செலவீனங்களை அனாவசியமாய் அதிகரித்துள்ளது.

அலுவலகம் ஒன்றைப் பராமரிப்பதற்கு 75,000 ரூபாய் தொகையையும், அரசியலமைப்புப் பேரவை கூட்டமொன்றுக்கு வருகை தந்தால் 2500 ரூபாய் கொடுப்பனவும் பாராளுமன்றத்திற்கு அருகாமையில் வீடொன்றை வாடகைக்குப் பெற 50,000 ரூபாயும் சர்வதேச தொலைபேசி மற்றும் இணைய பாவனைக்கு மேலதிகமாக 50,000 ரூபாவும் என மேலதிகமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 2 இலட்சத்திற்கும் அதிகமான தொகை ஒதுக்கப்படுகின்றது. இன்றைய நல்லாட்சியின் இலட்சணங்கள் இவைதான்.

ஒரு புறம் நாடு பெரும் வெளிநாட்டுக் கடன் நெருக்கடியில் திணறும் நிலையில், அதன் சுமையை மக்கள் மீது திணித்து வரும் அரசாங்கம் அரசியல்வாதிகளுக்கான சலுகைகளை இப்படி உயர்த்திக் கொண்டே போனால், நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என்பதே பலரும் எழுப்பும் கேள்வி.

வெளிநாட்டுக் கடனிலேதான் நாட்டை ஓட்ட முடியும் என்று நம்பும் அரசியல்வாதிகளிடம் அதிகாரத்தைக் கையளித்து ஏமாந்து நிற்கும் மக்கள், நல்லாட்சியிடமிருந்து எதிர்பார்த்தது இதுவல்ல. அரசியல்வாதிகள் ஒன்றை நினைவில் வைக்கட்டும். புரட்சி அத்துடன் நின்றுவிடுவதில்லை. எதிர்ப் புரட்சிகளும் வரலாற்றை தலைகீழாய் புரட்டிப் போட்டுள்ளது.

# அரசியலமைப்பு மாற்றம்: மெல்லக் கசியும் ரகசியங்கள்

முழுப் பாராளுமன்றத்தையும் அரசியல் பேரவையாக மாற்றியுள்ள அரசாங்கம், சிவில் சமூகத்தின் ஆலோசனைகளைப் பெற்று புதிய அரசியலமைப்பை உருவாக்கப் போவதாக கூறுகின்றபோதும், அதற்குரிய சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றபோதும், பிரதான கட்சிகள் என்ற வகையில் ஏற்கனவே ஐ.தே.க.யும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பும் தமக்கேயுரிய வரைபுகளை தயாரித்துள்ளன. அந்த வரைபுகளில் தமக்கு வசதியானவற்றையும் உடன்பாடானவற்றையும் குறித்து இரு கட்சிகளும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றன.

சிவில் சமூகத்தின் கண்களுக்குப் படாத இப்பேச்சுவார்த்தைகளில் பேசப்படும் பேரம் குறித்து மிகுந்த எச்சரிக்கை சிவில் சமூகத்திற்கு அவசியம். ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது மஹிந்தவிற்கு எதிராக உருவாக்கப்பட்ட கூட்டணியின் பிரதான கோஷமாக இருந்தது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாகும். சமூக நீதிக்கான அமைப்பின் தலைவர் காலம் சென்ற சோபித தேரரும் இதற்காகவே கடைசிவரையும் குரல்கொடுத்தார். இதை முன்னிறுத்தியே மைத்திரியும் ரணிலும் பிரச்சார மேடைகளில் பேசித் திரிந்தனர்.

சில சிறுபான்மைக் கட்சிகளும் சிவில் சமூக நிறுவனங்களும் இந்த நோக்கத்திற்காகவே நல்லாட்சிக் கூட்டணிக்கு ஆதரவளித்தன. மைத்திரியை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தன. ஆனால், கடந்த இரு வாரங்களுக்கு முன்பாக சில ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இணைந்த எதிர்க்கட்சிக்குத் தலைமை வகிக்கும் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட



மைப்பினருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையொன்றில், ஐ.தே.க. முன்வைத்த வரைபிலிருந்து இரு முக்கிய ஷரத்துகளை நீக்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு என்ற தொடரிலுள்ள 'புதிய' எனும் சொல்லை நீக்குவதற்கும் ஐ.தே.க. உடன்பட்டுள்ளது.

அதேவேளை, ஐ.தே.க. முன்வைத்துள்ள பிரேரணையில், இரண்டு பந்திகள் நீக்கப்பட்டுள்ளன.

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் வெளிப்படுத்திய விருப்பத்தை நிறைவு செய்ய தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார். அதன்படி நிறைவேற்று அதிகார முறையை நீக்கும் வகையிலான புதிய அரசியலமைப்புச் சட்டமொன்று உருவாக்கப்படும்.

2. நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதோடு, விகிதாசார தேர்தல் முறையிலுள்ள விருப்பு வாக்கு முறை நீக்கப்படுவதோடு, மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வும் எட்டப்படும். மேலும் தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்படுவதோடு, சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்ற ஒரு அரசியல் கலாசாரம் உருவாக்கப்படுவதோடு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் உத்தரவாதமளிக்கப்படும். மேலும், அது மனித கௌரவத்தை உறுதி செய்வதோடு, பொறுப்புக் கூறும் அரசாங்கமொன்றும் உருவாக்கப்படும்.

மேற்போந்த இரு பந்திகளும் ஐ.தே.க.வின் உத்தேச அரசியலமைப்பு வரைபிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறித்து தினேஷ் குணவர்தனவும் சுசில் பிரேம ஜயந்தவும் தமது ஆழ்ந்த மகிழ்ச்சியையும் பூரிப்பையும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26 ஆண்டு கால ஆயுத வன்முறையின் முடிவில் மக்கள் எதை எதிர்பார்த்தார்களோ அதனை நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. பின்வாங்கத் தொடங்கிவிட்டது என்பதை இந்த கள்ளத் தனமான பேச்சுவார்த்தைகள் உறுதிசெய்து விட்டன. ரணிலின் நல்லாட்சியில் மக்கள் எதிர்பார்த்தது இதுவல்ல.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழர் பேரவையும் வெளிப்படுத்தும் நிலைப்பாடு என்ன?

கடந்த 19 ஆம் திகதி பாலமுனையில் நடந்த முஸ்லிம் காங்கிரஸின் 19 ஆவது தேசிய மாநாட்டில் அதிதிகளுள் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பெருந்திரளான முஸ்லிம் சிவில் சமூகத்தின் மத்தியில் ''வடக்குக் கிழக்கில் பிரச்சினைக்குத் தீர்வு கேட்டவர்கள் தமிழர்கள்தான். முஸ்லிம்களோ சிங்களவர்களோ அதனைக் கேட்கவில்லை'' என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை, வடமாகாண முதலமைச்சர் விக்னேஷ்வரன் தலைமையிலான தமிழர் பேரவை வெளியிட்டுள்ள மாற்று அரசியலமைப்பு யோசனைத் திட்டத்தில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் குழுவினருக்கு ஏதேனும் பிரச்சினையிருந்தால் அது குறித்துப் பேசுவதற்கு தாம் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தனும் விக்னேஷ்வரனும் முஸ்லிம் சமூகத்திற்குச் சொல்ல வரும் செய்தி என்ன? வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக இவர்கள் அங்கீகரிக்கவில்லையா? முஸ்லிம் குழு என்பதன் அர்த்தம் என்ன? 1980 களிலிருந்து முஸ்லிம்களும் தமக்குரிய தீர்வை கோரி வரும் நிலையில், ஏதோ தமிழர்களுக்கு மாத்திரமே பிரச்சினை உள்ளதாகவும், அவர்கள் மாத்திரமே பேரினவாத அரசாங்கத்திடமிருந்து தீர்வு கோருவதாகவும் சம்பந்தன் கதையளப்பதன் அர்த்தம் என்ன?

இவற்றையெல்லாம் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் சிவில் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? 19 ஆவது தேசிய மாநாட்டை நடத்தியுள்ள முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடுதான் என்ன? பதவி அரசியலுக்காக சோரம் போவதும், பம்மாத்து அரசியல் காட்டி வீர வசனங்கள் பேசுவதுமே முஸ்லிம் [illegible] வரலாறு. போதாக் குறைக்கு கட்சிக்குள்ளேயே இப்போது அதிகார மோதல் தலையெடுத்துள்ளது. செயலாளரின் அதிகாரங்கள் தலைவரால் பறிக்கப்பட்டதாகவும், இன்னொரு பக்கம் தவிசாளர்-தலைவருக்கிடையில் பாரிய கருத்து வேறுபாடு எழுந்துள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் குவிந்தவண்ணமுள்ளன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய அரசியல் தருணத்தில், சாதித்தது ஒன்றுமே இல்லை என்ற நிலையில், உள்ளே குத்துவெட்டுகளிலும் குழிபறிப்புகளிலும் ஈடுபடுவதுதான் நமது அரசியல் பண்பாடா? தனிநபர் [illegible]களுக்கு சமூகத்தைத் தாரைவார்க்கும் அரசியல் துரோகத்தை நமது கட்சிகள் இழைத்துக் கொண்டிருக்குமானால் எதிர்காலம் அவர்களை நிச்சயம் பழிதீர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் தலைமைத்துவம் போன்ற பகுதிகளே எமது இலக்கு

OMSED நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டத்திற்கு 15 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனை முன்னிட்டு அந்நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டப் பொறுப்பாளர்

## அஷ்ஷெய்க் றிழ்வான் ஜாபிர்

வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகின்றது. நேர்காணல் ஹபீஸுல் ஹக், ஸையாப் ஸாஜஹான்



**★ OMSED நிறுவனத்தைப் பற்றியும் அதன் புலமைப் பரிசில் திட்டம் பற்றியும் குறிப்பிடுங்கள்?**

OMSED நிறுவனம் கடந்த 15 வருடங்களாக இலங்கையில் மாணவர்கள் மட்டத்தில் தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களின் ஆளுமை விருத்தியிலும் அவர்களை ஒழுக்க ரீதியாகப் பண்படுத்துவதிலும் அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியைக் கொடுப்பதிலும் முன்னின்று உழைத்து வருகின்றது.

அத்தோடு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிக்கரம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமாக இதனைக் கொண்டு செல்கின்றது. குறிப்பாக இலங்கையில் இருக்கின்ற மாணவர்களை எடுத்து நோக்கும் போது பல்கலைக்கழக மட்டத்திலும் அதேபோல் பட்டப் பின்படிப்புக் கல்வியிலும் மாணவர்கள் நிதி ரீதியான பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். எனவே அவர்களுக்கு உதவுகின்ற நிதி உதவித் திட்டமாக இதனைக் கொண்டு செல்கின்றோம். குறிப்பாக அவர்களின் கல்வியைத் தொடரக் கூடிய காலத்தில் கல்விக்கான உதவித்தொகையாகத்தான் இதனைக் கொண்டு செல்கின்றோம்.

அதேபோல் இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் இன்னும் ஒரு பகுதியாக அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நிதியுதவித் திட்டத்தை வழங்குகின்றோம். குறிப்பாக அஹதிய்யா பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் இலங்கையில் பல இடங்களிலும் மாணவர்களை ஆரம்ப மட்டத்தில் ஒழுக்க ரீதியாகவும் சன்மார்க்க ரீதியாகவும் நெறிப்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டமாகக் காணப்படுகின்றது. இதில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றவர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த வேலைத்திட்டத்தைக் கொண்டு செல்கின்றோம்.

**★ உங்கள் புலமைப் பரிசில் திட்டத்தின் பிரதான நோக்கங்கள் என்ன?**

- மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான உதவிக்கரம் வழங்குதல்
- அவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது (இது பட்டப்பின் படிப்பிற்காக)
- சமூகத்தில் வளவாளர்கள் தேவைப்படுகின்ற துறைகளில் துறை சார்ந்தவர்களை உருவாக்குதல்.
- மாணவர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவி வழங்குதல்.

**★ இதுவரைக்கும் எந்தெந்தத் துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளார்கள்?**

குறிப்பாக நாங்கள் பலதுறைகளிலும் மாணவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். உதாரணமாக மருத்துவத் துறை பொறியியல்துறை வணிகத்துறை கலைத்துறை இதில் குறிப்பாக (இஸ்லாமிய ஷரீஆத்துறை) கற்பவர்களுக்கு. அதேபோல் சமூக விஞ்ஞானத்துறை இளைஞர் அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட நவீன பல கற்கை நெறிகளுக்கும் நாங்கள் உதவிகளை வழங்கி வருகின்றோம். குறிப்பாக பட்டப் பின்படிப்புக் கல்வியைப் பொறுத்தவரை இஸ்லாமிய ஷரீஆ துறை சார்ந்த மாணவர்களுக்கும் சமூக விஞ்ஞானத்துறை சார்ந்த மாணவர்களுக்கும் கூடுதலான கவனம் செலுத்துகின்றோம்.

**★ இந்த புலமைப் பரிசில் திட்டத்திற்கான நிதி உதவிகளை எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றீர்கள்?**

குறிப்பாக OMSED ஒரு நிதி நிறுவனம் அல்ல. மாறாக இது இலங்கையில் இருக்கின்ற உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்தும் வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்களுடன் சேர்ந்தும் இந்த உதவிகளை இப்போது செய்து வருகின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் உள்நாட்டில் இருக்கும் தனவந்தர்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வருகின்றோம்.

**★ OMSED நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் எதிர்கால திட்டங்கள் என்ன?**

OMSED நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்களைப் பொறுத்தவரை எமது நாட்டின் நலனுக்கேற்ப சில முக்கியமான நகர்வுகளை எடுப்பதற்கு இருக்கின்றோம் உள்நாட்டில் இருக்கின்ற தனவந்தர்களை ஒன்றிணைத்து இந்த திட்டத்தைக் கொண்டு போக வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை நாங்கள் யோசிக்கின்றோம்.

குறிப்பாக உயர்கல்வி கற்கைநெறியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றோம். இதில் (A/L) கற்கை நெறியை முடிக்கும்வரை அந்த மாணவர்களுக்கான ஆரம்ப கட்ட நிதி உதவியை வழங்க இருக்கின்றோம்.

இலங்கையில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவில் (UGC) அனுமதி பெற்ற தனியார் பல்கலைக் கழக மாணவர்களுக்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றோம். அத்தோடு சேர்த்து வெளிநாடுகளில் சென்று கல்வி கற்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். (மலேசியா துருக்கி மற்றும் தாய்லாந்தில் உள்ள சில இஸ்லாமியப் பல்கலைக்கழகம்) இதற்கான ஏற்பாடுகளை இப்போது செய்து கொண்டு இருக்கின்றோம்.

அதேபோல் இலங்கையில் புலமைப் பரிசில் வழங்கக் கூடிய நிறுவனங்களை ஒன்றிணைக்கக் கூடிய சில வழிகளையும் இப்போது மேற்கொண்டு வருகின்றோம்.

**★ நீங்கள் எந்தெந்த வகையான புலமைப் பரிசில் முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றீர்கள் ?**

நாங்கள் இப்போது மூன்று வகையான புலமைப் பரிசில் முறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

- மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான நேரடி நிதி உதவித் திட்டம். இது குறிப்பாக அரச பல்கலைக் கழக மாணவர்களுக்காகவும் பட்டப் பின்படிப்பு மாணவர்களுக்குமான புலமைப் பரிசில்.
- வெளிநாடுகளில் சென்று கற்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை இப்போது ஆரம்பித்துள்ளோம். (குறிப்பாக தாய்லாந்து பல்கலைக்கழகத்திற்கு)
- அஹதிய்யா பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஒரு நிதி உதவித் திட்டம். இவர்களினூடாக மாணவர்களை நெறிப்படுத்த வேண்டும் என்பதுவே இதன் பிரதான நோக்கம்.

**★ அண்மையில் இடம்பெற்ற OMSED நிறுவனத்தின் விஷேட கௌரவிப்பு நிகழ்வு பற்றிக் குறிப்பிடுங்கள்?**

அண்மையில் நடந்த OMSED நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டத்தின் முக்கிய நிகழ்வாக கடந்த 22-03-2016 அன்று கொழும்பு பண்டார நாயக்க மாவத்தையில் அமைந்திருக்கக் கூடிய ஸலாமா கேட்போர் கூடத்தில் நாங்கள் விஷேட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம்.

கடந்த 10 வருடமாக புலமைப் பரிசில் நிகழ்ச்சி திட்டங்களில் எங்களோடு கைகோர்த்த அடுத்த நிறுவனங்களை கௌரவிக்கும் முகமாகவும் அதேபோல் எமது புலமைப் பரிசில் மூலமாக வெளிநாடுகளில் பட்டப்படிப்பு முடித்து வந்தவர்களுக்காகவும் (கலாநிதி பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கான) ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். இதில் பிரதம அதிதியாக மேஸி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அவர்களும், கௌரவ அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## பரிசளிப்பும், கௌரவிப்பும்







நீர்கொழும்பு பலஹத்துரையைச் சேர்ந்த 'போருதொட்ட நத்வதுல் உலமா' எனும் உலமாக்கள் அமைப்பு ஊர் தழுவிய ரீதியில் மத்ரஸாக்களுக்கிடையில் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்தல், ஊரின் மூத்த உலமாக்களை கௌரவித்தல், மாணவர் நிகழ்ச்சிகள் என்பவற்றை நீர்/அல்-பலாஹ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் அண்மையில் நடாத்தியது. இதில் விஷேட பேச்சாளராக திஹாரிய பாதிஹ் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் அக்ரம் (நளீமி) கலந்துகொண்டதுடன் மேல்மாகாண சபை உறுப்பினர் சகாவுல்லாஹ், மாநகர சபை உறுப்பினர் நஸ்மிஹார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

## ஸம் ஸம் பவுண்டேஷன்





ஸம் ஸம் பவுண்டேஷனின் Family Night நிகழ்வு கடந்த 2016.03.25 அன்று வெள்ளவத்தை எக்ஸெலன்ஸியில் முப்தி யூஸுப் ஹனிபா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஸம் ஸம் பவுண்டேஷனின் வேலைத் திட்டங்களைத் தெளிவுபடுத்துவதும் ஸம் ஸம் பவுண்டேஷனின் வேலைத் திட்டங்களில் பங்கெடுப்பவர்களை அவர்களது குடும்ப சகிதம் அழைத்து நன்றி சொல்லி கௌரவிப்பதும் இந் நிகழ்வின் பிரதான நோக்கமாக இருந்தது.

இந் நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி அவர்களும் ஜாமிஆ நளீமியாவின் பிரதிப் பணிப்பாளர் அஷ் ஷெய்க் ஏ.ஸீ அகார் முஹம்மத் அவர்களும் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.இந் நிகழ்வில் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## வழிகாட்டல் நிகழ்வு





தஸ்கர 'விஷன் பௌண்டேஷன்' ஏற்பாட்டில் உடுநுவர பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான திருமண வாழ்வை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. வளவாளராக அஷ்-ஷெய்க் அக்ரம் அப்துஸ் சமத் (நளீமி) கலந்து சிறப்பித்தார்.


யுவதிகளுக்கான நிகழ்ச்சி அல் மனார் தேசியப் பாடசாலையிலும் இளைஞர்களுக்கான நிகழ்ச்சி தஸ்கர ஜும்மா பள்ளிவாயலிலும் நடைபெற்றது.

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு



அரசியமைப்பு மாற்றம் குறித்து மக்கள் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கொன்று அண்மையில் ஜமாஅதுஸ் ஸலாமா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்புப் பேச்சாளராக ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், மக்கள் ஷக்தி (புரவெஸி பBலய) அமைப்பின் மேல்மட்ட உறுப்பினருமான K.W. ஜனரஞ்சன் கலந்துகொண்டார். மேலும், இதில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஹக்கீம் அவர்களும் கலந்துகொண்டார். நிகழ்வில் ஜமாஅதுஸ் ஸலாமாவின் முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டத்தரணி லால் விஜேயநாயக்க கண்டியைச் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் B.sc பட்டதாரியான இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் LLB பட்டத்தினையும் அதே பல்கலைக்கழகத்தில் LLM பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளார். இலங்கை சமசமாஜ கட்சியில் துவக்க கால உறுப்பின ரொருவரான இவர் மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார்.

தற்பொழுது பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபை யின் தலைவராகவும் சட்டத் தரணிகள் சங்கத்தின் சட்டக் குழு தலைவராகவும் பதவி வகித்து வரும் லால் விஜேயநாயக்க அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை வினவும் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். 43 வருடங்கள் சட்டத் தரணியாக இருந்த பழுத்த அனுபமிக்க லால் விஜேயநாயக்கவினை விசும்பாயவிலுள்ள அவருடைய அலுவலகத்தில் சந்தித்தோம். மீள்பார்வை பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

நேர்காணல்: ஷெட்டி ரம்ஸி
உதவி: அனஸ் அப்பாஸ்

# தற்போதைய அரசியலமைப்பு மக்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்கவில்லை

**சட்டத்தரணி லால் விஜேநாயக்க**
(புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை சேகரிக்கும் குழுவின் தலைவர்

***★ புதிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் மக்கள் அபிப்பிராயங்களை திரட்டும் பணிகள் எவ்வாறு இடம்பெற்று வருகின்றன?***

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை வினவுவதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டது. யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து, அதனோடு இணைந்ததாக எமது குழுவினுடைய பரிந்துரைகளையும் சமர்ப்பிக்குமாறு எமக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி நாம் ஜனவரி 18 ஆம் திகதி முதல் மக்கள் கருத்துக்களை வினவ ஆரம்பித்தோம். கொழும்பில் ஐந்து நாட்களாக கருத்து வினவினோம். அதன் பின்னர் சகல மாவட்டங்களுக்கும் சென்றோம். பெப்ரவரி 29 ஆம் திகதி கருத்து வினவும் பணியை முடிவுக்கு கொண்டு வந்தோம். அதன் பின்னர், கொழும்பு மாவட்டத்தில் எமக்கு வந்த வேண்டுகோள்களை கருத்திற் கொண்டு மார்ச் 03, 04, 05 ஆம் திகதிகளில் மீளவும் அங்கு கருத்துக்களை வினவும் பணியை ஆரம்பித்தோம்.

தற்பொழுது கருத்துச் சொல்ல அவசியமெனக் குறிப்பிடும் விஷேட தரப்பினர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதில், மதத் தலைவர்கள் சுயாதீன ஆணைக் குழுக்களின் தலைவர்கள், தொழிற் சங்கங்கள், கலைஞர் சங்கங்களின் பிரதிநிதிகள் போன்றோர் உள்ளடங்குகின்றனர்.

எமது முன்னிலையில் சுமார் 2200 பேர் ஆஜராகி கருத்துக்களை வழங்கியுள்ளனர். ஈ-மெயில் மூலம் 1000 பேரும், எழுத்து மூல ஆவணமாக சுமார் 500 பேரும் கருத்துக்களை பதிவு செய்துள்ளார்கள். அவ்வகையில் மொத்தமாக சுமார் 5000 கருத்துக்கள் எமக்கு கிடைத்துள்ளன.

தற்பொழுது நாம் அவற்றை ஆராய்ந்து வருகிறோம். மார்ச் 31 ஆம் திகதி வரையில் கருத்துக்களை ஆராயும் பணியை தொடர்வோம். அதன் பின் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் எமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை எழுதவுள்ளோம். ஏப்ரல் 30 ஆம் திகதி எமது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளோம்.

***★ புதிதாகவே அரசியலமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளதா அல்லது 1978 அரசியலமைப்பை அடித்தளமாகக் கொண்ட சீர்திருத்தம் மாத்திரம்தானா?***

புதியதொரு அரசியலமைப்பே உருவாக்கப்படவுள்ளது. புதியதொரு யாப்பை உருவாக்கிக் கொள்வதற்கான தீர்மானமே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு 19 தடவைகள் சீர்திருத்தப்பட்டுள்ளன. ஆனாலும் அது இன்னும் பரிபூரணமில்லை. கடந்த ஆறேழு வருட காலப்பகுதியை எடுத்துக் கொண்டால் அக்காலத்தில் மக்கள் பல்வேறுபட்ட துயரங்களுக்கு உட்பட்டுள்ளனர். அரசாங்க ஊழியர்களை மரத்தில் கட்டினார்கள். ஆசிரியர்களை முழந்தாலிட செய்தார்கள். பொலிஸ் கைதில் இருந்த 126 பேர் விலங்கிடப்பட்டிருந்த நிலையில் பச்சையாகவே கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களுடைய வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்டன. பலர் காணாமல் போனார்கள்.

சுமார் 70 பேரளவி லான ஊடவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். இன்னும் பலர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார்கள். பிரதம நீதியரசர் ஷிராணி சட்ட விரோதமான முறையில் பதவிகவிழ்க்கப்பட்டார். இது தொடர்பில் உச்ச நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டின் சட்டங்கள் முற்று முழுதாக சிதைவடைந்திருந்தது.

மேற்படி நிகழ்வுகள் இடம்பெற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அரசியலமைப்பு விதிமுறைகளால் மக்களை பாதுகாக்க முடியவில்லை. அரசியலமைப்பு உருவாக்கப்படுவது அரசாங்கம் முறையற்ற அதிகாரங்களை பிரயோகிப்பதிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக வேண்டியே. அரசியல் யாப்பு மக்களுக்கே அவசியம். எனவே, தற்போதைய அரசியலமைப்பினால் மக்களை பாதுகாக்க இயலாமல் போயுள்ளது. அரசியல் அமைப்பு பலம் பொருந்தியதாக இல்லை என்பது அதன் அர்த்தம்.

மக்களை பாதுகாக்க பலமானதொரு யாப்பு தேவையாக உள்ளது. அதனாலேயே புதியதொரு யாப்பு வடிவமைக்கப்படவுள்ளது. அதில் நீதித்துறை சக்திமிக்கதாக அமைய வேண்டும். குறிப்பாக பலமானதொரு உச்ச நீதிமன்றம் அமைய வேண்டும். மக்களுக்காக வேண்டி அரசாங்கத்தின் அழுத்த பிரயோகங்களை தட்டிக் கேட்க உச்ச நீதிமன்றத்திற்கு முடியுமாக இருக்க வேண்டும். மக்களுடைய அடிப்படை உரிமைகள் யாப்பில் குறிப்பிடப்படுவதனால் மாத்திரம் அது பாதுகாக்கப்படுவதில்லை.

***★ அரசியலமைப்பு மாற்றம் குறித்த கருத்து வினவலில் மக்கள் பங்களிப்புக்கள் எவ்வகையில் காணப்பட்டது?***

நாம் எதிர் பார்க்காத அளவு மக்கள் கருத்து வழங்குவதில் பங்களித்தார்கள். அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட முன்னர் மக்களிடம் கருத்து வினவியது இலங்கை வரலாற்றில் இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும். அரசியலமைப்பு என்பது ஒரு சிலரால் புரியப்படும் காரியம் என்பதாக மக்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அது சட்டத்தரணிகளுக்கும் அரசியலமைப்பு வல்லுனர்களுக்கு முரிய விடயம் என்பதாகவும் மக்கள் கருதினார்கள். எனவே, [illegible] உருவாக்கத்தில் மக்கள் தொடர்புபடவில்லை. இம்முறையே அவர்கள் தொடர்புபடுகிறார்கள். அரசியலமைப்பு உருவாக்கப்பட முன்னர் எத்தகைய விடயங்களை அதிலிருந்து நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என வினவும் பொழுதே அது மக்களுடைய அரசியலமைப்பாக மாறுகின்றது.

***★ அரசியலமைப்பில் எவ்வாறான மாற்றங்கள் இடம்பெற வேண்டுமென மக்கள் கூறுகிறார்கள்?***

மக்களுக்கு நாம் சுதந்திரமாக கருத்துச் சொல்ல இடமளித்தோம். பெரும்பாலானவர்கள் பொதுவான கருத்துக்களை முன்வைத்தார்கள். அதில் ஒன்று அரசு ஜனநாயகபூர்வமானதாக அமைய வேண்டுமென்பது. இரண்டாவது, நாட்டில் தேசிய நல்லிணக்கம் பலமானதாக காணப்பட வேண்டும் என்பது. அதற்குரிய தீர்வுகள் என்ன என்பது தொடர்பில் மக்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்தார்கள்.

சிலர் மாகாண சபை முறை வேண்டுமென்றார்கள், இன்னும் சிலர் பெடரல் முறையை வேண்டுகிறார்கள். இன்னும் சிலர் பாராளுமன்றம் அமைய வேண்டிய முறை பற்றிக் கூறியுள்ளார்கள். அதில் தற்போது நிகழும் அரசியல் கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும் என்பதில் பலர் உறுதியாக உள்ளனர்.

அமைச்சர்களுக்கு கல்வித் தகைமையொன்று இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. கூடுதலானவர்கள் இவ் வேண்டுகோளை அழுத்தமாக முன்வைத்துள்ளார்கள். அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட பின்னர், அவர்களுடைய செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் திருப்தி கொள்ளாவிட்டால், அவர்களை மீள அழைப்பதற்குரிய ஏற்பாடுகள் யாப்பில் புகுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

அடிப்படை உரிமைகள் -குறிப்பாக பெண் உரிமை, சிறுவர் உரிமை, அங்கவீனர்களுக்குரிய உரிமைகள்- இன்னும் யாப்பில் பலமானதாக அமைக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களையும் பலர் வலியுறுத்தியுள்ளனர். அபிவிருத்தி என்ற போர்வையில் சுற்றுச் சூழல் அழிக்கப்படுவதாகவும் அதை தடுப்பதற்கு அரசியலமைப்பிற்கூடாக பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல பொதுவான கருத்துக்களில் மக்கள் ஒருமித்த நிலைபாட்டில் உள்ளார்கள். சுகாதாரத்தையும் கல்வியையும் அடிப்படை உரிமையில் கொண்டுவர வேண்டும் என்ற கருத்துக்களையும் பலர் பதிவு செய்துள்ளார்கள்.

***★ புதிய அரசியலமைப்ப மாற்றம் நிகழ பொதுவாக எவ்வளவு காலம் எடுக்கும்?***

எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை எமக்கு சொல்ல முடியாது. அது பாராளுமன்றத்திற்கூடாக நிகழும் பணியாகும். எமது அறிக்கையையும் விரைவாக சமர்ப்பிக்குமாறு கூறுகிறார்கள். ஏப்ரல் 30 ஆம் திகதி ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்கள். எனவே அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய சாத்தியங்களே தென்படுகின்றன. அது எப்போது முடிவுக்கு கொண்டு வரப்படும் என்பதைக் கூறமுடியாது.

***★ புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் அபிப்பராயங்கள் பெறும் பணிகள் முடிவுக் கட்டத்தை எட்டியுள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறு அமையவுள்ளன?***

நாம் மக்களிடமிருந்து பெற்ற கருத்துக்களுடன் எமது பரிந்துரைகளையும் உள்ளடக்கி அறிக்கையொன்றை தயார்செய்து பிரதமர் [illegible]

(பக்.14)




மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் 10 வயது சிறுமிக்கு சூடு வைத்து கொடுமைப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறுமியின் வளர்ப்புத்தாய் மற்றும் மௌலவியான தந்தை ஆகிய இருவரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஆர்.கண்ணன் உத்தரவிட்டுள்ளார். கடந்த சில தினங்களாக ஊடகங்களை ஆக்கிரமித்திருக்கின்ற செய்தி இது.

தனது இரண்டாவது மனைவியினால் தனது மகளுக்கு ஐம்பது தடவைகளுக்கு மேல் சூடுவைக்கப்பட்டு, தீக் காயங்கள் ஏற்பட்டிருப்பதைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி யிருக்கிறார் சிறுமியின் தந்தை. அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள் என்று அடியேனாகிய தனக்கும் அடியார்களாகிய எங்களுக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்ற உலமாக்களுக்கு மக்கள் கொடுத்த கண்ணியத்தினை பாழ்படுத்துவதான இதுபோன்ற செய்திகள் அண்மைக் காலமாக வெளிவருகின்றன.

இவ்வாறான செய்திகளால் உலமாக்களின் மதிப்பு குறைந்து விடாமல் காப்பது சமூகத்தினதும் பொறுப்பாகும். கடந்த பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களையிட்டு சில உலமாக்கள் தமது விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்கள். கண்ணியமிக்க உலமாக்களை தரம் குறைப்பது எமது நோக்கமல்ல. ஒரு சில உலமாக்களின் செயற்பாடுகளினால் மொத்த உலமாக்களினதும் கண்ணியம் சமூகத்திலே குறைந்து விடக் கூடாதே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் அது.

காம லீலைகளிலும், குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்கள், அரசியல்வாதிகளுக்கு வக்காலத்து வாங்கியவர்கள், பணத்துக்காக அந்நிய சக்திகளின் கைக்கூலிகளாக மாறியவர்கள், மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றிப் பிழைத்தவர்கள் என சில பௌத்த மத குருக்கள் செய்த கைங்கரியங்களால் பௌத்த மதகுருக்கள் இன்று தமது கண்ணியத்தை இழந்திருக்கிறார்கள். விளைவாக பல இடங்களில் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டிருக்கிறார்கள். அரச விளக்கமறியல்களில் கைதிகளாக இருக்கிறார்கள்.

இந்த நிலை எங்களது சமூகத்துக்கு வந்து விடக் கூடாது. மக்கள் உலமாக்களை தரம் குறைத்துப் பார்க்கின்ற நிலைமைக்கு உலமாக்கள் தம்மை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. தம்மைப் போஷிக்கின்றவர்களுக்கு சார்பாக மார்க்கத்தை திரித்துப் பேசுகின்ற உலமாக்கள் நம்மிடையே இருக்கின்றார்கள். அறிவு படைத்த நவீன சமூகத்துடன் உரையாடத் தெரியாத பாமரர்களாக சில உலமாக்கள் இருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு வால் பிடிக்கின்ற உலமாக்கள் நமக்குள்ளால் இருக்கின்றார்கள். மக்களது நவீன பிரச்சினைகளுக்கு பதில் சொல்லத் தெரியாத ஆலிம்கள் இருக்கின்றார்கள். மிம்பரிலே ஏறி நின்று பொய்யை அள்ளிக் கொட்டுகின்ற கதீப்கள் இருக்கின்றார்கள். ரஸூலுல்லாஹ்வின் பெயரில் போலியான ஹதீஸ்களை இட்டுக் கட்டும் மேதைகள் இருக்கின்றார்கள்.

மார்க்கத்தை விளங்கி வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகின்ற நன்மக்கள் இந்த உலமாக்களிடமிருந்து தூர விலகி வருகின்றார்கள். இவ்வாறான மக்களுக்கும் உலமாக்களுக்கும் இடையிலான இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முன்னரெல்லாம் ஆலிம்சா எதைச் சொன்னாலும் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், இப்பொழுது பிழை செய்யும், பிழையாகச் சொல்லும் ஆலிம்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

காதியாக இருந்து இலஞ்சம் வாங்கிய ஆலிமுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று லீலைகள் புரிந்த ஆலிமை மக்கள் பொலிஸிடம் மாட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறான செய்தி ஒன்று சிங்களப் பத்திரிகை ஒன்றில் கூட பிரசுரிக்கப்பட்டிருந்தது. உம்ராவுக்கு அழைத்துச் சென்று ஏமாற்றிய உலமாக்களுக்கு மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். போலியாக பத்வா கொடுத்த உலமாக்களை மக்கள் ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்கள். பொய்யையும் புரட்டையும் முழங்கிய சில கதீப்கள் மிம்பர்களில் இருந்து ஓரம் கட்டப்பட்டிருக்கிறார்கள். ஊரிலே ஒருத்தியை வைத்துக் கொண்டு வந்த இடத்தில் வேறொருத்தியுடன் குடும்பம் நடத்திய ஆலிம் ஒருவரை மக்கள் விரட்டி அடித்திருக்கிறார்கள்.

இவ்வாறான சம்பவங்களை அடுக்கிக் கொண்டு போவதனை விட, மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதே இது நமக்குச் சொல்லு கின்ற செய்தி. ஒரு சிலர் செய்கின்ற தவறுகளினால் மொத்த உலமாக்களையும் மக்கள் ஓரக்கண் கொண்டு பார்க்கக் கூடாது. ஆனாலும் உலமாக்கள் தவறும் போது அவர்களும் தட்டிக் கேட்கப்படுவார்கள், தட்டிக் கழிக்கப்படுவார்கள் என்பதனைத்தான் இந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.

ஆலிம் சறுக்கினால் ஆலம் (உலகம்) சறுக்கும். ஆகவே கண்ணியமிக்க உலமாக்கள் ஆலம் சறுக்காமல் பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்துடனான உறவுகளைப் புதுப்பிப்பதற்கு ஹமாஸ் தயார்



எகிப்துடனான உறவுகளைப் புதுப்பிப்பதற்கு ஹமாஸ் இயக்கம் தயார் என அவ்வியக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் மஹ்மூத் அல் ஸஹார் தெரிவித்துள்ளார். எகிப்தின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவும் தமது இயக்கம் தயார் என அல் மஸ்ரி அல் யவ்ம் பத்திரிகைக்கு ஸஹார் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

தற்போது ஹமாஸ் இயக்கத்தின் தூதுக் குழுவொன்று கெய்ரோவுக்கு சென்றுள்ளது. எகிப்தின் வேண்டுகோள் என்ன என்பதை ஸஹார் வெளிப்படுத்தவில்லை. ஆயினும், லண்டனிலிருந்து வெளிவரும் அஷ்ஷர்க் அல் அவ்ஸத் பத்திரிகை காஸாவிலுள்ள ஸலபிய தீவிரவாதிகளைக் கையாளல், சகோதரத்துவ அமைப்பினருடனான உறவுகளைத் துண்டித்தல், எல்லைப் புறங்களைக் கட்டுப்படுத்தல் ஆகியனவே இக்கோரிக்கைகள் என செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்குப் பகரமாக எகிப்திய அரசாங்கம் ரபா எல்லைக் கடவையைத் திறப்பதோடு, நான்கு ஹமாஸ் அங்கத்தவர்களை விடுதலை செய்யும். அதே வேளை, ஹமாஸுக்கு எதிரான பிரச்சாரங்களையும் நிறுத்தும் என அப்பத்திரிகை தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும், பலஸ்தீன் அதிகார சபையின் பாதுகாப்புப் படையினர் ரபா எல்லைப் புறத்தில் நிறுத்தப்படும் நிலையிலேயே ரபா எல்லை திறக்கப்படும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# ஈராக்கின் புதிய அரசாங்கத்தில் 20% பதவிகளை கோரும் குர்திஷ் கட்சிகள்

ஈராக்கில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஹைதர் அல் ஆபாதியின் தலைமையிலான அரசாங்கத்தில் 20 வீதமான முக்கிய பதவிகள் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஈராக்கின் குர்திஷ் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. பாராளுமன்ற சபாநாயர் ஸலீம் அல் ஜுபூரியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே குர்திஷ் கட்சிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன.



புதிய அமைச்சரவையின் 20 இற்கும் குறைவான அமைச்சுப் பதவிகளை நாம் ஏற்க மாட்டோம் என குதிர்திஷ் நாடாளுமன்ற உறுப்பினர் அலா தலபானி பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் முந்திய அரசாங்கம் விளைத்த தவறுகளை மீட்டக் கூடாது. குர்திஷ் மக்கள் அரசியல் செயன்முறையில் பங்குகொள்ள வேண்டும் எனவும் ஈராக்கிலுள்ள ஐந்து குர்திஷ் கட்சிகளும் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# சர்வதேசப் பார்வை

# ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்த பாகிஸ்தான் தவறி விட்டது

லாஹூரில் நடைபெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தபட்சம் 70 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. லாஹூரில் கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தபோதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதிகமானோரைக் கொல்லும் நோக்கம் இத்தாக்குதலுக்குப் பின்னால் உள்ளதென்று நம்பப்படுகின்றது.



பாகிஸ்தானின் வடகிழக்குப் பிராந்தியத்தில் இது போன்ற தாக்குதல்கள் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன. அங்கு இராணுவத்திற்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. ஜமாஅதுல் அஹ்ரார் எனும் ஆயுதக் குழு இதற்கு உரிமை கோரியுள்ளது.

பாகிஸ்தான் இன, மத கலவரங்களால் சீர்குலைந்து போயுள்ளது. அரச இராணுவத்திற்கு வெளியே பல் வேறு ஆயுதக் குழுக்கள் அந்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதில் பாகிஸ்தான் அரசு தோல்வி கண்டுள்ளது. ஷீஆப் பிரிவு பள்ளிவாயல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் இவ்வாறான தாக்குதல்கள் பல இடம் பெற்றுள்ளன. பாகிஸ்தான் அரசு இது குறித்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் போதுமானதாய் இல்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

# பலூஜாவில் பட்டினியை எதிர்கொள்ளும் மக்கள்



ஈராக்கின் பலூஜா நகரில் ஐந்து பேர் பட்டினியால் இறந்துள்ளனர் என உள்ளூர் செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது. போதுமான உணவும் மருத்துவமும் இல்லாமையே இம்மரணத்திற்குக் காரணம் என அச்செய்தி குறிப்பிடுகின்றது.

அன்பார் மாகாணத்திலுள்ள பலூஜா நகரம் சுன்னிகள் செறிவாக வாழும் நகரமாகும். அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினரை மக்கள் அங்கு எதிர்த்துப் போராடியபோது அமெரிக்க படையினர் வெள்ளைப் பொசுபரஸை பெருமளவு பிரயோகித்ததனால் பிள்ளைகள் ஊனமுற்றுப் பிறக்கின்றனர்.

தற்போது ஐசிஸ் பயங்கரவாதிகள் அந்நகரத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதனால் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற அரச நிறுவனங்கள் முற்றாக முடங்கியுள்ளதோடு, மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கிடைப்பதும் தடைப்பட்டுள்ளது. அதன் விளைவாக பலூஜாவில் சிக்கியுள்ள மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பால் மற்றும் பொதுமக்களுக்கான உணவை விநியோகம் செய்வதில் ஐசிஸின் பிரசன்னம் பெரும் இடையூறாக இருந்து வருவதாக ஈராக்கிற்கான ஐ.நா. மனித உரிமைப் பிரிவு தெரிவிக்கின்றது. தற்போது பட்டினியால் இறந்தவர்களில் 3 பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டிலிருந்து பலூஜா ஐசிஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது. ஈராக்கிய அரச படையினர் ஷீஆக்கள் என்பதனால் பலூஜாவுக்கான உணவு விநியோகத்தில் எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவே அவர்கள் செயல்படுகின்றனர்.

# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இஸ்லாம் எமக்கு ஆதரவளிக்கும்



இஸ்லாம் ஐரோப்பாவின் ஒரு பகுதி. அந்த வகையில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இஸ்லாம் ஒரு பகுதியாக இருக்கும் என ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரத் தலைவர் ஃபெட்ரிகா மொகரினி தெரிவித்துள்ளார். ஐரோப்பாவிலுள்ள முஸ்லிம் சமூகங்கள் பயங்கரவாதத்தை எதிர்த்து இங்கே உரத்துக் குரலெழுப்ப வேண்டும் எனவும் அவர் வேண்டியுள்ளார்.

பிரெசல்ஸ் நகரில் நடந்த தாக்குதலைக் கண்டித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இத்தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பாவில் பிறந்த ஐரோப்பிய பிரஜைகள் எனவும் அவர் குறிப்பிட்டார். தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பயங்கரவாதிகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்து கொள்ளப் போவதாகவும் மொகரினி குறிப்பிட்டார்.

# ஸீஸிக்கு விருது வேண்டாம்: வொஷிங்டன் போஸ்ட்



எகிப்திய ஜனாதிபதி அப்துல் பத்தாஹ் ஸீஸிக்கு விருது வழங்க வேண்டாம் என வொசிங்டன் போஸ்ட் பத்திரிகை வேண்டியுள்ளது. எகிப்தியர்களின் சுதந்திரம், பொருளாதார, சமூக வாழ்விற்கு எதிராக பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதி ஸீஸிக்கு எந்தவித பாராட்டு விருதையும் வழங்க வேண்டாம் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு அமெரிக்காவிலிருந்து வெளிவரும் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தனது ஆசிரியர் கருத்தில் வேண்டியுள்ளது.

தற்போதைய எகிப்திய ஜனாதிபதி ஸீஸியின் ஆட்சியின் கீழ் காணாமல் போதல், சித்திரவதை, சட்டவிரோதப் படுகொலை என்பன அன்றாட வழக்கமாகியுள்ளது. 2015 இல் அரச படையினர் பொதுமக்களை கடத்திய சம்பவம் தொடர்பான 464 வழக்குகள் பதிவாகியுள்ளன. 676 சித்திரவதைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸீஸியின் மேற்கத்திய ஆதரவாளர்கள் இவற்றையெல்லாம் கண்டுகொள்வதில்லை. இவற்றுக்குப் பொறுப்பாக உள்ள ஸீஸிக்கு அமெரிக்க நற்சான்றுப் பத்திரம் வழங்குவது அநீதியானது என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# நாட்டின் பெரும் பகுதி அரச கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது: -யெமன் ஜனாதிபதி



நாட்டின் பெரும்பாலான பிராந்தியங்கள் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டன என யெமன் ஜனாதிபதி அப்துர் ரப் மன்ஸூர் ஹாதி தெரிவித்துள்ளார். ஹூதிஷ் மற்றும் ஏனைய கிளர்ச்சியாளர்கள் தற்போது ஒரு குழு என்ற நிலைக்குச் சுருங்கியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஓராண்டு காலமாக ஷீஆ ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்களிடமிருந்து யெமனை மீட்பதற்கு வளைகுடா கவுன்சில் நாடுகள் சவூதி அறேபியா தலைமையில் வான் தாக்குதல்ளை நடத்தி வந்தன. தற்போது யெமன் பாதுகாப்பான நாடு. அதன் அரச படைப் பங்கு மீளவும் பலப்படுத்தப்பட்டுள்ளது. முழு மொத்த நாடும் மீட்கப்படும்வரை கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாசப் படை குறித்து அவரிடம் வினவப்பட்டபோது, அவர்களுக்கு நாட்டில் இடமில்லை எனத் தெரிவித்தார்.

# இஸ்ரேல் மீது ஏவப்பட்ட 90 வீதமான ஏவுகணைகள் தற்போது எதிர்க்கட்சிகள் மீது ஏவப்படுகின்றன

முன்னர் சிரிய அரசாங்கம் இஸ்ரேல் மீது ஏவிய 90 வீதமான ஏவுகணைகளை தற்போது சிரியாவின் எதிர்கட்சிகள் மீது சிரிய அரச படையினர் ஏவுவதாக இஸ்ரேல் இராணுவத் துறை புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஜெனரல் அமோஸ் தெரிவிக்கின்றார். சிரிய இராணுவம் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் அல்ல. ஏனெனில், அரசிடமிருந்த 90 வீதமான ஏவுகணைகள் புரட்சியாளர்க[illegible] பிரயோகிக்கப்பட்டு விட்டன.

ரஷ்ய இராணுவம் சிரியாவிலிருந்து விலகவுள்ளது என்ற கருத்தும் உண்மையானதல்ல என்றும் அவர் தெரிவித்தார். ஏனெனில், [illegible] இன்னும் சிரியாவில் நிலைகொண்டுள்ளது. சிரியாவிலுள்ள யூதத் தலைவர்கள் ரஸ்யாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் இணைந்து செயலாற்றுவதற்கான கூட்டணியொன்றை உருவாக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெசல்ஸ் தாக்குதல்:

## இஸ்லாமியப் பீதியை உருவாக்கும் இன்னொரு முயற்சி



**றவூப் ஸெய்ன்**

ஆமாம், நாங்கள் அவர்களுக்கு அச்சுறுத்தல்தான். ஒவ்வொரு முறையும் நாங்கள் ரொட்டித் துண்டை உண்ணும் போது அவர்களுள் ஆயிரக்கணக்கானோர் எங்கள் பற்களுக்கிடையில் அரைபடும் அபாயத்தில் உள்ளார்கள். ஒவ்வொரு முறை நான் திராட்சை, பேரீச்சம் பழம், மல்பெரி பழம் அல்லது வாதாங்கொட்டை உண்ணும்போதும், இங்கிலாந்தில் யாரேனும் பயத்தில் உறைய வேண்டும். ஒவ்வொரு முறை எனது மகன் அத்தி மரத்தில் ஏறி, பழம் பறிக்கும்போதும் இங்கிலாந்தின் ஏகாதிபத்திய சீமான்களுக்கு ஆபத்து நெருங்குகின்றது. ஆனால், நாங்கள் எப்போதும் செய்ய விரும்பியதெல்லாம் எங்கள் வாழ்க்கையை அவர்கள் இல்லாமல் வாழ விரும்பியதுதான். எங்களுக்கு அவர்களிடமிருந்து எதுவுமே வேண்டாம். ஆனால், அவர்கள்தான் இன்னமும் எங்களிடமிருந்து மேலும் மேலும் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நாங்கள் கேட்பதெல்லாம் எங்கள் விசயத்தில் தலையிடுவதை நிறுத்துங்கள் என்பதுதான்.

**– பக்தாத் அருங்காட்சியகத்தின் முன்னாள் ஆய்வாளர் ஸாதிக்**

சமீபத்தில் பெல்ஜிய தலைநகர் பிரெசல்ஸ் நகரில் நடைபெற்ற தாக்குதல்களுக்கும் மேலே சொல்லப்பட்ட வாக்கியத்திற்கும் இடையில் இறுக்கமான வரலாற்றுத் தொடர்புகள் இருப்பதை மறுக்கவியலாது. இதற்கு முன்னர் லண்டனிலும் கடந்த ஆண்டு நவம்பரில் பாரிஸிலும் 2010 ஆம் ஆண்டளவில் மும்பாய் நகரிலும் இது போன்ற தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாவற்றுக்கும் உச்சமாக 2001-09-11 இல் அமெரிக்காவில் நடந்த தாக்குதல் அமைந்தது.

விமான நிலையம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 36 பேர் கொல்லப்பட்டு, நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். அதற்கு மேலாக பல்லாயிரக்கணக்கானோரை மரணக் கிலி காவுகொண்டுள்ளது. பெல்ஜிய மக்கள் மீது இத்தாக்குதல் ஏற்படுத்தியுள்ள உள ரீதியான தாக்கமே பாரியது.

விமான நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமராவில் சந்தேகநபர்களின் உருவங்கள் பதிவாகியுள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். அதன்படி காலித் அல் பக்ரோயி (27), இப்ராஹிம் அல் பக்ரோயி (30) ஆகிய இரு சகோதரர்களினதும் நஜீம் என்ற மூன்றாவது சந்தேச நபரினதும் உருவங்கள் கெமராவில் பதிந்துள்ளன.

கடந்த வருட பாரிஸ் தாக்குதலுக்கும் இந்தத் தாக்குதலுக்கும் இடையில் தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. 2015 நவம்பர் 13 இல் பிரான்ஸில் நடைபெற்ற தாக்குதல் பெல்ஜியத்திலிருந்தே திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பாரிஸ் நகரத் தாக்குதலின் சூத்திரதாரிகளுள் ஒருவரான ஸலாஹ் அப்துல் ஸலாம் என்பவரை இரு வாரங்களுக்கு முன்பாக பெல்ஜிய பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

அதேவேளை அத்தாக்குதலைத் திட்டமிட்ட மற்றொரு நபரான முஹம்மத் பல்கைத் என்பவரை பெல்ஜிய பொலிஸார் சுட்டுக் கொன்றனர். பாரிஸ் தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு அப்துஸ் ஸலாம் முழுமையாக உட்படுத்தப்படுவார் என பெல்ஜியப் பாதுகாப்புத் துறையினர் தெரிவிக்கின்றனர். அவரை பிரான்ஸுக்கு அனுப்பி வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில்தான் ஸலாஹ் அப்துஸ் ஸலாமின் கைது நடவடிக்கைக்கும் முஹம்மத் பல்கைதின் கொலைக்கும் பழிவாங்கும் நோக்கில் இத்தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. ஐசிஸ் பயங்கரவாதிகள் இதற்கு உரிமை கோரியுள்ளனர்.

ஐசிஸ் அமைப்புதான் இத்தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் என்றால், அதனூடாக அவர்கள் எதிர்பார்க்கும் விளைவுகள் மிகவும் பாரியதாகும். ஏனெனில், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள இடத்திற்கு சமீபமாகவே மெட்ரோ ரயில் நிலையத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் முழு ஐரோப்பிய ஒன்றியத்தையும் வம்புக்கிழுக்கும் ஆபத்தை அது ஏற்படுத்தியுள்ளது.

சிரிய அகதிகளை ஐரோப்பாவில் ஊடுருவாத வண்ணம் நிறுத்துவதற்கும் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை மூடுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் தீவிர மந்திராலோசனையில் இறங்கியுள்ள தருணத்திலேயே ஐசிஸ் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இதே வேளை, கடந்த சில ஆண்டுகளாக பெல்ஜிய அரசாங்கம் அங்கு வாழும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் தீவிரமாக செயற்பட்டு வரும் சூழ் நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

முகத்தை மூடும் நிகாப் அந்நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஹலாலான முறையில் உயிரினங்களைக் கொல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் முஸ்லிம் இளைஞர்களின் வேலையற்றோர் வீதம் அதிகரித்துள்ளது. ஒருவகை விரக்தி மனோநிலையோடு இளைஞர்கள் அங்கு வாழ்கின்றனர்.

இந்நிலையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசுகளுக்கு எதிராக இவ்வாறு மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் மூலம் முஸ்லிம் இளைஞர்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பரந்தளவில் பெற முடியும் என ஐசிஸ் எதிர்பார்த்திருக்கலாம்.

எவ்வாறாயினும், இது போன்று மேற்கு நாடுகளில் நடத்தப்படும் தாக்குதல்கள் மூலம் ஏற்படக் கூடிய விளைவுகள் மிகவும் ஆபத்தானவை. 9/11 தாக்குதலை அடுத்து அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட தேசப் பற்றுச் சட்டம் அமெரிக்க முஸ்லிம்களுக்கும் அவர்களது சுதந்திரத்திற்கும் மிகப் பெரும் இடையூறாக மாறியது.

பாரிஸ் தாக்குதலுக்குப் பின்னர் பிரான்ஸ் அரசாங்கம் பிரகடனம் செய்த அவசரகால நிலை பிரான்ஸ் வாழ் முஸ்லிம்களுக்கு பெரும் திணறலைத் தந்தது. பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமடைந்தன. முஸ்லிம் வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டன. பள்ளிவாயல்கள் சோதனைக்கு உட்பட்டன. அந்நடவடிக்கைகள் அனைத்தும் சேர்ந்து ஒரு வகை உளவியல் சோர்வை உருவாக்கியுள்ளது.

மேற்கு ஐரோப்பாவில் இஸ்லாம் குறித்த பீதியை உருவாக்குவதற்கே ஐசிஸ் இத்தாக்குதல்களை திட்டமிட்டு மேற் கொள்கின்றது. இதன் எதிரொலியை கிட்டிய எதிர்காலத்தில் உலகம் முழுவதும் கேட்கக் கூடிய ஆபத்து உள்ளது. மிகக் குறிப்பாக முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ள நாடுகளில் அரசுகள் முஸ்லிம்களை ஒடுக்கவும், பயங்கரவாதத்தின் பெயரால் பாதுகாப்புக் கெடுபிடிகளை ஏற்படுத்தவும் இத்தகைய தாக்குதல்களை வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடும்.

தாக்குதல் நடைபெற்ற அடுத்த தினம் இலங்கை விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு, வெளிநாட்டிலிருந்து வரும் முஸ்லிம்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். உள்ளூர் ஊடகங்கள் பெல்ஜியத் தாக்குதலை எடுத்துக் காட்டி, இலங்கையிலும் அத்தகைய பயங்கரவாதத்தோடு தொடர்பானவர்கள் ஆறு இடங்களில் உள்ளனர் எனச் செய்தி வெளியிட்டன.

இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் உசார் அடைந்தனர். ஐசிஸ் அமைப்புடன் தொடர்பானவர்கள் இலங்கையில் 6 இடங்களில் உள்ளனர் என்றும் இலங்கையில் அவ்வியக்கத்தை அரசாங்கம் இன்னும் தடைசெய்யாததன் காரணமாக அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, இலங்கையில் அத்தகையதோர் இயக்கம் இல்லை எனக் கூறி வந்த புலனாய்வுப் பிரிவு திடீரென இவ்வாறு அறிக்கை விட்டிருப்பது முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்து அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஐசிஸ் பயங்கரவாதத்தை உருவாக்கிய மேற்கு சக்திகள் தமது நோக்கத்தை பரந்துபட்ட வகையில் அடைந்து வருகின்றனர் என்பதை மீளவும் நிறுவியுள்ளனர். ஏகாதிபத்திய சக்திகளின் அந்த நோக்கங்களுள் உலகளாவிய இஸ்லாமிய பீதியை உருவாக்குவதே முதன்மையானது. அதை மேற்கு ஐரோப்பாவில் நடைபெறும் தாக்குதல்கள் உறுதி செய்துள்ளன.

பயங்கரவாதத்திற்கெதிரான போரிற்குப் பின்னரும் மேற்கு நாடுகளில இஸ்லாத்தைத் தழுவுகின்றோரின் வீதம் பெருமளவு அதிகரித்துள்ளது. BBC உலக சேவை 2010 இல் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி இன்னும் 100 வருடங்களிற்குப் பின்னர் இஸ்லாம் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்பான்மை சமயமாக இருக்குமென்று கணிக்கப்பட்டது. பிரான்ஸில் இஸ்லாத்தைத் தழுவுகின்றவர்களின் வீதாசாரத்தைக் கணிப்பிட்டால் இன்னும் 100 ஆண்டுகளில் அந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாக இருப்பர். தர்க்க ரீதியிலும், புள்ளி விபர அடிப்படையிலும் BBC இன் ஆய்வு இவ்வுண்மையை நிறுவியுள்ளது.

பிரிட்டன், ஜேர்மன், ஐக்கிய அமெரிக்காவிலும் இது போன்ற மாற்றமே நிகழ்ந்து வருகின்றது. எனவே இஸ்லாம் குறித்த ஒரு உலகளாவிய பீதியை உருவாக்க வேண்டுமென்ற தேவை மேற்குலகில் எழுந்துள்ளது. இஸ்லாமியப் பீதி (Islamophobia) இன்று ஒரு தொழில் துறையாகவே (Industry) வளர்ந்து வருகின்றது. ஐரோப்பாவின் வலதுசாரிக் கட்சிகள், அரசாங்கங்கள், ஊடகங்கள், சினிமாத்துறை, தீவிரவாத இயக்கங்கள் என அனைத்தும் ஒன்றிணைந்து உலகளாவிய இஸ்லாமியப் பீதியை உருவாக்கும் ஒரு வலைப்பின்னலோடு (Islamophobia Network) செயற்படுகின்றன. இதன் பிரதிபலிப்புகளை இன்று மேற்கில் தெளிவாகக் காணலாம்.

ஐரோப்பாவின் சமூக, கலாசாரப் பன்மைத்துவத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளில் அதி தீவிர வலது சாரிக் கட்சிகள் இறங்கியுள்ளன. அமெரிக்காவில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கிறார்கள்.

ஹொலிவூட் தயாரிக்கும் 100 திரைப் படங்களில் 10 படங்கள் இஸ்லாத்தை பயங்கரவாதத்தோடும், வன்முறையோடும் தொடர்புபடுத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றன. அமெரிக்க ஹொலிவூட் மாத்திரமன்றி, இந்தியாவின் பொலிவூட் மற்றும் தமிழகத்தின் கொலிவூட் வரையும் இதே அரசியலைத்தான் பின்பற்றுகின்றன. எனவே, இஸ்லாம் குறித்து ஒரு பயத்தை முஸ்லிம் அல்லாதோரின் உள்ளங்களில் உருவாக்க வேண்டும். அந்த பயத்தை உருவாக்கும் நோக்கிலேயே ISIS அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம், இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய இயக்கங்கள் அனைத்தும் பயங்கரவாதத்தையே பரப்புகின்றன. வன்முறைகளை தமக்குரிய வழியாக எடுத்துக் கொள்கின்றன எனும் கருத்தை சர்வதேச சிவில் சமூகத்தில் ஆழப்பதிப்பதே இவ்வமைப்பை உருவாக்கியவர்களின் பிரதானமான நோக்கமாகும். ISIS மட்டுமன்றி நைஜீரியாவின் போகோ ஹறாம், சோமாலியாவின் அஷ்ஷபாப், மாலியின் அன்ஸாருத்தீன், ஆப்கானிஸ்தானின் தாலிபான், அரபு நாடுகளின் அல்கையிதா என்று பல்வேறு ஆயுதக் குழுக்கள் இஸ்லாமியப் பீதியைப் பரப்புவதற்கு எதிரிகளால் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ISIS இதில் சற்றுக் காட்டமாக இயங்குகின்றது.

ஸாதிக் குறிப்பிடுவது போன்று ஏகாதிபத்தியம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இஸ்லாத்தினதும் முஸ்லிம்களதும் எழுச்சி அவர்களுக்கு அச்சுறுத்தல்தான் என்பதை மீளவும் நிரூபித்துள்ளனர். அதற்கான ஒரு கருவியாக ஐசிஸ் பயன்படுத்தப்படுகின்றது.

## ஐசிஸின் பின்னணியில் உள்ளது யார்?

ISIS என்பது ஒரு அமெரிக்க பிரிட்டன் இஸ்ரேலிய முக்கூட்டுத் தயாரிப்பு என்பதை நிரூபிக்கின்ற சில கேள்விகளை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். அவை கீழ்வருமாறு:

1. இவ்வமைப்பினரிடம் இருக்கின்ற ஆயுதங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? அவற்றை எவ்வாறு கொள்வனவு செய்கிறார்கள்? இது முக்கியமான கேள்வியாகும். ஏனெனில், மத்திய கிழக்கு அரபு நாடுகள் எதுவும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை. பாரம்பரிய ஆயுதத் தொழிற்சாலைகள் கூட அங்கில்லை. அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்ற நாடுகளாகவே அவை உள்ளன. இந்நிலையில் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் கனரக ஆயுதங்களை ISIS எங்கிருந்து பெற்றது என்பது சந்தேகத்திற்கிடமான கேள்வியாகும்.
2. 200 000 அங்கத்தவர்களைக் கொண்ட இவ்வியக்கம் அங்கத்தவர்களுக்கு ஊதியம் வழங்கவும் போருக்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்யவும், உணவுக்காகவும் தேவையான நிதியை எங்கிருந்து பெறுகின்றது?
3. நெருப்பின் மூலம் சுட்டுக் கொலை செய்தல், நீரில் மூழ்கடித்துக் கொலை செய்தல் போன்ற இஸ்லாம் ஒரு துளியும் அனுமதிக்காத கொடூரமான வன்முறைகளை எப்படிப் பகிரங்கமாக மேற்கொள்கின்றார்கள்?
4. இவர்களின் கொடூர செயற்பாடுகள் எப்படி மிக விரைவாக சர்வதேச ஊடகங்களுக்கு வருகின்றன?
5. இதுவரை இவர்களது எதிரிகள் யாரென தெளிவாகப் பிரகடனப்படுத்தாமல் இருப்பது ஏன்?
6. சிரியாவில் இருந்து ஈராக் நகரங்களை நோக்கி விரைந்ததன் காரணமென்ன? கடந்த 40 ஆண்டுகளாக சிரிய மக்களை அடக்கி ஒடுக்கி வரும் பாத் கட்சி அரசாங்கத்தை எதிர்த்துப் போராடாமல் அந்நாட்டுத் தென்கிழக்குப் பகுதியில் மாத்திரம் (றக்கா) இவர்கள் ஒதுங்கியதேன்?
7. இன்று இவ்வியக்கம் எகிப்திற்கும் பலஸ்தீனத்திற்கும் எல்லைப்புறமாக உள்ள ஸினாய் என்ற இடத்தில் நிலைகொண்டுள்ளது. ஸினாய் இஸ்ரேலுக்கு சமீபமாக உள்ள எல்லைப் புறமாகும். இந்தப்பகுதியில் பயிற்சி முகாம் அமைத்து வன்முறைகளில் ஈடுபட்டு வரும் ISIS குறித்து இஸ்ரேல் மௌனம் காத்து வருவதேன்?
8. ஸினாயில் இருந்துகொண்டு எகிப்திய இராணுவத்தோடு மோதி வரும் ISIS உறுப்பினர்களுக்கு காயம் ஏற்பட்டால் இஸ்ரேலிய மருத்துவ மையங்களில் சிகிச்சை வழங்கப்படுவதேன்?
9. இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பை விட ISIS அவ்வளவு தூரம் கொடுமையானது அல்ல என இஸ்ரேலியப் பிரதமர் நெடன்யாஹு கூறியிருப்பதேன்? அப்படியானால் ISIS அமைப்பிற்கும் இஸ்ரேலுக்குமான தொடர்பென்ன?
10. சிரிய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சில ISIS அங்கத்தவர்கள் இஸ்ரேலியப் பிரஜைகள் என்பது நிரூபணம் செய்யப்பட்டது. இஸ்லாமிய கிலாபத்தை உருவாக்கும் நோக்கில் போராடுவதாக கூறிக்கொள்ளும் இவ்வமைப்புக்கும் யூதர்களுக்குமிடையிலான தொடர்பென்ன?
11. அமைதியாக உள்ள அரபு நாடுகளில் இவர்கள் ஊடுருவி பள்ளிவாயல்களில் குண்டு வைப்பதேன்? அதன் மூலம் முழு இஸ்லாமிய உலகையும் ஆயுத மோதலொன்றுக்குள் தள்ளிவிட இவர்கள் எத்தனிப்பதேன்? குவைத் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இவர்கள் குண்டுகளை வெடிக்க வைத்து பள்ளி வாயல்களில் பலரைக் கொன்று குவித்துள்ளனர்.
12. அரபு வசந்தம் எந்தெந்த நாடுகளில் எழுந்ததோ அங்கு இவர்கள் திட்டமிட்டு ஊடுருவுகின்றார்கள். அந்த வகையில் எகிப்து, லிபியா, யெமன் போன்ற நாடுகளில் ISIS ஊடுருவியது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவுக்கு ஜமாஅத்துஸ் ஸலாமாவால் முன்மொழியப்படும் பிரேரணைகள்



அறிமுகம்

புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக பொது மக்களது கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மிகவும் வரவேற்கத்தக்கது.

இலங்கை நாட்டில் வசிக்கும் அனைத்து இன மக்களதும், சமூகக் குழுக்களினதும் அபிப்பிராயங்களைப் பெற்று, அவர்களது பங்களிப்பின் ஊடாக பரந்து பட்ட கலந்தாலோசனையின் மூலம் வரையப்படும் இந்தப் பொறிமுறையானது, நமது நாட்டின் ஜனநாயகப் பண்பையும் வெளிப்படைத் தன்மையையும் மேலும் வலுப்படுத்தும்.

இந்த வகையில் கீழ்வரும் அபிப்பிராயங்களை தங்களது மேலான கவனத்திற்கு பரிந்துரை செய்கிறோம்.

**1. நாட்டைக் கட்டியெழுப்புதல்**

பிரிபடாத ஒன்றுபட்ட இலங்கை என்பதன் அடிப்படையில், நாட்டை சமூக நீதி, அடிப்படை மனித உரிமை, ஜனநாயகப் பெறுமானங்களின் ஊடாக கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சட்டத்திற்கு முன் சமமாக மதிக்கப்பட்டு, சட்ட ஆட்சித் தத்துவம் பேணப்பட வேண்டும்.

**2. இலங்கையின் பன்மைத்துவம்**

இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் இலங்கை நாடு உரித்தானதாகும். நாட்டின் பல்லின, பல்மத, பல்மொழி, பல்கலாசார, பன்மைத்துவப் பண்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**3. அரசாங்க முறை**

அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலம் மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை முறையானது மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றமானது செனட் சபை, பிரதிநிதிகள் சபை ஆகிய இரு சபைகளைக் கொண்டமைதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மேலும் பலப்படுத்தப்படல் வேண்டும்.

எல்லா இனங்களினதும் விகிதாசாரம் பேணப்படும் வகையில், இவ்விரு சபைகளிலும் மக்கள் பிரதிநிதித்துவம் அமைதல் வேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களைவிட கூடுதல் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள மாகாண சபை முறையில் ஆளுனரது அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

தற்போது அமுலில் உள்ள ஒன்பது (9) மாகாணங்களும் தனித்தனியாகவே தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டு அவை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

**4. ஜனாதிபதி**

மக்களால் நேரடியாக தெரிவு செய்யும் ஜனாதிபதி முறை இருத்தல் வேண்டும். ஆனால், தற்போதைய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைக்கப்படுதல் வேண்டும். (உதாரணமாக - 19 ஆம் திருத்தத்தில் உள்ளவாறு அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்.)

**5. சிறுபான்மைக் காப்பீடும் சிறப்பு ஏற்பாடும்**

சோல்பரி அரசியல் அமைப்பில் இருந்தது போன்ற, சிறுபான்மையினரது நலன்களையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தும் வகையிலான தனியான ஏற்பாடுகள் புதிய அரசியல் அமைப்பிலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**6. தேர்தல் முறை**

தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையே அதிக ஜனநாயகத் தன்மை வாய்ந்தது. எனினும் தேர்தல் முறையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படின், அது கலப்பு தேர்தல் முறையாக அமைதல் வேண்டும். (உதாரணம் - ஜேர்மன் முறை)

புதிய தேர்தல் முறையானது, எல்லா இனங்களினதும் - குறிப்பாக சிறுபான்மையினரது இன விகிதாசாரத்தின் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் அமைதல் வேண்டும்.

மாவட்ட சனத் தொகையில், குறைந்த பட்சம் 5 வீதம் மக்கள் தொகையைக் கொண்ட சிறுபான்மையினர் காணப்படும் பட்சத்தில், அவர்கள் சார்பான ஒரு பிரதிநிதி பாராளுமன்றத்திலும், மாகாண சபையிலும் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை தேர்தல் முறை உறுதி செய்தல் வேண்டும்.

அவசியமான இடங்களில் பல அங்கத்தவர் தொகுதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களது பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில், தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும். இதன்போது அனைத்து சமூகங்களது பிரதிநிதிகளது பங்கேற்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

**7. வளப் பங்கீடும் அரச நியமனங்களும்**

வளப் பங்கீட்டில் முறையே தேசிய, மாகாண, மாவட்ட இன விகிதாசாரம் பேணப்படுதல் வேண்டும்.

அரச நியமனங்கள் திறமை அடிப்படையிலும் இன விகிதாசார அடிப்படையிலும் அமைதல் வேண்டும். இதன் போது வெளிப்படைத்தன்மை பேணப்பட்டு பாரபட்சமற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**8. மொழி உரிமையும், மத கலாசார உரிமையும்**

எல்லா மதத்தவர்களும் தங்களது மதத்தையும் கலாச்சாரத்தையும் சுதந்திரமாக பின்பற்றக் கூடிய சூழல் யாப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பன அரச கரும மொழிகளாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பிரஜையும் தனக்கு விருப்பமான மொழியில் கருமம் ஆற்றுவதற்கு வகை செய்யப்படல் வேண்டும்.

**9. ஆணைக் குழுக்கள்**

அவசியமான சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்படுதல் வேண்டும். இவ்வாறான ஆணைக்குழுக்கள் மூலம் லஞ்சம், ஊழல் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். சமூக அநீதி ஒழிக்கப்பட்டு, சம வாய்ப்பு வழங்கப்படுவதோடு, பொறுப்புக் கூறல் உத்தரவாதப்படுதல் வேண்டும்.

**10. நீதித்துறை**

நீதித்துறையின் சுயாதீனம் பேணப்படுவதோடு, நீதித்துறையின் கட்டமைப்புகள் சாதாரண மக்களுக்கு பயன்தரும் வகையில் விஸ்தரிக்கப்படல் வேண்டும்.

அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை மாகாண உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு வகை செய்தல் வேண்டும்.

தனியான அரசியல் அமைப்பு நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

**11. தகவல் அறியும் உரிமையும் வாழும் உரிமையும்**

தகவல் அறியும் உரிமை, வாழும் உரிமை உள்ளிட்ட அவசியமான அடிப்படை உரிமைகள் யாப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**12. மக்கள் பிரதிநிதிகள்**

தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கான அடிப்படைத் தகுதிகள், ஒழுக்கக் கோவை என்பன உருவாக்கப்பட வேண்டும்.

**13. அரச கொள்கைகளும் பொதுத் திட்டமிடலும்**

அரச கொள்கைகள், பொதுத் திட்டமிடலும் கட்சிகளின் விருப்பிற்கு ஏற்ப அடிக்கடி மாற்றியமைக்கப்படாமல், நிலையான மூலோபாய வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். இதனை இலகு படுத்தும் வகையில் அரச கொள்கைகள் மற்றும் திட்டமிடல் தொடர்பான ஆணைக்குழுக்கள் (இந்தியாவில் உள்ளது போல்) உருவாக்கப்படல் வேண்டும்.

ஜமாஅத்துஸ் ஸலாமா
கொழும்பு
29.03.2016

# சம்மாந்துறை அரசியல் சமூக ஆய்வு மையம் முன்வைத்துள்ள புதிய அரசியல் யாப்புக்கான முன்மொழிவுகள்



**1. இலங்கை அரசியலமைப்பின் 6ம் அத்தியாயம் அரச கொள்கையின் தத்துவங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.**

அதில்.....

- The Presidential Council For Minority Rights ஏற்படுத்தப்படல் வேண்டும். இதில் மூவினங்களையும் கொண்ட நீதிபதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இடம்பெறலாம். இது சிங்கப்பூரின் அரசியல் யாப்பில் 1971 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- எந்தவொரு மதத்தினையும் பாதிக்கின்ற வகையில் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்படக் கூடாது.
- இலங்கை ஒரு பல்லின சமூக கலாசாரங்களைக் கொண்ட நாடு என யாப்பில் வரைதல்

**அடிப்படை உரிமைகள்**

மத நிந்தனை தடுப்பு விதிகள் புதிய யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ பிற மதத்தைத் தூற்றுதல், எழுதுதல் சமூக வலைத்தளங்களில் அல்லது ஊடகங்களில் இது தொடர்பான செய்திகளை, தகவல்களை பரப்புதல்; தூண்டுதல், கூட்டங்களை நடாத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாக யாப்பில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**2. தேர்தல் முறை**

ஜனாதிபதித் தேர்தல்: ஜனாதிபதித் தேர்தல் முறை தொடர்ந்து இருந்தவாறே அமைதல் வேண்டும். ஏனெனில், ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு செல்லுபடியான மொத்த வாக்குகளில் அரைவாசிக்கு மேல் (50%) பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சரத்து சிறுபான்மையினங்களுக்கான ஒரு காப்பீடாக அமைந்துள்ளது. மேலும் ஜனாதிபதி நாட்டின் பொதுச் சின்னமாக அமைவதனால் சிங்கள, தமிழ், முஸ்லிம்களின் காவலனாக யாப்பு அவரை எதிர்பார்க்கின்றது. இவ் ஏற்பாடு சிறுபான்மை கட்சிகளுக்கு பேரம் பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது.

பாராளுமன்ற தேர்தல்: விகிதாசாரத் தேர்தல் முறையில் பல்வேறு குறைபாடுகள் அரசியல் அரங்கில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே விகிதாசார தேர்தல் முறை கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து பல கசப்பான அனுபவங்களைத் தந்துள்ளது. எனவே இம்முறையில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

**ஜேர்மன் தேர்தல் முறை அல்லது கலப்புத் தேர்தல் முறை**

தொகுதிமுறையும் மாவட்ட விகிதாசாரமும் இணைந்த தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். இலங்கையில் நடைமுறையில் உள்ள 160 தொகுதிகளும் இருக்க வேண்டும். ஆசனங்கள் 225 இலிருந்து 250 ஆக அதிகரிக்கப்படல் வேண்டும்.

தொகுதிகள் 160
மாவட்ட விகிதாசாரம் 70
தேசி யப் பட்டியல் 20
மொத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 250

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கும் நிதி 10m - 20m ஆக அதிகரிக்கப்பட வேண்டும். அதே போன்று மாகாண சபை உறுப்பினர்களின் நிதி 10m ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.

**3. தேசியப் பட்டியல்**

நேரடி அரசியலில் சம்பந்தப்படாதவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். 29 உறுப்பினர்கள் 20 ஆக குறைக்கப்படல் வேண்டும். 10 உறுப்பினர்கள் கட்சிகளின் வாக்கு விகிதாசார அடிப்படையில், 10 உறுப்பினர்கள் சிறுகட்சிகளுக்கும் 20 உறுப்பினர்களும் துறைசார் நிபுணர்களாக அமைதல் வேண்டும். வைத்தியம், பொருளாதாரம், பொறியியல், வங்கி, கல்வி, தொழிநுட்பம், சட்டம் போன்ற பல துறைகள்

**தொகுதி களின் சமத்துவமற்ற நிலை**

இலங்கையில் நடைமுறையில் உள்ள 160 தொகுதிகளிலும் வாக்காளர் தொடர்பில் சமத்துவமற்ற தன்மை காணப்படுகின்றது. உ-ம்:

| தொகுதிகள் | வாக்குகள் |
|---|---|
| கல்முனை | 71000 |
| அம்பாறை | 160000 |
| ரத்மலான | 50000 |
| மஹரகம | 100000 |

இந்நிலை மாற்றப்பட்டுதொகுதிகளில் வாக்குகளில் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

**04. 19 ஆவது திருத்தம்**

19 ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். ஜனாதிபதியின் எதேச்சதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டு பாராளுமன்ற அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பிரதமர் பிரதான நிர்வாக அதிகாரியாக மாற்றப்பட்டுள்ளார். எனவே பல ஜனநாயக அம்சங்கள் இத்திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இதில் மாற்றங்கள் கொண்டுவரக் கூடாது.

**05. நிர்வாகத் துறையைப் பலப்படுத்தல்**

- முகாமைத்துவ வரவு-செலவுத் திட்டக் குழு: (The office of management and the budget) வருடாந்த வரவு-செலவு திட்டம், மற்றும் அவை தொடர்பான புள்ளி விபரங்கள், ஆய்வுகள் மேற்கொண்டு நிதி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும்.
- பொருளாதார ஆலோசகர் குழு: (Council of Economic Advisers) இது ஜனாதிபதி, பிரதமர்களுக்கு ஆலோசனை வழங்கும்.
- கொள்கை திணைக்கள காரியாலயம்: (The Office of the Policy Department) இவை நாட்டின் முக்கிய விடயங்கள் தொடர்பான கொள்கைகளை விடுத்து நிர்வாகத் துறையினருக்கு ஆலோசனை வழங்கும். இந்த மாதிரிகள் அமெரிக்க அரசியல் முறைமையில் நாட்டின் ஜனாதிபதியின் கீழ் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**06. இன விகிதாசார முறை பின்பற்றப்படல்**

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், ஆட்சேர்ப்பு விடயங்களில் இன விகிதாசாரம் பேணப்படல் வேண்டும். கடந்த 30 ஆண்டு கால யுத்தத்திற்கான பிரதான காரணிகளில் இதுவும் ஒன்றாகும். எனவே பாராளுமன்றத்தில் இது தொடர்பான சட்ட மூலம் கொண்டு வரப்படல் வேண்டும். இதன் மூலம் சமத்துவம் பேணப்படும்.

**07. முஸ்லிம் தனியார் சட்டங்களை வலுவூட்டல்**

காதி நீதிமன்றங்கள், இணக்க சபைகள் என்பவற்றிற்கு மேலும் அதிகாரங்கள், சட்ட அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும்.

**08. அதிகாரப் பகிர்வு**

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவனச் சிங்கம்





(சுலைமான் ஹாதிர்) - வரலாற்று நவீனம்

- ஹமதானி

சென்ற வார தொடர்...

அன்பு, இரக்கம், மென்மை எல்லாம் முஃமினிடம் மிளிர வேண்டிய பண்புகள் தான். ஆனால், அந்த அன்பு மென்மையெல்லாம் அவனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நெகிழ்வையோ தளர்ச்சியையோ ஏற்படுத்தக் கூடாது. எனவே தான் பொறுப்புள்ளவர்கள் அதன் போது சற்று கடினமாக நடந்து கொள்வர். கண்டிப்பாக தடுக்கப்பட்டுள்ள எல்லையில் இவர்கள் நுழைந்தால் பொறுப்பு மிக்க சுலைமான், அவர்களை விசாரிப்பதில் கடின சித்தனாக இருக்கப் போவதில் வியப்பொன்றுமில்லை. துப்பாக்கியை ஏந்தியவாறு வாகனத்தின் அருகே நின்று



''இறங்குங்கள் அனைவரும்!... யாரும் எதுவும் பேசக் கூடாது.!'' என்று இடியாய் இடித்தது சுலைமானின் சிம்மக் குரல்.

நிர்மலமான வானில் திடீரென கார்முகில்கள் தோன்றி இருளாகியது போன்று சுலைமானின் அதட்டலால் வெள்ளையர்களின் முகங்கள் சுருங்கிக் கருத்துவிட்டன. அவர்களின் எதிர்பார்க்கைக்கு மாற்றமாக எல்லாம் நடப்பது போல ஒவ்வொருவரும் அசடு வழியப் பார்த்துக் கொண்டனர். அதே வேளை அவர்களது கடைக் கண்ணால் நயனபாஷையில் ஒவ்வொருவரும் பேசிக் கொள்ளவும் தவறவில்லை. அமைதியாய் அனைவரும் இறங்கினர். சிலர் தமது கைப்பைகளை எடுத்தவாறே வாகனத்திலிருந்து இறங்கினர்.

''இங்கு ஏன் வந்தீர்கள்?... தடுக்கப்பட்ட எல்லைப் பிரதேசம் என்று உங்களுக்குத் தெரியாமலா வந்தீர்கள்.. ஹூம் சொல்லுங்கள்.'' மீண்டும் சுலைமானின் கர்ஜனை விஸ்வரூமெடுத்தது. அதற்குள் அவர்களில் கமுகு மரம் போன்று உயர்ந்து எடுப்பான தோற்றத்துடன் காட்சியளித்த ஒருவன் சுலைமானை மெல்ல அணுகி ''நீங்கள் இந்த இடத்திற்குப் புதியது போலும்'' அதனால் தான் எங்களை அறியவில்லையோ!'' என்று உரித்த வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று நாசுக்காகப் பேச்சுக் கொடுத்தான். அவனது இந்தப் பேச்சு அதற்குமுன் பலமுறை அவர்கள் இங்கு வந்துள்ளார்கள் என்பதையும், இதற்கு முன்னர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தவர்களிடம் எல்லாம் வாலையாட்டி அடிக்கடி எகிப்தில் பிரவேசித்துள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டியது.

''சட் அப்! உங்களை நான் தான் விசாரிக்கிறேன். நீங்கள் என்னையல்ல.! நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள் இங்கு ஏன் வந்தீர்கள்? எதற்கு? என்றெல்லாம் கேள்விச் சரங்களைப் பொழிந்தான், சுலைமான்.

அங்கு வந்திருந்த அவர்கள் உண்மையில் உல்லாசப் பயணிகள் அல்லர். மாறாக எகிப்திலே உளவு வேலை பார்க்க வந்த மொஸாட்டின் கைக் கூலிகள்தான். அவர்கள் வழக்கமாக இந்த எல்லை வீதியினூடாக எகிப்தினுள் களவாக நுழைந்தனர். அப்பொழுதெல்லாம் அங்குள்ள காவலர்களுக்கெல்லாம் ''கிம்பளம்'' கொடுத்து அவர்களைத் தமக்கு சார்பானவர்களாக மாற்றி இருந்தனர். வெனிஸ் நகர வியாபாரி ''சைலக்''கின் பரம்பரையில் வந்த அந்த யூதர்கள். ஆனால், இன்றோ அந்த இடத்தில் சுலைமான் ஹாதிர் நின்றதனால் அவர்களின் நிலை சிங்கத்தின் வலையில் சிக்கிய ஆட்டின் கதையாகிவிட்டது.

யூதர்கள் மிகவும் தந்திரம் படைத்தவர்கள். நரித் தந்திரம் கொண்ட அவர்கள் தங்களது இலட்சியங்களை அடையும் பாதையில் எந்தவிதமான வழிமுறைகளைக் கையாளவும் பின்நிற்கவில்லை. பணப் பேய்களான அவர்கள் வட்டி, கிம்பளம் போன்றவற்றால் வரலாற்றுக் காலம் தொட்டே மக்களை ஏய்த்து வந்துள்ளனர். அல்லாஹ்வின் நபி மூஸாவுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை அறியாத அவர்கள் நபியிடம் விடாக்கண்டியாக கேள்விகளைக் கேட்டு நித்திய இறைசாபத்திற்கு உற்பட்டவர்கள். ஏன் சுவனத்து ''மன்னு ஸல்வாக்களை மறுத்து இழிந்த இவ்வுலகின் திண்பண்டங்களைக் கேட்டவர்கள் அல்லவா இவர்கள். இவ்வாறு அவர்களது வரலாற்றுப் பக்கம் முழுவதும் கறைபடிந்ததாகவே உள்ளது. இதனால் இவர்களது உள்ளங்கள் உலகின் அற்பவாழ்வுக்காக எதனையும் செய்யத் துணியும் கல்நெஞ்சங்களாக மாறிவிட்டன. இல்லை கற்களை விடக் கடினமாகிவிட்டன. இக் கற்களிலும் சில தானாக ஊற்றுகள் பாய்வன உண்டல்லவா!... ஏன் பிழந்தால் நீர் தாரைகள் சீறிட்டுப் பாயும் கற்களும் உண்டல்லவா? ஆனால் இவர்கள்?

ஆம் அதே பரம்பரையில் வந்த யூதர்கள் தான் சுலைமான் முன் நின்றனர். (எனவே தனா) 'கிம்பளம்' என்ற வலையை சுலைமானுக்கும் வீசி அவனை வலைத்துப் பிடிக்க அவர்கள் முனைந்தனர். அவனை விலைக்கு வாங்க அறுதியிட்டனர். அதற்காக வேண்டி சுலைமான் கேள்விக் கணைகளை சாரிமாரியாகக் தொடுத்த போது இவ்வாறு பேச்சுக் கொடுத்தான் அவர்களில் ஒருவன்.

''ஜெனரல்! நீங்கள் தான் இந்த எல்லை அரண் காவலர்களில் மிகவும் தகுதியானவர். உங்களைப் போன்றவர்களிடமிருந்து யாரும் தப்ப முடியாது தான். எனவே, நாங்கள் அப்பட்டமாகவே சொல்கிறோம் நாங்கள் அடிக்கடி இந்தப் பக்கமாக இயற்கைக் சூழல் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவரும் உல்லாசப் பயணிகள். இதற்கு முன் இங்கே காவலுக்கு நின்ற அனைவரும் எம்மை அறிவர். ஜெனரல் அவர்களுக்கு எங்களை அனுமதிப்பது கஷ்டமாகத் தோன்றினால் எங்களிடம் ஏதாவது பெற்றுக் கொண்டு அனுமதித்தாலும் ஆட்சேபனை இல்லை. நீங்கள் புதியவர்தானே உங்களை நாங்கள் அறிமுகமாகிப் பழகிக் கொள்ள ஏதாவது சன்மானம் அளிப்பது எங்களது கடமை என்றே கருதுகிறோம்.'' என்று கூறியவாறு சற்று உரக்க சுலைமானைப் பார்த்துச் சிரித்தான். அதற்குள் அவர்களிடையே இருந்த இன்னொருவனும் ''ஜெனரல் உங்களது பெயரை அறியலாமா?! என்று நாசுக்காகக் கேட்டான்.

சத்தியவாதிகளை விலைக்கு வாங்கும் விபரீதம் இன்று நேற்று உருவான நாடகமல்ல. எட்டி வீட்டுப் பட்டத்து ராணிகளையும் கொட்டும் தங்கத்தையும் பட்டை வைரக் குவியல்களையும் கொடுத்து ரஸூல் (ஸல்) அவர்களையும் காபிர்கள் முயற்சிக்கவில்லையா?

தூக்கு மரத்தின் தொங்கு கயிற்றில் உயிர்துறந்த ஸைய்த் குதுபிடம் கல்வியமைச்சர் பதவியைக் காட்டி அவரை மயக்க முனையவில்லையா அன்றைய அரசு. இப்படி எத்தனை எத்தனையோ சொல்லலாம். அத்தனை சத்திய சீலர்களும் தம்மை மயக்க வீசப்பட்ட செல்வம், அரசு, புகழ் என்ற எந்த வலையிலும் சிக்காது மேலும் உரம் பெற்று தமது சத்தியப் பாதையில் இன்னும் உறுதியாக நின்றனர் என்பதே வரலாறு எமக்குப் பாடம் சொல்லித் தருகின்றது. இந்த வகையில் சுலைமான் ஹாதிரும் விதிவிலக்கில்லையே! அந்த உத்தமர்களின் வழியில் வந்த அபூர்வ ஜீவியல்லவோ அவன்!

எனவே, தான் அந்த உல்லாசப் பயணிகள் அவ்வாறு கூறும் பொழுது அவர்கள் தனது இலட்சியத்தின் நாடியில் கை வைத்து பரிசோதித்துப் பார்ப்பதை உணர்ந்து கொண்டான். அவர்களது பேச்சுகள் எதனைச் சுற்றி வட்டமிடுகின்றன என்பதையும் தெட்டத் தெளிவாக விளங்கிக் கொண்டான். அவனை விலைக்கு வாங்கி அதன் மூலம் தாய் நாட்டினுள் அவர்கள் நுழைய முனைகின்றனர். அல்லவா!

சுலைமான் நினைத்தது பிழைக்கவில்லை. அப்பொழுது தான் அவர்களில் ஒருவன் தனது கைப்பையைத் திறந்து சுளை சுளையாக டொலர் நோட்டுகளை எண்ணி பவ்யமாக ஒரு கவரில் இட்டு சுலைமான் ஹாதிரிடம் நீட்டியவாறு ''ஜெனரல் இதோ எங்களது அன்பளிப்பு. நீங்கள் இதை வைத்துக் கொள்ளுங்கள்'' எனக் கூறிக் கொண்டிருக்க சுலைமானின் சிந்தனையில் யூதர்கள் பற்றி குர்ஆன் கூறும் அந்த வசனம் பளிச்செனத் தோன்றியது.

سَمّٰعُوْنَ لِلْكَذِبِ اَكّٰلُوْنَ لِلسُّحْتِ فَاِنْ جَآءُوْكَ فَاحْكُمْ بَيْنَهُمْ اَوْ اَعْرِضْ عَنْهُمْ وَاِنْ تُعْرِضْ عَنْهُمْ فَلَنْ يَّضُرُّوْكَ شَيْـٴًـا

''(இந்த யூதர்கள்) பொய்யையே அதிகமாக செவிமெடுப்பதுடன் பாவமான (இலஞ்சத்)தையே அதிகமாக சாப்பிடுகின்றனர். ஆகவே, அவர்கள் (தீர்ப்புத் தேடி) உம்மிடம் வந்தார்களானால் அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக! அல்லது, அவர்களை புறக்கணித்து விடுவீராக! நீர் அவர்களை புறக்கணித்து விட்டாலும் அவர்களால் உமக்கு யாதொரு நீங்கும் செய்ய முடியாது. (5:142)

இந்த வசனங்களின் கருத்துக்களை மீண்டும் ஒருமுறை மனதில் பசுமையாக்கிக் கொண்டான். இப்பொழுது பணத்தை அவனிடம் நீட்டியவனைக் காண சுலைமானுக்கு சினம் பொங்கி வழிந்தது. கொவ்வைப்பழமாய் அவனது முகம் சிவந்தது. அதில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஆஜானபாகுவான அவனது வலக்கரத்தில் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி பணத்தை நீட்டியவனை கண்ணத்தில் பளாரென அறைந்தான்.

''இலஞ்சம் கொடுத்து என்னை வாங்க நினைத்தாயா? உண்மையைச் சொல்! நீர் யார்?? உன்னுடன் வந்துள்ளவர்கள் யார்? நீங்கள் எல்லாம் உளவாளிகளில்லையா? உண்மையை கக்காதவரையில் இங்கியிருந்து நீங்கள் ஒரு சானும் நகர முடியாது?...

இன்றேல் நீங்கள் எல்லாம் இங்கே பிணமாகத்தான் வீழ்வீர்கள்'' என உரக்க ரௌத்திரிகாரத் தொனியில் சப்தமிட்டான் சுலைமான். அந்த உளவாளிகளுக்கு அவனது ரௌத்திரகார சத்தம் குலைநடுக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

பணத்தை நீட்டியவன் அதனை தனது பொக்கற்றுக்குள் நுழைப்பது போன்று கையை விட்டு சட்டென ஒரு ரிவோள்வரை எடுத்தான். கம்பியூட்டர் மூளை படைத்த சுலைமான் இதனை எதிர்பாத்திருந் தவன் போன்று, ''அல்லாஹ் வின் விரோதியே என்னைக் கொன்று விட்டு விடயத்தை சாதிக்க முனைகிறாயா?.. இதோ பெற்றுக்கொள்..'' என்றவாறு அடுத்த கணம் ''அல்லாஹ் அக்பர்'' என்றவாறு துப்பாக்கியின் ஆளியைத் தட்டிவிட்டான். ''டுமீல்'' ரிவால்வரை எடுக்க முயன்றவன் ஸ்தலத்திலேயே பிணமாகச் சரிந்தான்.

தொடரும்...

# பலஸ்தீனின் பெருமதி

யூ.கே.றமீஸ்

சென்ற வார தொடர்...

தொழுகை முடிந்த போது ஒருவர்' 'முஹம்மதே இவர்தான் நரகத்தின் பொறுப்பாளர் மாலிக்'' என்றார். அவருக்கு ஸலாம் சொன்னார். நான் அவரை திரும்பிப் பார்த்தேன். அவர் எனக்கு ஸலாம் சொல்லி ஆரம்பித்தார். (முஸ்லிம்)

**பலஸ்தீன் மீது மலக்குகள் தமது சிறகுகளை விரிப்பார்கள்.**

பலஸ்தீன் என்பது ஷாம் தேசத்தின் ஒரு பகுதி யாகும். நபியவர்கள் கூறியதாக ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ''ஷாம் மீது சுபசோபனம் உண்டா கட்டுமாக. ஷாம் மீது சுபசோபனம் உண்டாகட்டுமாக! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு தோழர்கள் எதற்காக அவ்வாறு கூறினீர்கள் என்று கேட்ட போது ''அல்லாஹ்வின் மலக்குகள் தமது சிறகுகளை ஷாம் (சிரியா) மீது விரித்துவைத்துள்ளார்கள். என்று கூறி னார்கள். (பழாஇலு ஷாம்) இமாம் அல்பானி இதனை ஸஹீஹ் என்கின்றார்.

**பலஸ்தீன் (மறுமையில் எழுப்பப் படும் இடம், ஒன்று திரட்டப்படும் இடம்)**

நபி(ஸல்) அவர்களின் பணியாளர்களில் ஒருவரான மைமூனா பின்த் ஸஃத் (ரழி) அவர்கள் கூறிகிறார்கள். அல்லாஹ் வின் தூதரே! பைதுல் மக்திஸ் தொடர்பாக எங்களுக்கு சொல்லுங்கள் என்று கூறிய போது, ''அது ஒன்று திரட்டப்படும் (மஹ்ஷர்) இடமாகும். மேலும், மரணத்திலிருந்து எழுப்பப்படும் இடமுமாகும். என்றார்கள். ( அஹ்மத் /இப்னு மாஜா)



**பலஸ்தீன் இஸ்லாமிய பூமியின் அடிப்படை**

இஸ்லாம் இங்குதான் சிறப்பாக பின்பற்றப்படுகின்றது. குறிப்பாக சோதனைகள்,பிரச்சினைகளின்போது அதனை சிறப்பாக எதிர்கொள்வார்கள். ஸலமா இப்னு நுபைல் (ரழி) நபியவர்கள் சொன்னதாக அறிவிக்கின்றார்கள். இஸ்லாமிய பூமியின் (தாருல் இஸ்லாம்) அடிப்படை ஷாமில்தான் உள்ளது. (அல்லது ஷாமில்தான் இஸ்லாம் சிறப்பாக பின்பற்றப்படுகின்றது என்று இந்த ஹதீஸை விளக்குவார்கள்) (தபராணி)

அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரழி) அவர்கள் நபி(ஸல்) கூறியதாக அறிவிக்கின்றார்கள். ''வேதங்களின் சாருகள் அடங்கிய ஒரு பகுதி எனது தலையணையின் கீழால் இருந்து எடுக்கப்பட்டது. நான் அதனை பார்த்துக்கொண்டிருந்தேன். அது மின்னக்கூடிய பிரகாசமாக இருந்தது. அது ஷாமை சென்றடைந்தது. அறிந்து கொள்ளுங்கள் சோதனைகள் ஏற்படும் போது ஷாம் பிரதேசத்தில்தான் ஈமான் காணப்படும். (ஹாகிம் / அபூ நுஐம்)

**ஷாம் பிரதேசத்தில் பொறுமையோடு இருப்பவர்கள் போராளிக்கு சமமாவார்.**

அபூ தர்தா (ரழி) அவர்கள் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள். ''ஷாம் வாசிகள், அவர்களது மனைவிமார்கள், அவர்களது பரம்பரைகள், அவர்களது ஆண், பெண் அடிமைகள் அரபுதீபகற்பத்தின் எல்லைவரையுள்ளவர்கள் இறை பாதையில் போர்புரிபவர்களாவர். யார் அங்கு ஏதாவது ஒரு நகரத்தில் தங்குவாரோ அவர்ஒரு போராளியாவார். யார் அங்கு எதிரிகள் வரக்கூடிய அபாயம் உள்ள இடத்தில் இருக்கிறாரோ அவர் ஜிஹாதில் உள்ளார். (தபராணி)

சத்தியத்தில் மிகைத்து உறுதியாக இருப்பவர்கள் ஷாம், பைதுல் மக்திஸ், அதனை சூழவுள்ள பிரதேசங்களில் வாழ்வார்கள். அபூ உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் '' எனது சமூகத்தில் ஒருசாரார் சத்தியத்தில் மிகைத்தவர்களாக இருப்பார்கள் எதிரிகளை அடக்கி ஆள்வார்கள். அவர்கள் இதே நிலையில் இருக்கும் போது இறை கட்டளை (மறுமை) வரும். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது பைதுல் மக்திஸிலும் அதனை சூழவுள்ள பிரதேசங்களிலும் [illegible] (அஹ்மத்)



அல் குர்ஆனை கற்போம் கற்பிப்போம்
ஆரம்பமாகிறது
சூரா முஜாதலா
ASH SHEIKH MOHAMED FAKEEHUDEEN
பிரதி புதன்கிழமைகளில் 8pm-9pm
SALAMA
HEADQUARTERS AUDITORIOUM
Bandaranayaka Mawatha,
2A, Hillcastle Place,
Colombo-12
ஏற்பாடு : SSD - Colombo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

(கடந்த இதழின் இறுதிப் பகுதி)

**சமநிலை வரையறைகள்**

மேலே பேசப்பட்ட சிந்தனைகளின் அடிப்படையில் 'தாய்நாட்டுச் சிந்தனை' என்பது, ஒரு புறத்தில் இயல்புக் காரணியையும் மறு புறத்தில் அரசியல் காரணியையும் கொண்டது. இந்த இரு காரணிகளையும் இணைத்த வகையிலேயே இன்றைய எமது வாழ்வு முறை அமைந்திருக்கிறது.

குறிப்பாக இலங்கை போன்ற ஒரு நாட்டில் முஸ்லிம்களது வாழ்வு மிகத் தெளிவாக இந்த இரு அடிப்படைகளையும் கொண்டது. இந்த இரு அடிப்படைகளும் ஷரீஅத் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்ற வகையில், இங்கு எமது வாழ்வு ஒரு இஸ்லாமிய வாழ்வு என்பதில் சந்தேகமில்லை. அத்துடன், இந்த வாழ்வு, இஸ்லாமிய வடிவத்தை எப்பொழுது மிகச் சரியாகப் பெறுகிறது எனின், தாயக சிந்தனையும், நாடு என்ற சிந்தனையும் அதனைச் சார்ந்துள்ள மக்கள் தொகுதியிடம் எதனை எதிர்பார்க்கின்றதுவோ அதனை முழுமையாக வழங்கும் போதே எமது வாழ்வு மிகச் சரியாக இஸ்லாமிய வடிவத்தைப் பெறுகிறது.

அந்த வகையில், தாய் நாட்டை நேசித்தல், அதன் நலன்களில் அக்கறை கொள்ளுதல், அதனை அபிவிருத்தி செய்வதில் பங்கு கொள்ளுதல், அதன் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல் போன்ற வடிவங்களில் முஸ்லிம்களின் வாழ்வு அமைகின்றபோது, அது இஸ்லாமிய வாழ்வாக அமைகிறது. ஏனெனில், இஸ்லாமிய ஷரீஅத், தாயக சிந்தனையையும் நாடு என்ற சிந்தனையையும் இஸ்லாமிய பரப்பிற்குள் உட்பட்டது என்று பேசும் போது அதன் புறத் தோற்றப்பாடுகளை மாத்திரம் கருத்தில் கொள்ளவில்லை. மாற்றமாக அதன் மூலம் நாடப்படுவது எது? அ என்ன விளைவுகளைத் தருகின்றன? என்ற விடயங்களே முதன்மையாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் அதன் பொருள்பரப்பு, இலக்குகள், செயற்பாடுகள், விளைவுகள் என்பனவே அவற்றிற்கு இஸ்லாமிய வடிவத்தைக் கொடுக்கின்றன.

எனவே, இவற்றை மையப்படுத்திய செயலார்ந்த ஈடுபாட்டினாலேயே இஸ்லாமிய வாழ்வு உருவாகிறது. மாற்றமாக வெற்றுக் கோஷங்களோ தோற்றப்பாடுகளோ மாத்திரம் இஸ்லாமிய வாழ்வை உருவாக்கி விடப் போவதில்லை. அந்த வகையில் இங்கு சில சமநிலைப்படுத்தல்களின் அவசியம் எழுகிறது. அவை குறித்து அடுத்து நோக்குவோம்.

**1. தாய்நாட்டைச் சார்ந்திருத்தலும் இஸ்லாமிய அகீதாவைச் சார்ந்திருத்தலும் ஒன்றையொன்று முரண்படுமா?**

மதீனா சாசனத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பது போல் உம்மத்தின் அகீதா வடிவமும், அரசியல் வடிவமும் அடிப்படையில் ஒன்றை ஒன்று முரண்படக் கூடியவை அல்ல. ஆனால் இரண்டு விடயங்கள் குறித்து நாம் தெளிவுடன் காணப்படல் வேண்டும். முதலாவது, கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள் குறிப்பிடுவது போல், பல சமயங்களில் 'தாய்நாட்டுச் சிந்தனை' ஒரு நம்பிக்கைக் கோட்பாட்டின் தரத்திற்கு உயர்த்தப்பட்டு நோக்கப்படுகின்றது. அல்லது அல்லாஹ்வுக்கு நிகரான ஒன்றாக எவரும் தலையீடு செய்ய முடியாத, நிகரற்ற ஒரு விடயமாக பார்க்கப்படுகிறது. இது ஒரு பெரும் ஏமாற்று. சிலர் தமது அதிகார நலன்களை காப்பாற்றிக் கொள்ளவும் அடக்குமுறையை நியாயப்படுத்தவும் சுகபோகத்தை இழக்காதிருக்கவும் தாய் நாட்டுச் சிந்தனையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.

தாய் நாட்டு நலன், பாதுகாப்பு, இறைமை போன்ற அழகான விடயங்களை முன்னிறுத்தி சொந்த மக்களையே அழித்தொழிக்கும் அநியாயம் நடைபெறுகிறது. சர்வதேச உலகமும் அந்த நாட்டின் இறைமையில் தலையீடு செய்ய முடியாது என்று வேடிக்கை பார்க்கிறது. இந்த இடத்தில் தாய்நாட்டுச் சிந்தனை வணங்கப்படும் ஒரு கடவுளாக மாறி விடுகிறது. தாய்நாட்டுச் சிந்தனையின் இந்தத் தீவிர நிலை தவறானது, இஸ்லாம் ஏற்றுக் கொள்ளாதது.

தாய் நாட்டுச் சிந்த னையை இஸ்லாம் மறுக்கவில்லை. ஆனால் தாய்நாடு என்ற பெயரில் இணையற்ற ஒரு சிலை உருவாக்கப்படுவதையும், அது எல்லையில்லா அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுவதையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாவது, கலாநிதி யூசுப் கர்ளாவி அவர்கள் குறிப்பிடுவது போல், அடிப்படையில் அகீதாவைச் சார்ந்திருத்தலும், தாய்நாட்டைச் சார்ந்திருத்தலும் ஒன்றையொன்று முரண்படாவிட்டாலும், தாய்நாடா? அகீதாவா? என்று தீர்மானிக்க வேண்டிய ஒரு பிரிகோட்டில் ஒருவர் நிற்கின்ற நிலை ஏற்படும் எனின்,

# தாய் நாட்டுச் சிந்தனை

## ஒரு சமநிலைப் பார்வை



கண்டிப்பாக அகீதாவே முற்படுத்தப்படல் வேண்டும். இஸ்லாமிய வரலாற்றில் ஸஹாபாக்கள் அகீதாவுக்காக தமது சொந்த நிலத்தைத் துறந்து சென்றதை நாம் காணலாம்.

அல்குர்ஆன் கூறுகிறது: ''அவர்கள் அநியாயமாக தமது சொந்த வாழிடத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அல்லாஹ்வே எமது இரட்சகன் என்று சொன்னதனாலேயே இது நடைபெற்றது'' (ஹஜ் - 40).

கலாநிதி வஸ்பி ஆஷுர் அவர்கள் குறிப்பிடுவது போல், ஏனைய சித்தாந்தங்களில் இல்லாத இஸ்லாமிய அகீதாவின் சிறப்பம்சம் என்னவெனில், இஸ்லாமிய அகீதா சமகாலத்தில் பல்வேறு சார்புநிலைகளை அல்லது விசுவாச நிலைகளை ஏற்கிறது. இஸ்லாமிய அகீதாவின் அடிப்படையில் வாழ்வு கட்டமைக்கப்படுகின்றபோது, அது குடும்பத்தின் மீதான விசுவாசத்தையும் ஏற்கிறது. நாட்டின் மீதான விசுவாசத்தையும் ஏற்கிறது. மனித இனத்தின் மீதான விசுவாசத்தையும் ஏற்கிறது. ஏன் நிலத்தின் மீதான விசுவாசத்தையும் ஏற்கிறது. இவை ஒன்றை ஒன்று முரண்பட்டது என்று கூறவில்லை.

ஆனால் பல சமயங்களில் தாய் நாட்டுச் சிந்தனையாளர்கள் தாய்நாட்டின் மீதான விசுவாசத்துடன் வேறு எதுவும் இணைந்திருப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இஸ்லாமிய அகீதா மிகவும் விசாலமானது. அனைத்தையும் அங்கீகரிக்கிறது. மாத்திரமன்றி இஸ்லாமிய அகீதாவே நாட்டிற்குப் பங்களிக்குமாறும் வலியுறுத்துகிறது. இஸ்லாமிய அகீதாவை ஏற்றல், பின்பற்றல் என்பது நாட்டின் வளர்ச்சிக்கு சாதகமானதாக அமையுமேயன்றி ஒருபோதும் பாதகமானதாக அமைய மாட்டாது என்கிறார்.

**2. தாய் நாட்டைச் சார்ந்திருத்தலும் உம்மத்தைச் சார்ந்திருத்தலும் ஒன்றை ஒன்று முரண்படுமா?**

நபியவர்கள் கூறினார்கள் ''முஃமின்கள் தமக்கு மத்தியிலான அன்பு, பரிவு, கருணை போன்ற பரிமாற்றங்களில் ஒரே உடம்பைப் போன்றவர்கள். அதில் ஒரு உறுப்பு நோய்வாய்ப்பட்டாலும், முழு உடம்பும் கண் விழித்தும், காய்ச்சலாலும் அவதியுறும்'' என்றார்கள் (முஸ்லிம்).

இது உலகெங்கும் வாழும் முஸ்லிம் உம்மத்திற்கு மத்தியிலான பிணைப்பையும் நெருக்கத்தையும் பேசுகிறது. அந்த வகையில் இந்த உம்மத்தின் ஒரு பிரதிநிதி உலகின் எந்த மூலையில் அவதியுற்றாலும் அவனுக்காகக் குரல் கொடுத்தல் ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகிறது.

''உங்களது இந்த உம்மத், ஒரே உம்மத், நான் உங்களது இரட்சகன், என்னையே வணங்குங்கள்'' (அன்பியா - 92) என்று அல்குர்ஆன் நாம் ஒரே உம்மத் என்பதை ஞாபகப்படுத்துகிறது.

ஆனால் இங்கு ஒரு விடயத்தை மனதில் கொள்ளுதல் வேண்டும். உலக முஸ்லிம் உம்மத்தின் விவகாரங்களில் கவனம் செலுத்துதல் அவர்களுடனான உறவைப் பேணுதல் என்பது, தாய்நாட்டு மக்களது விவகாரங்களையும் அவர்களுடனான உறவையும் மறந்து அல்லது புறக்கணித்த வடிவில் அமைந்து விடக் கூடாது. அதேவேளை தாய் நாட்டுப் பிரச்சினையை முற்படுத்துகிறோம் என்ற பெயரில் உலக முஸ்லிம் உம்மத்தின் விவகாரங்கள் தமக்குரியவை அல்ல; அவை ஒவ்வொன்றும் அந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரம் என்பது போல் நடந்து கொள்வதும் தவறானது. இங்கு அவசியமானது அழகிய சமநிலை.

அடுத்து, தாய்நாட்டு நலனை பாதிக்கின்ற வகையில் உலக முஸ்லிம் உம்மத்திற்கு உதவுதல் என்பது அமைந்து விடக் கூடாது. அதேவேளை தாய்நாட்டு சட்டத்தின் பிரகாரம் உதவி செய்ய அனுமதியுள்ள இடத்திலும் மௌனமாக இருந்து விடவும் கூடாது.

**3. இஸ்லாமிய இயக்கங்களில் அங்கத்துவம் வகித்தல் தாய்நாட்டுச் சிந்தனைக்கு முரணானதா?**

இஸ்லாமிய இயக்கங்களில் அங்கத்துவம் வகித்தல், தாய்நாட்டுச் சிந்தனைக்கு முரணானதாக சில சமயங்களில் நோக்கப்படுகிறது. ஒரு இயக்க சிந்தனைக்கு விசுவாசமாக இருத்தலும் தாய் நாட்டுக்கு விசுவாசமாக இருத்தலும் ஒரு போதும் முரண்பட மாட்டாது.

நபியவர்கள் மதீனா சாசனத்தை வரைந்து மதீனா நாட்டை உருவாக்கியபோது, அந்த நாட்டின் குடிமக்களாகக் கருதப்பட்ட ஒவ்வொரு சமூகமும் அவர்களது கோத்திரக் கட்டமைப்புகளோ அல்லது கோத்திரங்களுக்கிடையில் காணப்பட்ட உடன்படிக்கைகளோ எதுவும் இரத்துச் செய்யப் படவில்லை. காரணம் சமகாலத்தில் வேறுபட்ட பல விசுவாச நிலைகள் காணப்படலாம். அவை முரண்பாடுகளாகக் கருதப்படத் தேவையில்லை என்பதாகும்.

அதேவேளை, இஸ்லாமிய இயக்கங்களின் சிந்தனையும் செயற்பாடுகளும் கூட, தாய்நாட்டுச் சிந்தனையுடன் முரண்படக் கூடியவையல்ல. தாய்நாட்டுச் சிந்தனை மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை கொண்டு வந்து சேர்க்கும் வகையிலேயே இஸ்லாமிய இயக்கங்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் காணப்படுகின்றன.



இஸ்லாமிய விழுமியங்கள், சுதந்திரம், சமாதானம், சக வாழ்வு, அபிவிருத்தி, மனித நாகரீகம் போன்ற இலக்குகளை நோக்கியே இஸ்லாமிய இயக்கங்கள் செயற்படுகின்றன. இவை ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பெரிதும் பங்களிப்புச் செய்யக் கூடிய காரணிகளாகும். அந்த வகையில் தாய் நாட்டுச் சிந்தனையும் இயக்க சிந்தனையும் ஒரே திசையில் ஒன்றை ஒன்று முழுமைப்படுத்தும் வகையில் பயணிக்கும் சிந்தனைகளாகும்.

அடுத்து, முக்கியமாக இஸ்லாமிய இயக்கங்களின் சர்வதேச உறவுகள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படும் நிலை இருக்கிறது. அது தாய் நாட்டுக்கு அபாயமானதாக விளங்கப்படுத்தப்படும் நிலையிருக்கிறது. இங்கு ஒரு விடயம் உண்மையானது. சர்வதேச உலகில் இஸ்லாத்தின் பெயரால் தொழிற்படும் ஐஸிஸ் போன்ற, ஆயுதத்தால் கிலாபத்தைக் கொண்டு வர நினைக்கும் இயக்கங்கள் மனித குலத்திற்கே எதிரானது என்பதில் சந்தேகமில்லை. அவை இஸ்லாமிய சிந்திப்புக்களின் விளைவுகள் என்பதை விடவும் சதிகளின் உற்பத்திகள் என்பதுவே உண்மை. அந்த வகையில் அவற்றுடனான உறவுகள் தனிமனித வடிவிலும் சரி, இயக்க வடிவிலும் சரி தாய்நாட்டுச் சிந்தனைக்கு எதிரானதாகவே காணப்படும். மாற்றமாக ஜனநாயக பூர்வமான நடுநிலை சர்வதேச அமைப்புக்களின் உறவுகள், தாய்நாட்டுச் சிந்தனைக்குப் பயனளிக்கும் வகையிலேயே காணப்படும்.

அறிவு, பொருளாதாரம், சமூக நலன் போன்ற பல்வேறு பரப்புக்களில் இந்த உறவுகள் மூலம் தாய் நாடு பயனடைகிறது என்பது உண்மை. எனவே, அடிப்படையில் அந்த உறவுகள் மூலம் தாய்நாட்டுச் சிந்தனை பலப்படுகிறதேயன்றி, முரணானதாய் அமைய மாட்டாது.

**4. தாய்நாட்டுச் சிந்தனை வெறியுணர்வாக மாறக்கூடாது.**

இங்கு வெறி என்பது, நியாயமாக இருப்பினும் அநியாயமாக இருப்பினும் தனக்கு சார்பாகவும் பிறர்க்கு எதிராகவும் நடந்து கொள்வதைக் குறிக்கும். பல சமயங்களில் தாய்நாட்டுச் சிந்தனை அதன் மக்களை இந்த இடத்திற்குத் தள்ளி விடுவதைப் பார்க்கிறோம். தனது தாய் நாட்டை நேசித்தல் என்பது பிறரை வெறுத்தல் அல்ல. தனது தாய் நாட்டை ஆதரித்தல் என்பது பிறரை எதிர்த்தல் அல்ல. நாம் அரசியல் அடிப்படையில் பல நாடுகளாகப் பிரிந்திருக்கிறோம். ஆனால் எமக்கு மத்தியில் மனித சகோதரத்துவம் இருக்கிறது. சிறந்த மானுட விழுமியங்கள் வாழும் ஒரு மனித நாகரிகத்தை கட்டியெழுப்புவதையே இஸ்லாம் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

கலாநிதி யூசுப் அல் கர்ளாவி கூறுகிறார்: ''இஸ்லாம் முஸ்லிமுக்கு இவ்வாறுதான் கற்பிக்கிறது. எங்கு சுழன்றாலும் சத்தியத்திலேயே நிற்க வேண்டும். கசப்பாக இருந்தாலும் சத்தியத்தையே மொழிய வேண்டும். உறவினர் மற்றும் பெற்றோர் ஏன் தனக்கே எதிரானதாக இருந்தாலும் நீதியாகவே நடந்து கொள்ள வேண்டும். அதுபோல் ஒரு சமூகத்துடன் காணப்படும் பகைமை அவர்களுடன் அநீதியாக நடந்து கொள்ள வைக்கக் கூடாது. தான் விரும்புகின்ற விரும்பாத அனைவருடனும் நீதியாகவே நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் நீதி அவனது அனைத்து அடியார்களுக்கும் உரியதாகும்.''

**5. தாய் நாட்டின் மதச் சார்பின்மை என்பது மதத்தைத் துறத்தலோ அல்லது விட்டுக் கொடுத்தலோ அல்ல.**

கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்கள் கூறுவது போல், சிலர் தாய்நாட்டுச் சிந்தனையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றமைக்கான காரணங்களில் ஒன்று அது மதச்சார்பின்மையின் அடிப்படையில் கட்டப்படுகிறது என்பதாகும். ஆனால் தாய் நாட்டுச் சிந்தனை என்பது மதம் சார்ந்த அல்லது சாராத எந்த சிந்தனையின் மீதும் கட்டமைக்கப்பட்டதல்ல. மாற்றமாக அது சத்தியத்தையும் அசத்தியத்தையும் வேறுபடுத்தக் கூடிய சார்பு நிலையற்ற பொதுச் சிந்தனை ஒன்றின் மீதே கட்டப்படுகிறது. நபியவர்களது மதீனா சாசனத்தின் இயல்பும் இவ்வாறுதான் காணப்பட்டிருக்கிறது.

மதீனா சாசனத்தின் மூலாதாரமாக (Reference) அல்குர்ஆனும் சுன்னாவும் காணப்பட்டிருக்கின்றன. ஆனால் அது எந்த உரிமையிலும் கடமையிலும் முஸ்லிம்களுக்கு சார்பானதாகவும் ஏனையோருக்கு எதிரானதாகவும் காணப்படவில்லை. ஏனைய எந்த சமூகத்தினரும் தமது மத நம்பிக்கைகளைத் துறக்க வேண்டும் என்றோ அவற்றில் சிலவற்றில் விட்டுக் கொடுப்புகள் செய்ய வேண்டும் என்றோ சொல்லவில்லை.

இஸ்லாமியப் போதனைகளின் சிறப்பம்சம் இதுதான். மதச்சார்பின்மை பேசும் மதத்தை முற்றாக நிராகரித்தல் என்ற நிலைப்பாடு தாய்நாட்டுச் சிந்தனையில் ஏற்கப்படவில்லை. மதத்தைத் துறந்து அல்லது நம்பிக்கைகளில் சமரசம் செய்து வருகின்ற ஒரு உடன்பாடாக இது இல்லை. மாற்றமாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல் மத நம்பிக்கை தான் இந்த உடன்பாட்டை தூண்டுகிறது. அதனைப் பலப்படுத்துகிறது.

**முஸ்லிம் பிரஜை ஒருவரின் பணி**

இது மிக விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒரு தலைப்பு. இருப்பினும் இங்கு கலாநிதி ஸலாஹ் ஸுல்தான் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்தை மாத்திரம் சுருக்கமாகப் பரிமாறிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

''இஸ்லாம் ஸாலிஹான ஒரு மனிதனையும் ஸாலிஹான ஒரு பிரஜையையும் சமகாலத்தில் உருவாக்குகிறது. இடத்தைப் பொறுத்தவரை அவன் சிறந்த பிரஜை. நிலைப்பாட்டைப் பொறுத்தவரை அவன் சிறந்த மனிதன். இதுதான் ஒருவன், தான் பிறந்த, பயனடைந்த, உறவு கொண்ட பூமிக்கு செலுத்தும் விசுவாசத்திற்கும், அவன் எந்தப் பூமியில் வாழ்ந்தாலும் அவனைப் பயனுள்ள ஒரு மனிதனாக மாற்றும் உயர் பண்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் இடையிலான சம்பந்தமாகும். ஒரு முஸ்லிமின் ஈமான் செழுமையடைகிறதுபோது, அவன் ஒரு பிரஜைக்குரிய கீழ்வரும் ஐந்து பரப்புக்களில் அமைந்த கடமைகளை ஆழமாக உணர்ந்து கொள்வான்.

1. அல்லாஹ்வுக்கு அடிமையாக வாழ்வான். ''மனித மற்றும் ஜின் இனங்களை எனக்கு அடிமையாக வாழவே படைத்திருக்கிறேன்'' (தாரியாத் - 56)

2. மக்கள் நலன்களில் கரிசனை எடுத்து செயற்படுபவனாக வாழ்வான். ''உம்மை நாம் உலகத்தாருக்கு அருளாகவே அனுப்பி வைத்தோம்.'' (அன்பியா - 108)

3. பூமியை அபிவிருத்தி செய்பவனாக வாழ்வான். ''அவன்தான் உங்களை பூமியில் இருந்து படைத்து அதனை அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டான்'' (ஹூத் - 61)

4. சட்டத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்வான். (ஷரீஅத்துக்கு முரண்படாத வகையில்) ''அவர்களுக்கு மிகவும் உசிதமானது எது எனில், கட்டுப்படுவதும் நல்ல வார்த்தை சொல்வதுமாகும்'' (முஹம்மத் - 20)

5. அரசாங்கத்துடன் ஷரீஅத்துக்கு முரண்படாத வகையில் பரஸ்பரம் ஒத்துழைப்பவனாக வாழ்வான். ''நன்மையான விடயங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளுங்கள். தீமையான விடயங்களில் ஒத்துழைக்காதீர்கள்'' (மாஇதா - 2) மேற்சொன்ன ஐந்து அம்சங்களும் சமகாலத்தில் முஸ்லிம் என்ற வகையிலும் தாய் நாட்டின் பிரஜை என்ற வகையிலும் ஒருவனிடத்திலிருந்து வெளிப்பட வேண்டிய கடமைகளை எடுத்துக் காட்டுகின்றன.

அந்தவகையில் முஸ்லிமாக இருத்தலும் ஒரு நல்ல பிரஜையாக இருத்தலும் ஒன்றை ஒன்று முரண்படுகின்ற இரு அம்சங்களல்ல. மாற்றமாக ஒன்றை ஒன்று முழுமைப்படுத்துகின்ற பலப்படுத்துகின்ற பணிகள் என்பதைப் புரிந்து கொள்கிறோம். நாம் நல்ல முஸ்லிம்களாகவும், நல்ல பிரஜைகளாகவும் வாழ அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலை எதிர்மறையாகப் பாதிக்கும் காரணிகள்



வெற்றிகரமான கற்றலுக்கு அர்ப்பணமும் கவனமும் நம்பிக்கையும் மன ஒருமைப்பாடும் திறன்களும் அவசியமானவை. நேரெதிரான மனோநிலையும் மன ஒருமைப்பாடின்மையும் கற்றலையும் நினைவாற்றலையும் பெருமளவு பாதிக்கின்றது. இந்த வகையில் வினைத்திறனுள்ள கற்றலை பாதிக்கக் கூடிய காரணிகளை கல்வி உளவியலாளர்கள் விளக்கியுள்ளனர். அவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. எதிர் நிலைச் சிந்தனை (நம்பிக்கையீனம்)
2. தீராத உடல் நோய்கள்
3. மோசமான நட்பு
4. தூக்கமின்மையும் போலித் தூக்கமும்
5. எதிர்ப்பால் கவர்ச்சி
6. தொலைக்காட்சி மோகம்
7. மிகுதியான கையடக்கத் தொலைபேசிப் பாவனை
8. அளவு கடந்த இணையப் பாவனை
9. மிகையான களியாட்டம்
10. போதைவஸ்துப் பாவனை
11. நேர முகாமையின்மை
12. தீராத மறதி
13. இலக்கற்ற சிந்தனைக் குழப்பம்
14. கற்றலில் ஆர்வமின்மை
15. சிக்கலான மொழி மூலம்
16. உடல் நோய்கள்
17. கையில் கிடைக்கும் பணம்
18. சிகரட் புகை
19. பெற்றோர் முரண்பாடு
20. இயற்கையான கற்றல் குறைபாடு
21. கடும் வறுமை
22. வழிகாட்டலின்மை

எந்தவொன்றையும் சாதிக்க வேண்டுமாயின், ஒரு எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அவசியம். தன்னம்பிக்கை இல்லாது இறங்கும் எந்த முயற்சியும் இறுதியில் தோல்வியுடன் முடிவடைகின்றது. ஏனெனில், நம்பிக்கையீனத்தோடு தயக்கமும் பயமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

துணிச்சலான முன்னேற்றத்திற்கு தன்னம்பிக்கைதான் மூலதனம். அதுபோன்றே எதனையும் நேர்ப்படியாக (Positive) சிந்திக்கப் பழக வேண்டும். முடியும், இயலும் என்ற சொற்கள் அடிமனதில் ஆழ ஊடுருவ வேண்டும். முடியாது, வெற்றியளிக்காது என்று முன்தீர்மானம் செய்வது கோழைகளின் மனோநிலையாகும்.

வெல் திறன் உள்ளவன் நம்பிக்கையுடன் காலெடுத்து வைக்கின்றான், தடைகளைத் தாண்டுகின்றான், இலக்குகளை எட்டுகின்றான். ஒவ்வொரு சாராசரி மனிதனும் தன்னைச் சூழ நல்லதே நடக்கின்றது என சிந்திக்க வேண்டும். அமைதியடைய வேண்டும். மாற்றமாக எதிர்ப்பாடாகச் சிந்திக்கின்றவன், அச்சத்தோடும் தயக்கத்தோடும் பின்வாங்குகின்றான்.

கற்கும் மாணவர்களிடம் இருக்க வேண்டியதெல்லாம் நேர்ப்பாடான சிந்தனையே. எதிலும் நன்மையுண்டு, எப்படியும் வெற்றி உண்டு, என்னாலும் முடியும், எனக்கும் இயலும் என்ற நம்பிக்கைதான் வெல் திறன் கொண்ட மாணவர்களின் உந்துவிசை

மாணவர்களின் உற்சாகமான கற்றலில் உடல் ஆரோக்கியம் முதன்மையானது. உடலில் சக்தியும் உற்சாகமும் இருக்கும்போதே உளச் செயற்பாடு சாத்தியமாகும். கற்றல் ஓர் உளச் செயற்பாடு. அதற்கு உடல் சக்தியும் உற்சாகமும் தெம்பும் அவசியம். ஆரோக்கியமான உடலிலேயே ஆரோக்கியமான சிந்தனை உருவாகின்றது.

மாணவர்கள் நீடித்த அல்லது கடும் நோய்களுக்கு ஆட்படுகின்றபோது கற்றலில் அவர்களது ஆர்வம் குறைந்துவிடுகின்றது. தொடர்ச்சியான ஜுரம் அல்லது ஒற்றைத் தலைவலியினால் பாதிக்கப்படுகின்ற மாணவர்கள் வகுப்பறைக் கற்றலிலோ வீட்டுச் சூழலிலிருந்து பரீட்சைக்குத் தயாராகுவதிலோ ஆர்வம் குறைந்தவர்களாக இருப்பர். எனவே, நோயற்ற நிலையைப் பராமரிப்பது மாணவர்களின் கற்றலுக்கு இன்றியமையாதது.

# முஸ்லிம்களிடம் பெருகி வரும் தொற்றா நோய்கள்



இலங்கை மக்களை பொதுவாகத் தாக்கும் தொற்றா நோய்களில் குடற் புண் (Ulcer) ஒற்றைத் தலைவலி, இதய நோய் மற்றும் சக்கரை வியாதி என்பவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் இதய நோய்களால் -குறிப்பாக மாரடைப்பினால் ஏற்படும் மரணங்களின் தொகை ஒப்பீட்டு ரீதியில் அதிகமாகும். இலங்கை முஸ்லிம் சமூகத்திலும் இவ்வகை தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்துச் செல்வதை ஆய்வுகளும் புள்ளிவிபரங்களும் காட்டுகின்றன.

இதில் எண்ணிக்கையில் அநேகரைப் பாதித்துள்ள நோயாக குடற் புண் சுட்டிக் காட்டப்படுகின்றது. உணவுக் குழாய், சிறு குடல், முன்குடல் போன்றவற்றின் உட்பாகம் பாதிக்கப்பட்டு புண்கள் ஏற்படுவதையே வயிற்றுப் புண் அல்லது குடற் புண் என அழைக்கப்படுகின்றது. இதற்கு மருத்துவக் காரணங்களும் உளவியல் காரணங்களும் உள்ளதாக மருத்துவர்கள் கருதுகின்றனர்.

இது குறித்து சர்வதேச அளவில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஹெலி, கோபாக்டர் பைலோரா எனப்படும் பக்டீரியாக்களால்தான் புண்கள் ஏற்படுவதாகக் கண்டறிந்துள்ளனர். குறிப்பாக முன்குடலில் இவ்வகை பக்டீரியாக்கள் புண்களை ஏற்படுத்துவதாக இவ்வாய்வுகள் கூறுகின்றன. மனஅழுத்தம் காரணமாகவும் வயிற்றுப் புண் ஏற்படலாம் என்ற ஒரு கருத்து உள்ளது. சில உள மருத்துவர்கள் இவ்வாறு கருதுகின்றனர். பெரும்பாலான உடல் நோய்களுக்கு மனஅழுத்தமே பிரதான காரணம் என்ற வகையில், வயிற்றுப் புண்ணுக்கும் மனஅழுத்தத்திற்கும் இடையில் தொடர்புள்ளதாக இவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், இன்றைய உடல் மருத்துவர்கள் இக்கருத்தை நிரூபிக்க முடியாதுள்ளது எனக் கூறுகின்றனர். உணவு மாறுபாடுகள், வாழ்க்கை முறை மாற்றங்கள், எஸ்பிரின் அல்லது அது போன்று மருந்துகள் கூட வயிற்றுப் புண்ணுக்குக் காரணமாகலாம். பெரசிடமோல், எஸ்பிரின், புரூஃபன் போன்ற வலி நீக்கிகளை (Pain Killer) அதிகம் பயன்படுத்துவதும் வயிற்றுப் புண்களை ஏற்படுத்தலாம் எனக் கண்டறியப் பட்டுள்ளது.

நமது அன்றாட உணவுப் பழக்கத்தில் மென்பானங்களை அருந்தும் பழக்கம் இன்று பரவலாக அதிகரித்துள்ளது. அத்தகைய மென்பானங்களும் வயிற்றுப் புண் உருவாவதில் பங்களிக்கின்றன. வயிற்றை நீண்ட நேரம் காலியாக வைத்திருப்பதும் இந்நோய் ஏற்படுவதற்குச் சாதகமாக அமைகின்றது. கடும் வேலை, பணிச் சோலிகள், நேரமின்மை போன்ற இன்னோரன்ன காரணிகளால் உணவை தகுந்த நேரத்திற்கு உள்ளெடுக்காமல் பலர் உணவைத் தாமதப்படுத்துகின்றனர். இதுவும் வயிற்றில் புண்கள் உருவாவதற்குப் பிரதான காரணமாகும். உணவை அடிக்கடி உண்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

இதேபோன்று முஸ்லிம்களின் உணவுப் பழக்கத்திலுள்ள கொழுப்பு நிறைந்த உணவுகளின் தாக்கம், மசாலா வகைகளை அதிகமாகச் சேர்த்தல் என்பதும் இத்தகைய நிலைமைகளை உருவாக்குகின்றது.

# கோடையில் குளிர்ச்சி தரும் தர்பூசணி



கோடை பழமாக கருதப்படும் தர்பூசணி பழம் புத்துணர்ச்சியை மட்டும் தரக்கூடிய பழம் அல்ல. வெயில் காலத்தில், உடலுக்கு தேவையான குளிர்ச்சியை தரக்கூடிய சிறந்த பழமாக இது கருதப்படுகிறது. தர்பூசணி சாப்பிடுவதன் மூலம் உடலின் வெப்பத்தையும் ரத்த அழுத்தத்தையும் சரிசெய்து கொள்ள முடியும். கட்டி, ஆஸ்துமா, நீரிழிவு, பெருங்குடல் புற்று நோய் மற்றும் கீல் வாதம் போன்றவற்றை தர்பூசணி மூலம் குணப்படுத்த முடியும்.

இதய நோய்கள் மற்றும் புற்று நோய் ஆண்டியாக்ஸிடண்ட் விகோபீனின் போன்ற நோய்களுடன் போராடி வெற்றி பெறும் தன்மை கொண்டது. இது தசை மற்றும் நரம்புகளின் செயல்பாட்டிற்கு இன்றியமையாததாக இருக்கிறது. குறைந்த ரத்த அழுத்தம் உள்ளவர்கள் தர்பூசணி சாப்பிடுவதன் மூலம் பொட்டாசியத்தை அதிகரித்து கொள்ள முடியும். தர்பூசணியில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி. சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது.

தர்பூசணியில் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள், கார்போஹைட்ரேட் மற்றும் பைர் ஆகியவை உள்ளது. உடல் நலத்திற்கு ஊட்டசத்து வழங்க கூடிய பழவகைகளில் தர்பூசணியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. வெயில் காலத்திற்கு ஏற்ற பழம். இதை பழமாக வாங்கியும் அல்லது பழச்சாறாகவும் சாப்பிடலாம். 100 கிராம் தர்பூசணியில் 90 சதவீதம் தண்ணீர் மற்றும் 46 கலோரிகள், கார்போ ஹைட்ரேட் 7 சதவீதம் உள்ளது.

**கொழுப்பை குறைக்கும்:**

கண்களை பராமரிக்க விட்டமின் ஏவும், மூளை மற்றும் செல் பாதிப்பை தடுக்க விட்டமின் சி யின் உதவியுடன் செயல்படுகிறது. உடலிற்கு தேவையான இன்சுலினையும் மேம்படுத்தும். மேலும் தர்பூசணி சதை மற்றும் விதையும் பலன் தரக்கூடியது. தர்பூசணி விதையில் அதிக அளவில் ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன.

இதில் உள்ள மெக்னீசியம் மற்றும் புரதம் கொழுப்பைக் குறைக்க வல்லது. நம் ஊரில் சர்வ சாதாரணமாக கிடைக்கும் தர்பூசணி பழத்துக்கு ஆண்மையை அதிகரிக்கும் சக்தி உண்டு என்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது.

**தர்பூசணியின் பயன்கள்:**

கோடைகாலத்தில் கிடைக்கும் தர்பூசணிப்பழம் உடலுக்கு குளிர்ச்சியை தருவதோடு, இரும்பு சத்தும் நிறைந்ததாகும். இதில் இருக்கும் இரும்பு சத்தின் அளவு, பசலைக் கீரைக்கு சமமானதாகும். மிகச் சிறந்த விட்டமின் சி, விட்டமின் ஏ இதில் உண்டு. இதைவிட தேவையான அளவு விட்டமின் பி6ம், பி1ம் கணிப்புக்களான பொட்டாசியம் மாங்கனீசியம் உண்டு.

மிகவும் எளிமையாக புத்துணர்ச்சியூட்டும் பானமாகவும் தயாரிக்கலாம். விதை நீக்கப்பட்ட தர்பூசணித் துண்டுகளை, மிக்சியில் போட்டு, ஒன்று அல்லது இரண்டு வினாடி ஓட விட்டு குளிர் பதனப்பெட்டியில் வைத்து பரிமாறலாம். விரும்பினால் சிறிது சர்க்கரை, எலுமிச்சம் பழச்சாறு ஒன்றிரண்டு புதினாத் தழையும் சேர்க்கலாம்.




# Dr. அபீர் அல் நமன்கனி

மருத்துவராகப் பணியாற்றும் அபீர் அல் நமன்கனி உளமருத்துவத்தில் கையாளப்படும் ஹிப்னோஸிஸ் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். குழந்தை மருத்துவராகவும் பணியாற்றும் இவர், பத்தி எழுத்தாளராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார். உள ரீதியில் ஏற்படும் அச்ச நோய்களுக்கு (Phobias) சிகிச்சையளிப்பதில் செறிவான அனுபவம் கொண்ட அபீர், சில நூல்களையும் எழுதியுள்ளார்.

Dental Phobia and anxiety: A Guidence for a better Management non pharmachological behavior Management என்பவை அவர் எழுதியுள்ள நூல்களாகும்.

உயர் கல்வித் துறையில் கற்பித்தலில் பட்டதாரி சான்றிதழைப் பெற்றுள்ள இவர், லண்டனிலுள்ள ஈஸ்ட்மென் பற்சிகிச்சை கல்லூரியில் பட்டப் பின் கல்வித் துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சவூதி அறேபியாவைச் சேர்ந்த அபீர், World Journal of Medical Analysis சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவர். உள மருத்துவம், குழந்தை மருத்துவம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்றுள்ள போதும், பற்சிகிச்சை துறையிலேயே அவரது ஈடுபாடு அதிகம் உள்ளது. இத்துறையில் பல ஆய்வுகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

பற்கள் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் உளப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்துள்ள அவர், பல் தொடர்பான மனஅழுத்தத்தை கண்டறிவதற்கான ஒரு அளவுகோலையும் அறிமுகம் செய்துள்ளார். கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் குழந்தைப் பருவத்தினர் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

குறிப்பாக, குழந்தைகள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் எதிர்கொள்ளும் நடத்தைப் பிரச்சினைகள் இவரது ஆய்வில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. சர்வதேச அளவில் இவரது ஆய்வுகளுக்கு கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. அச்சநோய் மற்றும் மனஅழுத்தங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக இவர் பரிந்துரை செய்துள்ள மருத்துவ வழிமுறைகளுக்கு உலகளாவிய விருதுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் பின்வருவன முக்கியமானவை.

பூகோள ரீதியில் நடைபெறும் உளவியல் மருத்துவ மாநாடுகளை இவர் தலைமையேற்று நடத்தியுள்ளார். இதுவரை ஆறு சிகிச்சை மற்றும் ஆய்வுக்கான விருதுகளை வென்றுள்ளார். குழந்தை மற்றும் பெண்கள் அபிவிருத்தியில் அக்கறையோடு செயற்படும் ஒரு சமூக செயற்பாட்டாளராகவும் இவர் விளங்குகின்றார். உலகில் முன்னணி 500 முஸ்லிம் பெண்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் கட்சிகளில்... (1ம் பக்கத் தொடர்)

அதனுடைய ஆதரவாளர்கள் அதிருப்தியினை வெளியிட்டு வருவதோடு கட்சி நடவடிக்கைகளில் இருந்தும் தூரமாகி வருகின்றனர். இம்முறை மாநாட்டுக்கு மக்களை வரவழைப்பதற்கு கட்சி செலவழித்த இலட்சக்கணக்கான நிதியே இதற்குச் சாட்சி என அதிருப்தியடைந்த ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் கலந்து கொண்ட மாநாட்டில் முஸ்லிம்களின் உரிமைகள் சம்பந்தமாகவோ பிரச்சினைகள் சம்பந்தமாகவோ எந்தவித கோரிக்கைகளையும் வைக்காதது மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. தேர்தல் காலங்களில் கூப்பாடு போடுகின்ற முஸ்லிம் தனியலகையும் கரையோர மாவட்டத்தையும் இவர்களின் முன்னால் வைப்பதற்கு அவ்வளவு போராளிகளுக்கு மத்தியிலும் ஏன் இவர்களுக்குத் துணிச்சல் வரவில்லை என்றும் இவை வெறும் தேர்தல் கால பசப்பு வார்த்தைகள் தானா என்றும் மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதே நேரம் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று கட்சியமைத்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்தும் அதன் பிரமுகர்கள் பலர் ஒதுங்கத் தொடங்கியுள்ளனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளராக இருந்த சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியுள்ளதோடு, கட்சிக்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளார். அதேபோல கட்சியின் உப தலைவராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக், முதன்முதலாக அ.இ.ம.கா. வால் கைப்பற்றப்பட்ட முசலி பிரதேச சபைத் தலைவர் யெஹ்யா பாய் போன்றவர்களும் தற்போது கட்சி நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியுள்ளனர். கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். ஸுபைர் தற்போது கட்சிக்கெதிரான கொள்கை பரப்புச் செயலாளராக மாறியுள்ளார்.

பிரதான முஸ்லிம் கட்சிகளின் இவ்வாறான நிலை காரணமாக முஸ்லிம் சிவில் சமூகம் புதியதொரு தெரிவை நாடி வருவதாக களத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாடாளுமன்ற... (1ம் பக்கத் தொடர்)

தனிநபர்களே ஆட்சி செய்தார்கள். 09 வருடங்களாக அமைதியாக இருந்த நான் தற்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியை காப்பாற்றப் புறப்பட்டுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க ஹினிதுமையில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரான பீலிக்ஸ் பெரேரா, இது தொடர்பில் கருத்துரைக்கையில், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா, மஹிந்த மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால ஆகியோர் கட்சியின் ஒற்றுமைக்காக பாடுபட வேண்டும் என்று கோரியுள்ளார். இது இடம்பெறாவிட்டால் கட்சியின் உறுப்பினர்கள் விலகிச் செல்வதை தடுக்க முடியாது போய் விடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் பியசேன கமகே, முன்னாள் பிரதியமைச்சர்கள் மில்ரோய் பெர்னான்டோ, சரண குணவர்த்தன ஆகியோர் இதற்கு சமமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியல்லாதவர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கட்சியின் தலைவராக தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் குழுவொன்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தது.

கடன் சுமையை அதிகரிக்கும் வகையில் மேலும் பல வெளிநாட்டுக் கடன்கள் கடந்த ஆண்டில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 74 வீதம், கடனிறுப்புக்காக செலவழிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் பல கடன்களை வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அரசு தயாராகின்றது.

ஐந்து பில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் சாதக நிலையைத் தோற்றுவித்துள்ளன. பிரதமரின் சீன விஜயத்தைத் தொடர்ந்து ஏப்ரல் நடுப்பகுதியில் இது தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகவுள்ளன. இவற்றில் 01 பில்லியன் ஐஎம்எப் மூலமாகவும் ஏனையவை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாகவும் பெறப்படவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மக்களிடமிருந்து மேலும் வரிகளைப் பெறுமாறு எம்மைக் கேட்டுக் கொண்டுள்ளது. எமது வரி வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 10 வீதமாகும். மாலைதீவில் இது 25 வீதமாகவும் யெமனில் 20 வீதமாகவும் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இன்று பிறந்த குழந்தை முதல் வயோதிபர் உட்பட அனைவரும் 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா கடன்காரர்களாக இருக்கின்றார்கள் என ஜே.வி.பி.யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## இரண்டு... (1ம் பக்கத் தொடர்)

அரசியல் நுழைந்துள்ளதால் கல்வி அவிந்து போயுள்ளதாகவும், இந்த நிலையை உடனடியாக மாற்ற வேண்டும் என்றும், கல்வி அமைச்சில் புரையோடிப் போயுள்ள சில அதிகாரிகளை நீக்கி அவர்களுக்குப் பதிலாக திறமையான அதிகாரிகளை நியமித்து கல்வியில் பெரியதொரு பாய்ச்சல் பாய வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசியலமைப்பு... (1ம் பக்கத் தொடர்)



போன்ற பல்வேறு அமைப்புக்கள் தமது யோசனைகளை குழுவினருக்கு முன்வைத்திருந்தனர். புத்தளம் பெரிய பள்ளிவாசல், ஜம்இய்யதுல் உலமாவின் உதவியுடன் அரசியல், சமூகப் பிரமுகர்களுடன் இணைந்து யோசனைகளை தயாரித்திருந்தன. அடுத்த வாரமளவில் இது குழுவினரிடம் ஒப்படைக்கப்படும் என புத்தளம் பெரிய பள்ளிவாசல் தலைவர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

இலங்கையில் இயங்குகின்ற ஜமாஅத்துக்களில் ஜமாஅத்துஸ் ஸலாமா அரசியல் யாப்பு திருத்தப் பிரேரணைகளை குழுவின் தலைவர் லால் விஜேநாயக்கவை சந்தித்து சமர்ப்பித்துள்ளது. சிறீலங்கா தௌஹீத் ஜமாஅத்தின் யாப்புத் திருத்தம் சம்பந்தமான முன்மொழிவுகள் அடுத்த வாரமளவில் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்படவுள்ளதாக சிறீலங்கா தௌஹீத் ஜமாஅத்தினர் மீள்பார்வைக்குத் தெரிவித்தனர்.

இலங்கையின் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படவிருக்கின்ற மாற்றங்கள் தொடர்பில் தேசிய சூறா சபை தனது யோசனைகள்ள சமர்ப்பித்துள்ளது. சிறிலங்கா முஸ்லிம் கவுன்ஸில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து தமது யோசனைகளைப் பரிமாறவுள்ளது.அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இதுவரை எந்த யோசனைகளையும் சமர்ப்பிக்கவில்லை.

## சம்மாந்துறை... (10 ஆம் பக்கத் தொடர்)

நடைமுறையில் உள்ளது. இது இந்திய அரசியல் முறை மையின் சில பகுதிகளை ஒத்துள்ளது.ஆனால் போதியளவு அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் திருப்தியற்ற நிலையிலேயே காணப்படுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க அளவில் திருப்தியடையவில்லை.

தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் அதிகாரப் பகிர்வாக மாற்றமடைதல் வேண்டும். ஆகக் குறைந்தது 'இந்திய மாதிரியிலான அதிகாரப் பகிர்வு முறை' ஒன்றை நோக்கி நாம் நகர வேண்டியுள்ளது.

**மாகாண சபை:**

வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அரசியல் திட்டத்தின் 154 (A) சரத்து 1 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாண சபை அமைக்க வென குறிப்பிட்ட இதே சரத்தின் 3 ஆம் பிரிவிலே உள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒரே மாகாண சபை ஒரே ஆளுனர், ஒரே முதலமைச்சர் ஒரே அமைச்சர்கள் சபை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக செயற்பட இடமளிக்கின்றது. இதன் பிரகாரமே வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டிருந்தது. எனவே இந்த சரத்துக்கள் நீக்கப்பட்டு கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிந்து செயற்படுவதன் மூலம் கிழக்கில் வாழும் மூன்று சமூகங்களும் திருப்தியடையும்.

**ஆளுனர்:**

ஆளுனருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டு முதலமைச்சருக்கும் அமைச்சரவைக்குமே நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். மேலும் சொந்த மாகாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்களே ஆளுனர்களாக நியமிக்கப்படல் வேண்டும். மேலும் படை அதிகாரிகள் ஆளுனர்களாக நியமிக்கப்படக் கூடாது.

**மாகாண அமைச்சரவை:**

4 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ள அமைச்சரவை 7 ஆக அதிகரிக்கலாம். இந்த அமைச்சரவை டொனமூர் யாப்பில் அமைந்தது போன்று நிர்வாகக் குழுக்களாக செயற்படல் வேண்டும். சபை உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிந்து 7 அமைச்சர்களின் தலைமையில் இயங்குதல். Executives Committee System)

**மாகாண சபை அதிகாரப் பட்டியல்**

- மாகாண சபை நிரல்
- ஒதுக்கிய நிரல்
- ஒருங்கியை நிரல்

ஒருங்கியை நிரல் நீக்கப்பட்டு மாகாண அரசாங்கத்துக்குரிய அதி காரங்கள் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு ஒருங்கியை நிரலே பிரதான காரணியாகும்.

- Mr. H.M. அன்வர் அலி M.A. Psc.
- Dr. M.M. நௌஷாட் M.B.B.S.
- Mr. S.L. அப்துல் மஜீது B.Sc
- As-sheikh A.L.M. றிப்கான் B.A.
- Mr. S.L. மர்சூக் Nursing Officer

## புதிய அரசியல்.... (01 ஆம் பக்கத் தொடர்)



பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்தக் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க தெரிவித்தார். பௌத்த, ஹிந்து, கத்தோலிக்க, முஸ்லிம் மதகுருமார்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறிய வழக்கறிஞர் விஜேநாயக்க இதுவரை புதிய அரசியல் யாப்பு சம்பந்தமாக 5000க்கும் மேற்பட்ட கருத்துகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு எவ்வாறு அமைய வேண்டுமென்பது குறித்து மக்கள் கருத்துகள் அடங்கிய இறுதி அறிக்கை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுமென்றும் அவர் கூறினார். இதேவேளை புதிய அரசியலமைப்பு யோசனை, எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்ப்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பத்தரமுல்லையில் இடம்பெற்ற அரசியலமைப்பு தொடர்பான மாநாட்டில் குறிப்பிட்டார்.



## ஜனாதிபதியின்... (4ம் பக்கத் தொடர்)

மஹிந்த ராஜபக்ஷவினுடைய தலைமைத்துவத்தில் கீழ் நிலைக்கு நகர்த்தப்பட்டு வந்த கட்சியின் பிரதேச மட்ட உறுப்பினர்கள் மேற்படி சிங்கள பௌத்த பின்புலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.

கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு தேசிய நல்லிணக்கம் தொடர்பில் விழிப்புணர்வூட்ட வேண்டுமெனில் அத்தகைய தலைமைத்துவங்களால் செதுக்கப்பட்ட கிராமிய மட்டத்தலைமைகள் மாற்றப்பட வேண்டும். அவ்வாறே அம் மக்களிடையே தாக்கம் செலுத்தி வருகின்ற விகாரைகளது நிலைப்பாடுகளும் மாற்றிக்கொள்ளப்பட வேண்டும். இவற்றை வெற்றி கொள்வதற்கு கட்சியின் தலைமைப் பதவியை மாத்திரம் பொறுப்பேற்றால் போதாது. தேசிய நல்லிணக்கம் தொடர்பில் தான் வகிக்கும் நிலைப்பாட்டை ஒரே தொனியில் கீழ் மட்டத்திற்கு சொல்லக்கூடிய பலம் பொருந்திய அணியொன்றை கட்சியின் கீழ் மட்டத்திலிருந்து கட்டியெழுப்பா விட்டால் அச்சிந்தனை கனவொன்றாக மாத்திரம் அமைந்துவிடும். கொள்கையளவிலான ஒருமைப்பாடொன்றிற்கு வருவதனூடாகவே இதனைச் சாத்தியப்படுத்திக் கொள்ளலாம்.

அதுவல்லாமல் அமைச்சுப் பதவிகளையோ அல்லது வேறு அன்பளிப்புக்களையோ வழங்குவதனால் இதனை செய்ய முடியாது என்பதை 100 நாள் ஆட்சி நிலவிய காலப்பகுதி தொட்டு இன்றுவரை கடந்து வந்த காலங்களில் நன்றாக ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

இந்நாடு முன்னேறிச் செல்வதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கின்ற இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது போன்ற முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கமும் ஒன்றிணைந்து வியூகங்களை வகுத்து செயல்படுவது அவசியமாகிறது.

## தற்போதைய அரசியலமைப்பு... (7ம் பக்கத் தொடர்)



இணைப்பு குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியிடம் ஒரு அறிக்கையும் பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கையையும் சமர்பிக்கவுள்ளோம். பாராளுமன்றத்திலேயே அரசியலமைப்பு உருவாக்கப்படுகிறது. அது 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய அரசியலமைப்பு அதிகாரத்தின் கீழாலேயே புதிய அரசியலமைப்பு சட்டபூர்வமாக்கப்பட வேண்டும். அது கூடுதலான வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் மக்கள் கருத்துக் கணிப்பிற்கு விடப்படும்.

**★ தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் மக்கள் எத்தகைய தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளார்கள்?**

தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக பல யோசனைகளை மக்கள் முன்மொழிந்துள்ளார்கள். அவை தொடர்பில் நாம் இன்னும் கலந்துரையாடவில்லை. ஏப்ரல் முதலாம் திகதியின் பின்னரே நாம் கலந்துரையாடி எமது பரிந்துரை என்ன என்பதை அறிவிப்போம்.

**★ நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் மக்கள் எவ்வாறான கருத்துக்களை பதிவுசெய்துள்ளார்கள்?**

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் மூன்று கருத்துக்கள் பலமானதாக உள்ளன. நிறைவேற்று அதிகாரம் வேண்டும் என்று ஒரு சிலரைத் தவிர வேறு எவரும் கூறவில்லை. நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டுமென அதிகளவானோர் கருத்து கூறியுள்ளனர்.

இன்னும் சிலர் நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கத் தேவையில்லை; 19ஆம் திருத்தத்திற்கூடாக சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. எனவே அதிலுள்ள இன்னும் சில அதிகாரங்களை குறைத்து விட்டு அம்முறையை தக்கவைத்துக் கொள்ளுமாறு சிலர் தங்களுடைய அபிப்பிராயங்களை முன்வைத்துள்ளனர்.

**★ தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் எவ்வாறான மாற்றங்களை கோருகிறார்கள்?**

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாகவும் பல கருத்துக்கள் முன்மொழியப்பட்டுள்ளன. விகிதாசார முறையையும் தொகுதிவாரி முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையிலான தேர்தலையே கூடுதலானோர் வேண்டுகிறார்கள்.

**★ 1978 அரசியலமைப்பில் மத உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் அது இல்லை. புதிய அரசியலமைப்பில் அது எவ்வாறு தகவமைக்கப்படவுள்ளது?**

புதிய அரசியலமைப்பிற்கூடாக அவ்வுரிமைகளை இன்னும் பலமானதாக மாற்றுவதற்கே தீர்மானிக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் தங்களுடைய மதத்தை பின்பற்றுவதற்குள்ள சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய யாப்பிற்கூடாக அது இன்னும் பலமான முறையில் உறுதிப்படுத்தவுள்ளோம்.

**★ புதிய அரசியலமைப்பு மாற்றம் வெற்றியளிக்குமா?**

நிச்சயமாக, புதிய யாப்பு உருவாக்கம் வெற்றியளிக்கும் என நாம் நம்புகிறோம். மக்களுடைய கருத்துக்களை பெற்று அதனை முன்வைக்கவே எமக்கு முடியும். யாப்புருவாக்கும் பணி பாராளுமன்றத்திடமே உள்ளது. மக்களுடைய அடிப்படை உரிமைகள் தொடர்பில் கடந்த காலப்பகுதியில் இலங்கை பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது. அந்நிலையிலிருந்து கரைசேர்வதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தப்பட வேண்டும் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

அமெரிக்காவின் அரசியலமைப்பு 200 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இந்தியாவின் அரசியலமைப்பு 1950 தொடக்கம் அமுலில் உள்ளது. அக்காலப்பகுதியில் நாம் மூன்று யாப்புக்களை உருவாக்கியுள்ளோம். ஆனாலும் அவை பலவீனமானது என்பதையே நிரூபித்துள்ளது. பல காலம் நீடிக்க கூடிய யாப்பொன்றின் தேவையும் இன்று உணரப்பட்டுள்ளது.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 13 இதழ்கள் | ரூபா 650.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 26 இதழ்கள் | ரூபா 1300.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline 077 9307560 | People's Bank A/c [illegible] (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி சுவர்க்கம் செல்லலாம்?



ஓர் ஆசிரியை தனது இரண்டாம் வகுப்பு மாணவர்களிடம், நான் எனது வீடு, வாகனம் அனைத்தையும் விற்றுவிட்டு, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை பள்ளிவாசலுக்கு கொடுத்தால் சுவர்க்கம் செல்வேனா? என்று கேட்டாள்.

மாணவர்கள் அனைவரும் இல்லை என்றார்கள்.

மீண்டும் ஆசிரியை, நான் ஒவ்வொரு நாளும் பள்ளிவாசலுக்கு சென்று, அதனை மிகவும் தூய்மையாக வைத்துக்கொண்டால் நான் சுவர்க்கம் செல்வேனா? என்றாள். அதற்கும் மாணவர்கள் அனைவரும் இல்லை என்றார்கள்.

அப்படியாயின் என்ன செய்தால் சுவர்க்கம் செல்லலாம் எனக் கேட்டாள் ஆசிரியை. அதற்கு ஒரு மாணவன் எழுந்து, நீங்கள் இறந்தால் தான் சுவர்க்கம் செல்ல முடியும் என்றான்.

# அன்புச் சங்கிலி

ஒரு இளைஞன் தனது பழைய காரில் சென்று கொண்டிருந்தான். அப்போது பாதையின் ஓரத்தில் ஓர் ஆடம்பர காரின் அருகில் ஒரு பெண் நின்றுக் கொண்டிருந்தாள். அவள் பாதையில் செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் கையை நீட்டிக் கொண்டிருந்தாள். இளைஞன் அவளது காருக்கு அருகில் தனது காரை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்றான்.

நான் பிரையன். உங்களுக்கு ஏதும் உதவிகள் வேண்டுமா என்று கேட்டான். அவள் தனது காரின் டயரில் காற்று இறங்கிவிட்டது என்றும் மேலதிக டயரை மாற்றித் தருமாறும் கேட்டாள். அவளது முகத்தில் களைப்பு இருந்தது. நீண்ட நேரமாக காத்திருந்திருக்கிறாள் என்பதும் புரிந்தது. உடனே இளைஞன் செயலில் இறங்கினான். காரின் டயரை கழற்றி, மற்றைய டயரை பொருத்தினான். ஒரு சில நிமிடங்களிலே வேலை முடிந்துவிட்டது.

அவள் அவனுக்கு நன்றி கூறினாள். உனது வேலைக்கு நான் எவ்வளவு பணம் தரவேண்டும் என்று கேட்டாள். அதற்கு இளைஞன், நீங்கள் உண்மையாக எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தால் இன்னொரு தடவை யாருக்கேனும் உங்களது உதவி தேவைப்பட்டால் அவருக்கு உதவி செய்யுங்கள். அப்போது என்னை நினைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, அவன் விடை பெற்றுச் சென்றான்.

அன்று மாலை அப்பெண்மணி ஓர் உணவகத்திற்கு சென்றாள். அங்கு அவளுக்கு உணவு பரிமாறுவதற்காக சுமார் எட்டு மாத கர்ப்பிணி ஒருத்தி வந்தாள். அவளைப் பார்த்தவுடனே அவளது ஏழ்மை புரிந்தது. இல்லாவிட்டால் இந்த நிலமையிலும் வந்து தொழில் புரிவாளா என நினைத்தாள். அவள் சாப்பிட்டு முடித்தாள். உணவு பரிமாறியவள் கட்டண பட்டியலை கொண்டு வந்து கொடுத்தாள். அவளிடம் பணத்தை கொடுத்தாள். அவள் மீதிப் பணத்தை எடுத்துக் கொண்டு வரும் போது அப் பெண்மணியைக் காணவில்லை.

மேசையின் மீதிருந்த தாளில், மீதிப்பணத்தையும் இந்தப் பணத்தையும் நீயே வைத்துக்கொள். இன்று காலை எனக்கு ஓர் இளைஞன் உதவினான். அது போன்றே இப்போது நான் உனக்கு உதவுகிறேன். நீயும் இந்த உதவியை உன்னோடு சுருக்கிக் கொள்ளாதே. உன்னிடம் யாரேனும் உதவி கேட்டால் உனக்கு முடிந்த உதவியை செய்துவிடு. இந்த அன்புச் சங்கிலியை தொடர்ந்து கொண்டு செல்வோம் என்றிருந்தது. அந்த தாளின் கீழால் இன்னும் சில ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

அன்று அவள் நேரகாலத்துடனே வீட்டுக்குச் சென்றாள். தனக்கு மிகவும் தேவையான நேரத்தில் எதிர்பாராமல் கிடைத்த உதவியை நினைத்து அவள் ஆச்சரியப்பட்டாள். தனது கணவனுக்கும் இவ்விடயம் மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதால் அவனது வருகையை எதிர்பார்த்து இருந்தாள்.

student @ மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

# பகிர்ந்துகொள்ளல்



ஒரு மனிதர் அழகான, புதிய வீடொன்றை வாங்கினார். அவ்வீட்டைச் சூழவும் அழகிய பூந்தோட்டம் ஒன்றும் காணப்பட்டது. அவ்வீட்டுக்கு பக்கத்தில் ஒரு பழைய வீட்டில் முதியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அந்த முதிய மனிதர் தனது புதிய அயல் வீட்டுக்காரருக்கு எப்போதும் தொல்லைகள் தருபவராக காணப்பட்டார். ஒவ்வொரு நாள் காலையிலும் புதிய வீட்டு வாசலில் குப்பைகளையும் அழுக்குகளையும் அவர் போட்டு வைப்பார்.

எனினும், புதிய வீட்டில் வாழும் மனிதர் அவரோடு சண்டையிடவோ, அது பற்றி கேட்கவோ முற்படவில்லை. ஒரு நாள் காலையில் எழுந்த புதிய வீட்டு மனிதர் தனது வீட்டுக்கு முன்னால் ஒரு கூடையில் அழுக்குகள் கொண்டு வந்து வைக்கப்பட்டிருப்பதை கண்டார். அவர் அக்கூடையில் உள்ள குப்பைகளை கொட்டிவிட்டு, அதனை மிக நன்றாக கழுவினார்.

பின்னர், தனது வீட்டிலிருந்த மிகச் சிறந்த அப்பிள்களை அதனுள் இட்டு, அக்கூடையை எடுத்துக்கொண்டு தனது அயல் வீட்டிற்கு சென்று கதவைத் தட்டினார். வீட்டிற்குள் இருந்த முதியவர் இன்று எப்படியும் சண்டைக்குதான் வந்திருப்பான் என்ற எண்ணத்துடன் கதவைத் திறந்தார். எனினும், புதிய வீட்டு மனிதர் அப்பிள் கூடையை அவரிடம் நீட்டி, பணக்காரர் என்றால் தன்னிடம் இருப்பதை மற்றையவர்களிடம் பகிர்ந்துக்கொள்பவர்தான் எனக் கூறினார். முதியவருக்கு வார்த் தைகள் எதுவும் வரவில்லை.

# நீங்களா?

ஒரு நாள் மாலை நேரம் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தேன். எனது வீட்டுக்கு செல்லும் பாதை சற்று இருளானது. ஆள் நடமாட்டம் குறைவாகவே இருக்கும். திடீரென்று ஒரு பெண்ணின் குரல் ஒதுக்குப் புறமான ஓர் இடத்திலிருந்து கேட்டது. யாரோ ஒரு பெண் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அவள் போராடும் சத்தமும் உதவி கேட்டு அலறுவதும் கேட்டது.

நான் சிறிது நேரம் யோசித்தேன். நான் சத்தம் வரும் இடத்திற்கு சென்று உதவுவதா? அவ்வாறு உதவினால் நான் ஆபத்திற்குள் சிக்கிக் கொள்வேனோ என பல எண்ணங்கள் என்னுள் தோன்றின. அந்தப் பெண்ணின் குரல் மிகவும் தாழ்ந்துவிட்டது. இதற்கு மேலும் என்னால் யோசித்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, சத்தம் வந்த பிரதேசத்திற்கு ஓடினேன்.

ஒருவனின் பிடிக்குள் யுவதியொருவள் சிக்கியிருந்தாள். நான் அவனை இழுத்து எடுத்தேன். அவன் என்னைத் தாக்கினான். நானும் விடவில்லை. சிறிது நேர போராட்டத்திற்கு பின்னர் அவன் தப்பியோடிவிட்டான். அந்த யுவதி ஒரு மரத்தின் பின்னால் மறைந்து எட்டிப்பார்த்தாள். இருளாக இருந்ததினால் அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவள் மிகவும் பயந்திருப்பாள் என்பது நிச்சயம். எனவே, நான் தூரத்தில் இருந்தே அவளுடன் பேசினேன்.

நீங்கள் பயப்பட வேண்டாம். அவன் ஓடிவிட்டான். அவசரமாக வீட்டிற்கு போய் சேருங்கள் என்றேன். சிறிது நேரம் அவளிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. பின்னர், அவள் மெதுவாக கேட்டாள்: வாப்பா, நீங்களா? இப்போதுதான் எனக்கு அவளை அடையாளம் காண முடிந்தது. அவள் எனது கடைசி மகள். மேலதிக வகுப்புக்குச் சென்று வீட்டுக்கு திரும்பியிருக்கிறாள்.

# துயரத்தில் விழயும் இரவல் இரவுகள்

ஆயிரத்தொரு அரேபிய இரவுக்கதைகளை
பெர்ஸியாவின் கோட்டைக்குள் அமர்ந்து கொண்டு
ஒருத்தி உனக்குச் சொல்லிக் கொண்டிருப்பாள்.
உனக்குள் இருக்கின்ற உயிர்ப்பயத்தை
அங்கேயே புதைத்து விட்டு சுவர்களில்
அப்பியிருக்கும் சுவாரஷ்யத்தை
நீ அப்போது அள்ளிப்பூசிக் கொள்ளலாம்.
கதைகளைச் சொல்ல முனைகின்ற ஷஹராஜாதாவை
மாத்திரம் நீ நன்றாக கவனித்துக் கொண்டிரு.
அவள் உனக்கும் அவளுக்கும் மட்டுமன்றி
ஒட்டுமொத்தமானவர்களுக்கும் உயிருக்கான
உத்தரவாதத்தை ஒவ்வொரு நாளும்
தந்து கொண்டிருப்பாள்.
அல்லது அதே இடத்தில் நாளை
நீ உட்கார்ந்து கொண்டு கதை சொல்லும்
நிலையை உனக்கு ஏற்படுத்தி விடுவாள்.
அந்த உரிமையை பெர்ஸியா பேரரசின்
மன்னனிடம் நீயே கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.
இன்றைய இரவில் கொலை செய்யப்பட்ட
உனது கனவுகளை தூக்கி வீசி விட்டு
இந்த நடுநிசியிலும் கடுமையாக வீசுகின்ற
உனக்குள் புதைந்திருக்கும் துயரத்தை மீண்டும்
உனது முகத்தில் கொண்டு வந்து விட்டாய்.
போர்வையால் இழுத்திப் போர்த்துக் கொள்.
இனிமேலும் உனது ஒவ்வொரு இரவும்
துயரங்களை சுமந்த படியே விடியப் போகிறது.

-நஸார் இஜாஸ்

# உம்பர்ரத்தோ இக்கோ காலமானார்

## [1932 - 2016]



தமிழ்ச் சிற்றிதழ் சூழலில் 1990களின் இடை, இறுதிப் பகுதிகளில் அதிகம் விவாதிக்கப்பட்ட ஆளுமைகளில் உம்பர்த்தோ இக்கோவும் ஒருவர். ஃபூக்கோ, தெரிதா, சஸூர் என்று அடுக்கப்பட்ட சிந்தனையாளர்களின் பெயர் வரிசையில் இக்கோவும் இருந்தார். அவரது ஆக்கங்கள் சில மொழிபெயர்க்கப்பட்டன. சில விவாதிக்கப்பட்டன. இந்த அறிமுகத்தினூடே ஒரு வாசகனாக நான் கண்டடைந்த இக்கோ வேறு ஒருவராக இருந்தார்.

குறியீட்டியல் அறிஞர், சிந்தனையாளர், நவீனக் கோட்பாட்டாளர் என்ற பன்முகங்கள் உம்பர்த்தோ இக்கோவுக்கு உண்டு. இந்தத் தோற்றங்கள் ஓர் எளிய வாசகனான என்னை வெருட்டியபோது அவரது இலக்கிய முகம் நெருக்கமானதாக உணரச் செய்தது. அவரது நாவல்களும் இலக்கியக் கட்டுரைகளும் வாசிப்புக்கு உவப்பானவையாக இருந்தன.

இக்கோவின் இரண்டு நாவல்கள் புகழ் பெற்றவை. ரோஜாவின் பெயர் (Name of the Rose) ஃபூக்கோவின் ஊசல் (Foucault's Pendulam) ஆகிய இரண்டும் நாவல் பற்றிய வழமையான கருத்துக்களைப் புரட்டிப்போட்டன. நாவல் வடிவங்களைப் பற்றிய முன்தீர்மானங்களை மாற்றின. 'ரோஜாவின் பெயர்' ஒரு துப்பறியும் கதை. 'ஃபூக்கோவின் ஊசல்' ஒரு புதிரவிழ்ப்பு அலசல். நான் வாசித்த மற்றொரு நாவலான "The Island of the day before' பயணக் கதையின் சாயல். 'நான் எப்படி எழுதுகிறேன்?' என்ற பிற்காலக் கட்டுரையில் (On Literature - பக்: 302) 'இலக்கியத்தில் சோதனை செய்து பார்க்கவே' நாவல்களை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் அந்தச் சோதனைகள் வாசகனைச் சோதிப்பதாக அன்றி, ஈர்ப்பதாகவே அமைந்தது இக்கோவின் மேதைமைக்குச் சான்று.

இக்கோவின் அபாரமான நாவல்களை விடவும் அவரை இலக்கிய விமர்சகராகவும் வாசிப்பு நேசராகவும் காட்டும் இரு நூல்கள் என்னை மிகவும் ஈர்த்தவை. திரும்பத்திரும்ப வாசிக்க வற்புறுத்துபவை. இக்கோவின் கட்டுரைகளும் உரைகளும் அடங்கிய On LiteratureE® அவரது உரையாடல் தொகுப்பான "This is not the end of the Book' உம் முதல் நூல் எழுத்தின் பல்வேறு சாத்தியங்களையும் நுட்பங்களையும் புதிய கண்ணோட்டத்தில் அணுகுகின்றன. சக எழுத்தாளரும் பதிப்பாளருமான ழான் க்ளாட் தேரீருடன் இக்கோ மேற்கொண்ட நீண்ட உரையாடல் தொகுப்பே இரண்டாவது நூல். மின்னணு ஊடகங்களின் காலத்தில் புத்தகம் உயிர் பிழைத்திருக்குமா என்ற கேள்வியை முன்வைத்து நடக்கும் உரையாடல் விரிந்து இலக்கியம், அதன் தேவை - நிலைநிற்பு, நூலகம், பண்பாடு எனப் பல பொருட்களைப் பேசுகிறது. 'புத்தகம் என்பது ஒரு பண்பாட்டின் ஆதாரமான பொருள். அது வேறு வடிவத்துக்கு மாறும்; ஆனால் அழியாது. புத்தகம் ஒருபோதும் இறப்பதில்லை' என்ற உரையாடல் முடிவு எனக்களித்த பரவசத்தை எளிதில் சொல்லிவிட முடியாது.

- சுகுமாரன்

நன்றி : காலச்சுவடு

# சிறந்த ஒன்று

## மனுஷ்ய புத்திரன்



'எப்போதும்
உன்னிடம் இருப்பதிலேயே
மிகச்சிறந்த ஒன்றைத்தான்
எனக்குத் தருகிறாய்' என்றான்

'உன்னிடம் இருப்பதிலேயே
மிகச்சிறந்த அன்பை
மிகச்சிறந்த தருணத்தை
மிகச்சிறந்த துயரத்தை
மிகச்சிறந்த சொல்லை
எனக்குத் தருகிறாய்' என்றான்

'அத்தகைய சிறந்த ஒன்றை
உனக்கு நீயே கூட
அளித்துக்கொள்ள முடியாது
இல்லையா?
அவன் இதைச்
சொன்னபோது
நான் வெளியே உக்கிரமாக
பெய்து கொண்டிருந்த
மழையை
சலனமின்றி கேட்டுக்
கொண்டிருந்தேன்.

# பட்டாம் பூச்சிக் கனவுகள்

நூல் அறிமுகம்

மொழிபெயர்ப்புச் சிறுகதைகளின் தொகுப்பாக அண்மையில் வெளிவந்த நூல் இது. அஷ்ரப் சிஹாப்தீன் மொழிபெயர்த்த 8 சிறுகதைகள் இத் தொகுப்பில் அடங்கியுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை கிரிக்கட்டின் எதிர்காலம்

# சிந்திக்க வேண்டிய தருணம்



1980களில் பந்துல வர்ணபுர தலைமையிலான அணியொன்று இலங்கை கிரிக்கட் சபையின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தென்ஆபிரிக்க போட்டிதொடரொன்றில் கலந்து கொண்டது. அப்போட்டியில் பங்குபற்றிய சகல வீரர்களுக்கும் கடுமையான போட்டித்தடை விதிக்கப்பட்டது. அவர்களுடைய வாழ்நாளில் மீண்டும் இலங்கை அணியில் விளையாடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. அவ்வகையில் கடுமையான ஒழுக்காற்றுச் சட்டங்களுக்கு மத்தியில் முன்நகர்ந்த இலங்கை கிரிக்கட் துலிப் மென்டிஸ், ரோய் டயஸ், ரன்ஜன் மடுகல்ல போன்ற வீரர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இலங்கை அணியை அவர்கள் உலகின் முன் வெற்றி வாகை சூடிய அணியொன்றாக மாற்றியமைத்தார்கள். அவர்கள் தமது திறமைகளை சுயதேவைகளுக்காக வெளிப்படுத்தவில்லை. நாட்டின் கௌரவத்திற்காக விளையாடினார்கள். துலிப் மென்டிஸ் தலைமையில் ஓரணி உணர்வுடன் விளையாடினார்கள். இலங்கை கிரிக்கெட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. 1990களாகும் பொழுது இலங்கை கிரிக்கட் அணியின் தலைமைத்துவம் அர்ஜுனவின் கைக்கு மாறியது. அரவிந்தடி சில்வா உப தலைவரானார். இவர்களுடன் போட்டி மனப்பான்மை, கட்டுப்பாட்டுடன் கூடிய பல வீரர்கள் இலங்கை அணியில் காணப்பட்டார்கள். பல போட்டிகளை வெற்றி கொண்டார்கள். இலங்கை உலக அளவில் பிரபலமானது. 1996ல் இலங்கை அணி உலகக்கிண்ணத்தை சுவீகரித்தது. இன்றைய வீரர்களுக்கு உள்ளது போன்ற வசதி வாய்ப்புகள் அன்றைய வீரர்களுக்கு இருக்கவில்லை. அவர்களும் அதனை எதிர்பார்க்கவில்லை.பணத்திற்காக ஆட்ட நிர்ணயங்களில் ஈடுபடவுமில்லை.

1996 உலகக்கிண்ண வெற்றியைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கட்டில் துரதிஷ்டமான காலம் உருவெடுத்தது. முழு உலகும் இலங்கை அணியை நோட்டமிட்டது. இலங்கை கிரிக்கட் சபை பணம் கொழிக்கும் நிருவனமானது. கிரிக்கட்டில் வெளிப்படையாகவே அரசியல் சாயம் கலக்க ஆரம்பித்தது. வீரர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பதிலாக அமைச்சர்கள் உள்ளிட்ட கிரிக்கட் நிருவன அதிகாரிகள் நிதிமோசடிகளில் ஈடுபடலாயினர். வீரர்கள் வேறுவழி முறைகளுக்கூடாக முதலீட்டுவதற்குரிய சூழலொன்று உருப்பெற்றது. கிரிக்கட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 20-20 போட்டிகளுக்கூடாக கிரிக்கட்டின் உயிர்ப்புத்தன்மை குன்ற ஆரம்பித்தது. போட்டியின் ஆக்ரோஷங்களும் விறுவிறுப்புகளும் அதிகரித்தன. தற்பொழுது இடம்பெற்று வரும் 20-20 உலகக்கிண்ண போட்டியில் தொடரிலிருந்து இலங்கை அணி வெளியேற்றப்பட்டுள்ளது.

உண்மையில் இன்று இலங்கை கிரிக்கட் எவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது? விளையாட்டு அமைச்சர் கிரிக்கட் சபை பரிபாலனம் தொட்டு வீரர்கள் வரையில் இன்று பல பிரச்சினைகள்புரையோடிப்போயுள்ளன. இன்று எமது கிரிக்கட் அணிக்கு நிலையான தலைவர் ஒருவர் உள்ளாரா என்கின்ற கேள்வி எழுகிறது. அன்று எமது தலைவர் அர்ஜுன என்பதையும் உப தலைவர் அரவிந்த என்பதையும் எல்லோரும் அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால், இன்றைய தலைவர் மெதியூஸா?, மலிங்கவா?, சந்திமாலா? என்கின்ற விடயம் சரியாக தெரிவதில்லை அந்தளவுக்கு தலைவர்கள் மாற்றப்படுகிறார்கள்.தற்போதைய அணியில் உப தலைவர் ஒருவர் இருக்கிறாரா என்று கூட தெரியாது.

இத்தகைய இக்கட்டில், தான் விளையாடுவது தனக்காகவேண்டியே அல்லாமல் நாட்டிற்காக வேண்டியல்ல என்பதாக மலிங்க குறிப்பிடுகிறார். இத்தகைய சுய நலம் பிடித்த ஒருவர் எவ்வாறு தலைவராவது? முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக நடுவர்கள் குற்றம் சுமத்தியபொழுது அர்ஜுன தனது கிரிக்கட் எதிர்காலத்தை ஒரு புறத்தில் வைத்துவிட்டு முரளிக்காக குரல் கொடுத்தது நாட்டின் அபிமானத்தை முன்னிலைப்படுத்தியாகும். உண்மையான தலைவர் ஒருவர் அவ்வாறுதான் செயற்படவேண்டும் என்பதை நிரூபித்திருந்தார். இன்றைய வீரர்களின் நிலைமை மாறிப்போயுள்ளது. சங்கக்கார, மஹேல போன்றோர் திறமைகளை வெளிப்படுத்தி அர்ஜுன போன்றோரின் பெயரை முன்னெடுத்துச் சென்றார்கள் ஆனால் இன்று வீரர்கள் பணத்திற்கு விலை போகும் பண்டமாக மாறியுப்போயுள்ளனர். தற்பொழுது எமது வீரர்களுக்கும் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

தற்பொழுது இலங்கையிலும் சூதாட்டகாரர்கள் தொழிப்படு கிறார்கள். அதில் ஒருசிலர் அரசியல்வாதிகள். அரசியல் வாதிகள் அரசியல் தேவைகளுக்காகவேண்டி கிரிக்கட்டை பயன்படுத்துவதனால் வீரர்கள் சுயநலமிகளாக மாறியுள்ளனர். பணத்திற்கு அடிமைப்பட்டு ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடும் நிலை பாரதூரமாகிப்போயுள்ளது. துலிப், ரோய் டயஸ், மடுகல்ல, மஹாநாம, குருசிங்க, அர்ஜுன, முரளி, சனத், சங்கா, மஹேல போன்றவர்கள் உலக அளவில் தூக்கி நிமிர்த்திய கிரிக்கட்டின் எதிர் காலம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஒழுங்கு மிக்க வீரர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைத்து அணி உணர்வை மெருகூட்டச்செய்து நாடுபற்றிய அபிமானத்தை சொல்லிக்கொடுத்து வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கு பதிலாக அரசியல் வாதிகள் கிரிக்கட்டை ஒரு வியாபாரமாக மாற்றியுள்ளமையின் விபரீதத்தையே நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

இந்நிலைமையின் மூலம் நாட்டின் கௌரவத்தைச் சிந்திக்காத நாட்டுப்பற்றற்ற வீரர்களே உருவாவார்கள் என்பது மலிங்க போன்றோருக்கூடாக வெளிப்படையாக தென்பட ஆரம்பித்துள்ளது.


## புதிய மாணவர் அனுமதி 2016

### பாதிஹ் கல்வி நிறுவனம்
### Fathih Institute of Sri Lanka

**இவ்வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த ஆண் மாணவர்களுக்கான ஐந்து வருட கற்கைநெறி**

மொழிகளுக்கான கற்கை நெறி (இரண்டு வருடங்கள்)

- அரபு, ஆங்கிலம், சிங்களம்.
- உயர்தர கலைப்பிரிவு
- தர்பியா ஆன்மீக பயிற்சி நெறி
- தகவல் தொழிநுற்பம் (IT)

இஸ்லாமிய கற்கை நெறிகள் பீடம் (மூன்று வருடங்கள்)

- Department of Quran & Sunnah
- Department of Fiqh & Usoolul Fiqh
- Department of Usooluddeen & Comparative Religion

(இம் மூன்று பிரிவுகளில் ஒன்றை தெரிவு செய்யலாம்)

- பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்புக்காக மாணவர்கள் தயார்படுத்தப்படுவர்

பரிசீலிக்கப்படும் ஆவணங்கள்

- கா.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு (மூலப்பிரதி)
- தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்
- பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி) ஏனைய சான்றிதழ்கள், நற்சான்றிதழ் பத்திரம் (கிராம சேவையாளரால் வழங்கப்படக் கூடியது)

தகைமைகள்

- கா.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம், ஆங்கிலம், இஸ்லாம் உட்பட 06 பாடங்கள் சித்தி பெற்று கா.பொ.த (உ/த) க்கு தகுதி பெற்றிருத்தல்
- 17 வயதிற்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்
- நன்னடத்தை, தேகாரோக்கியம் உடைவராய் இருத்தல் வேண்டும்

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பொது அறிவுப் போட்டி பரீட்சை ஒன்றுக்கும் உட்படுத்தப்படுவார்.

நேர்முகப் பரீட்சை: 2016 -ஏப்ரல்- 16-17 காலை 09.00 மணி
அனுமதிக் கட்டணம்: Rs.15000/= மாதாந்தக் கட்டணம்: Rs.6000/=

THE DIRECTOR, FATHIH INSTITUTE OF SRI LANKA
BANDARANAYAKE PLACE, THIHARIYA
TEL.033 22 89 192, 077 03 90 559
EMAIL FATHIH.ISL@GMAIL.COM
Reg. No. MRCA/13/1/PAS/14



**2015 GCE O/L**

## இன் பின்னர் உங்களது
**பெண்பிள்ளைகளை பூரணத்துவமான இஸ்லாமிய ஆளுமையுள்ளவர்களாக உருவாக்க.......**

## ஓர் உயர் இஸ்லாமிய கலாபீடம்
**இலங்கையில் ISO தரச் சான்றிதழ் பெற்ற ஒரே இஸ்லாமியக் கலாபீடம்**

- ★ ஆழமான இஸ்லாமியக் கலைகளோடு பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு.
- ★ தகவல் தொழிநுட்பத்தில் Diploma (NVQ Certificate).
- ★ அறபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சி.
- ★ தையல், மனையியல், வீட்டுத்தோட்ட முகாமை மற்றும் இஸ்லாமிய முன்பள்ளி, நவீன அனுகுமுறைகளுடன் குர்ஆன் மத்ரஸா நடாத்தும் பயிற்சிகள்.
- ★ குடும்ப வாழ்க்கை, குழந்தை வளர்ப்பு பற்றிய வழிகாட்டல்கள், விஷேட பயிற்சிகள்.
- ★ பயிற்சியின் இடையில்/முடிவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்கான வாய்ப்புக்கள்.

**இவையனைத்தையும் உள்ளடக்கியதொரு முழுமையான பாடத்திட்டம்.**

- பாதுகாப்பான மனோரம்மியமான கிராமிய சூழலில் கல்வி, மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் இலவசம்.
- உணவுச் செலவுகளுக்காக மாத்திரம் ஒரு தொகை மாதாந்தம்.

நேர்முகப் பரீட்சைக்கான தகைமைகள்

- 01.01.1999 இற்குப் பின்னர் பிறந்திருத்தல்.
- 2015 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.
- அல் குர்ஆனை சரளமாக ஓதும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
- தேகாரோக்கியமுடையவராக இருத்தல்.

**HADHIYA ISLAMIC INSTITUTE**
**KUREEKOTUWA - PAHAMUNE**
ISO 9001 : 2008 CERTIFIED EDUCATIONAL INSTITUTE




**காலம்: 05.04.2016 மு.ப 9.00 மணிக்கு இடம்பெறும்**

கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த) பெறுபேற்றுச் சான்றிதழ்.
3. தேசிய அடையாள அட்டை

மேலதிக தகவல்களுக்கு:
072 4189712
077 9328233
071 5561317
(காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை)

Route map
1. கொழும்பு (05) → நாரம்மல → கிளிம்பொள → குரீகொட்டுவ
2. குருநாகல் → நாரம்மல → கிளிம்பொள → குரீகொட்டுவ
3. வாரியபொல → கிளிம்பொள → குரீகொட்டுவ


Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org